ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவஹு ஐப்பசிமீ உருவ (10-11-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—கஅ.

## தோத்திரம்.

ஐந்துவகை யாகின்ற பூதபே தத்தினல் ஆகின்ற ஆக்கை நீர்மேல்
அமர்கின்ற குமிழியென நிற்கின்ற தென்னநான் அறியாத கால மெல்லாம்
புந்திமகி ழுறவுண் டுடுத்தின்ப மாவதே போந்தநெறி யென்றி ருந்தேன்
பூராய மாகநின தருள்வந் துணர்ந்தஇவை போனவழி தெரிய வில்லை
எந்தநிலை பேசினும் இணங்கவிலை யல்லால் இறப்பொடு பிறப்பை யுள்ளே
எண்ணினல் நெஞ்சது பகீரெனுந் துயிலுறு திருவிழியும் இரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகான தங்கம்இவை யென்கொலோ சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே சின்மயா னந்த குருவே.

—தாயுமான சுவாமிகள்

# தீபாவளிக் கடைவீதிக் காட்சி.

(M. C. "முருகவரோதயன்", ஹரிஜன வாலிப சங்கம்—அல்வாய்)

## விருத்தம்

எங்களா லன்றோ இந்த இருசில மாந்த ரெல்லாந்
தங்களி னற்றம் யாவுந் தகையுடன் மறைக்கின் றாரென்
றங்கவர் செருக்குப் பூண்டே அனுப்பிய புடவை யாவும்
துங்க மதுடன் கடைக டோறுமாய் விளங்கிற் றன்றே. 1

பற்பல நாடு தோறும் பாங்குடன் பிறந்த ஆடை
அற்புத வீதி ஒன்றி லடைந்தவ ணிலங்க நோக்கின்
கற்பனை கடந்த அந்தக் கவினுயர் தேய மெல்லாம்
பொற்புட னெருங்கு கூடிப் பொலிந்தன போலு மன்றே. 2

மீனினை மானுங் கண்ணார் விளங்கிடு மோட்டா ரேறி
வானவர் மகளி ரென்ன வந்தவ ணிறங்கி நெஞ்சம்
போனஅவ் வாடை தம்மைப் பொருள்கொடு வாங்கி அன்பர்
ஆனவர் வரவு நோக்கு மில்லக மடைந்தா ரன்றே. 3

காரினுண் மறைந்து தோன்றுங் கவின்மதி முகத்தார் "மோட்
காரி"னுண் மறைந்து தங்கள் கடிமுக மதனைக் காட்டிச் [டக்
"சீரிய ஆடை வாங்கச் சென்றிலே" மென வருந்தல்
ஆரியங் கலந்த வெங்க ளருந்தமி ழொத்த தம்மா. 4

காவல்சே ருடம்பைக் குத்துங் கருத்தினை நெஞ்சில் வைத்துப்
பூவென மென்மை யுற்ற புடவைகள் பெற்றார் பல்லோர்
மேவிடு வருத்த நோக்கார் மெய்யுறு தொண்ட ரென்னு
மாவலாற் கதரே வாங்கி அடைந்தனர் சிலரே அம்மா. 5

தூண்டிடு முவகை தோற்றித் துகளறு மின்சொல் செப்பி
மாண்டபற் பல துகில்கள் வருபவர்க் களித்த லாலே
வே[illegible]வார் வேண்டு மஃதை விருப்புட னீயு மெங்கள்
ஆண்டவன் செய[illegible]யாக்தா ரளப்பில்வர்த் தகர்கள் தாமே.

செல்வமோ டிளமை ஆண்மை சீரிய பிறவு மெல்லாம்
ஒல்லையின் மாறி மாறி ஒருவரி னீங்கு மென்னும்
நல்லியல் பினை விளக்கி நாட்டுது மெனுங் கருத்தாற்
பல்பல தைய "லெக்த்ரம்" பாங்குடன் சுழன்ற மாதோ. 7

உயிரினை விட்ட யாக்கை ஒருவழிக் கூடித் தொங்கும்
செயிருறு காட்சி போலச் சிறுவர்கள் சிறுமி யர்க்காய்க்
குயிலுறு சட்டை யாவுங் குறுங்கடை இடங்க டோறும்
அயிரமொன் றாகத் தொங்கி அசைந்தன அழகா மன்றே. 8

காணரு முள்ளந் தீயோர் கண்டவர் நகைப்பா ரென்று
காணுறு முளத்த ராகி நவைகெட அலங்க ரித்து
மாணுறக் காட்ட லேபோல் மதிகெடு மது வினங்கள்
பேணுறு போத்தல் தோறும் பிறங்கின சென்ற வன்றே. 9

ஆரா அமுதே அரசேஆ னந்தவெள்ளப், பேராறே மோனப் பெருக்கே பராபரமே.

### …………ஐந்து வருடமாச்சு ஆனால் என்னைக் கல்யாணம்…………

யாழ்ப்பாணம் 6

மல்லாகம் பொலிஸ் கோட்டில் சென்ற ஐப்பசிமாதம் 18-ந்திகதியளவில் உடுவில்வாசியும் சிங்கப்பூர் உத்தியோகத்தருமாகிய ஆறுமுகமென்பவரின் மனைவி செல்லாச்சியைப் பலாத்காரமாகக் கற்பழிக்க எத்தனித்ததாக கந்தரோடை வாசியாகிய தம்பையா-செல்லத்துரை என்பவருக்கு எதிராகத்தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது முறைப்பாட்டுக்காரியாகிய செல்லாச்சிகொடுத்த வாக்குமூலத்தின் சாராம்சம் வருமாறு:-

ஓர்நாள் எதிரி எனது வீட்டின் திண்ணையில் வந்துட்கார்ந்ததின்மேல் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அவர் என்னைநோக்கி "உனதுபுருடன் சிங்கப்பூருக்குச்சென்று 5 வருடகாலமாகியும் ஒருவிதமான தகவலுமில்லாமையால் நீ அவரைவிட்டுஎன்னைக் கல்யாணஞ்செய்துகொள்" என்று சொல்ல நான் "கட்டியபுருஷனைவிடுத்து உன்னை எவ்விதம் வரிப்பது அப்படியாக நான் ஒருபோதும் ஒருப்படேன்" என்றேன். உடனே போய்விட்டார், சிலநாட்களின் பின் அதாவது சம்பவம் நடைபெற்றவன்றுசாயங்காலம் 4-மணியளவில் எதிரி எனது வீட்டிற்குவந்து என்னை ஓர் அறையினுட் தள்ளிக் கதவைப்பூட்ட நான் "ஐயோ! ஐயோ!! என அலறினேன். அப்போது எதிரி எனதுவாயைப் பொத்தியதுடன் சப்தமிடாதபடிபயமுறுத்தினார். பின்னர் அங்கு வந்து கதைத்துக் கொண்டிருந்த எனதுமாமியாரின் சப்தத்தைக்கேள்வியுற்றதும் விதானையை அழைத்துவரும்படி சொல்ல எனது மாமியார் பொலிஸ்விதானையை அழைத்து வந்தார். விதானையும் கதவைத் திறக்கும்படி எத்தனையோதரம் அறிவித்தும் எதிரி திறக்காது ஈற்றில்திறந்தார். உடனே விதானையிடம் வாக்குமூலங் கொடுத்தேன்.

மீண்டுங் குறுக்கு விசாரணையின்போது கூறியதாவது:-

நான் சிங்கப்பூரில் இருந்தபோது யாருடனாவது கள்ளநட்புக் கொண்டிருக்கவில்லை. எனது கணவர் வேறுவிவாகஞ் செய்யவில்லை. எனக்கு ஒரு பிள்ளை இருந்ததுதான் ஆனால் அது இறந்து விட்டது எதிரியும் எனது சொந்தக்காரன்தான் எதிரியை விவாகஞ்செய்து கொள்ளும்படி ஆச்சிக்குட்டியென்பவள் பலமுறையுங் கூறியதுண்டு.

நீதிபதி வழக்கை வருகிற 13-ந் திகதிக்கெனத் தவணையிட்டார். ந-நி.

# காரைதீவில் கொலை

## படலைக்கு முள்ளு

### "விவாகநீக்க வழக்கே கொலைக்குக் காரணம்"

யாழ்ப்பாணம் 4.

ஊர்காவற்றுறைப் பொலீஸ்கோட்டில் காரைதீவு வாசியாகிய S. சங்கரப்பிள்ளை என்பவரைப் பொல்லினால் அடித்தும் கத்தியால் வெட்டியும் கொலைசெய்ததாக அவ்வூர் வாசிகளாகிய S. பொன்னம்பலம் (2) அருணாசலம் (3) மாணிக்கம் முதலியவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு சென்ற 1-ந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக பொலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களும் எதிரி சார்பாக, நியாயதுரந்தரர்கள் திரு. H. R. அரியகுட்டியும், திரு. T. C. இராசரத்தினமும், திரு. சாம், ஏ. சபாபதியும் விவாதித்தார்கள்.

முதலாவதாக, காலஞ்சென்ற சங்கரப்பிள்ளையினது மனைவியாகிய மீனாட்சியென்பவள்கூறிய சாட்சியத்தின் சாராம்சம் வருமாறு:—

"சம்பவம் நடைபெற்ற அன்றைய இரவு நானும் எனது கணவனும் நித்திரையிலாழ்ந்திருக்கும்பொழுது ஏதோ சப்தம் கேட்டது. உடனே நான் விழித்துப் பார்த்தபோது யாரோ நால்வர் 'ரோச்' வெளிச்சம் அடித்தார்கள். அவ்வெளிச்சத்தினுதவியால் பொன்னம்பலம் என்பவரைக் குறிப்புக் கண்டுகொண்டேன். மற்றைய மூவர்களும் யாரென்பது எனக்குத் தெரியாது. அப்போது பொன்னம்பலம் ஓடிவந்து எனது புருஷனை தனது கையில் வைத்திருந்த் கோப்பிக்கத்தியால் வெட்டினார். மற்றவர்களும் பொல்லுகளினால் தாக்கினார்கள். நான் சப்தமிட்டுக்கொண்டு படலைப்பக்கமாக ஓடினேன். அதன் பின்னர் எனது கணவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். ஆனால் அவரது உயிர் வழியிலேயே போய்விட்டது."

இரண்டாவதாக கந்தையாபெண் சுந்தரம் என்பவள் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:—

"நான் காலஞ்சென்றவரது அயலிலேயே வசிக்கிறேன். சம்பவம் நடைபெற்ற அன்றைய இரவு கூக்குரலைக்கேட்டதும் வெகு வேகமாக அவரது படலைக்கு நானும் எனது கணவனும் சென்றோம். அப்படலைக்கு முள்ளுவைத்துக் கட்டியிருந்தபடியால் எனது புருஷன் அம்முள்ளில் வீழ்ந்தார். அப்போது முதலாம் எதிரியாகிய பொன்னம்பலம் ஓடிவந்ததைக் கண்டேன். அவர் காலஞ்சென்றவரது மைத்துனர். திரு. செல்வத்துரையின் மனைவியை செல்வத்துரை சிங்கப்பூரிலிருக்கும்பொழுதே களவாக எடுததுச்சென்றார். சிலகாலத்தின் பின்னரே இது சம்பவத்தைப்பற்றிச் செல்வத்துரை கேள்விப்பட்டார். இருவருட காலத்தின்பின்னர் செல்வத்துரை இங்கு வந்து விவாகரத்து வழக்குத்தொடர்ந்தார். இவ்வழக்கைச் சமாதானமாக்கி வைக்கும்படி சங்கரப்பிள்ளையிடம் பொன்னம்பலம் என்பவர் கேட்க அவர் அதற்கு மறுத்து மற்றப்பக்கமாக உதவிசெய்தார். இவ்வழக்குத் தீர்ந்த சிலநாட்களின் பின்னரே இக்கொலைநடைபெற்றது."

அதன்பின்னர் சுந்தரத்தின் புருஷனாகிய கந்தையாவும், தெய்வானையென்பவரும் மேற்கூறிய சாட்சியத்தையொட்டியே சாட்சியம் கொடுத்தனர்.

இத்துடன் நீதிபதி வழக்கைத் தவணையிட்டார். ந-நி.

# கள்ளுத் தவறணையில் கத்திவெட்டு

யாழ்ப்பாணம் 5,

இன்று யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் சிதாரி வாசியாகிய செல்லையா—அருளப்பு என்பவன் மேற்படி ஊரில் வசிக்கும் அந்தோனி—ஜேம்ஸ் என்பவனை நல்லூரைச் சேர்ந்த தல்லாலைத் தவறணையில் முதுகிலும், கையிலும் கத்தியால் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளி சார்பாக பொலிஸ் உதவிப் பரிசோதகர் மிஸ்ரர் அற்றிக்கலையும், நியாயதுரந்தரர் திரு. வன்னியசூரியரும், எதிரியின் சார்பாக திரு. செல்வரெத்தினமும் விவாதித்தார்கள்.

சின்னையா ஜோசேப் என்பவர் கூறிய சாட்சியாவது:-

"சென்ற செப்டம்பர் மாதம் 5-ந் திகதி கள்ளுச்சேர்த்துக்கொண்டுவந்து தவறணைக்குக் கொடுக்கிறவர்களுக்குக் கணக்குத் தீர்க்கிறதில் சில பிணக்குகள் ஏற்பட்டன, பின் சாயந்தரம் இச்சண்டை நிகழ்ந்தது. இந்த எதிரிக்கு நானும் அடித்தேன். எதிரி வழக்காளிக்கு முதல் வெட்டு முதுகில் வெட்டியபின்தான் தடியை எடுத்துக்கொண்டுபோய் அடித்தேன். அதன்பிறகே கையில்வெட்டினான்."

சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தபோது கூறியதாவது:-

"நான் தவறணையில் கள்ளுவிற்பவன். எதிரியும், வேறு ஆட்களும் கள்ளுச் சீவிக் கொடுப்பவர்கள். தவறணைக் குத்தகைகாரன் பதினாலுநாட் கூலி கொடுக்கவேண்டிய ஆட்களுக்கு பதினொரு நாட்களுக்குமட்டும் கொடுக்க அனுமதித்தார். நானும் அவ்விதமே கணக்கைத்தீர்த்தேன். எல்லோரும் தங்களுக்குரிய கூலிகளை யாதும் கூறாது வாங்கிச் சென்றனர். ஆனால் இவ் எதிரியாகிய அருளப்பு என்பவனே தனக்கு முழுக்கணக்கும் சரிவரத் தீர்க்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டு நின்றான். இதுவே தவறணையில் சச்சரவை யுண்டுபண்ணியது. காயமடைந்தவனது சகோதரன் ஆசீர்வாதமும் கள்ளுச்சேர்த்துக்கொடுப்பவர்களுள் ஒருவன். அவனை அருளப்பு குத்தகைகாரன் தீர்த்த வகைக்கு ஒத்துக்கொண்டதற்காக மிகவும் கோபித்தார். இதில் இருவரும் ஏச்சுப்பட்டுப் பின் சண்டையிட்டனர். நான் இரண்டுதரம்தான் தலையில் தடியால் அடித்தேன். செல்லன் அடித்ததைப்பற்றித்தெரியாது."

அந்தோனி ஜேம்ஸ் கூறியதாவது:-

"சம்பவம் நடந்தவன்று தவறணையிலுள்ள ஓர் கொட்டில் பிடுங்கப்பட்டது. நான் மரந்தடிகளை எடுக்க அங்குசென்றேன். அது எங்களுடையதுதான். அங்கே குத்தகைகாரனுக்கும் சீவல்காரருக்கும் சச்சரவு இருந்தது. நான் எனது சகோதரன் ஆசீர்வாதத்தினுடைய பணத்தைப் பெற்றுக்கொண்டதைக்கண்ட அருளப்பு மிகவுந் தர்க்கித்தான். கடைசியாக உன்னைப் பார்த்துக்கொள்ளுகிறேன் என்றுசொல்லிப் போய்விட்டான். திரும்பிப் பின்னேரம்வந்து நீ பெரிய சண்டியன்போலநடக்கிறாய் என்று கூறிவிட்டுக் கையிலிருந்த கோப்பிக்கத்தியால் முதுகில் கீழிருந்து மேலே கீறினார். அதன்பின் கையில் வெட்டினார். ஜோசேப்பைவிட வேறு ஒருவரும் அருளப்புவுக்கு அடிக்கவில்லை."

ஜோசெப்பைக் குறுக்கு விசாரணைசெய்தபின் தம்பிப்பிள்ளை சாட்சி கூறினான்.

வழக்கு 12-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது. ந-நி.

# இலங்கைத்தேயிலைக்கு விளம்பரம்

உலகில் மிகப் பெரியதென்று கருதப்படும் தேயிலை விளம்பரக் கட்டடவேலை கூடிய சீக்கிரம் முடிவடையும்.

232 அடி நீளமும் 160 அடி உயரமும் உள்ள இக்கட்டிடம் இலங்கைத்தேயிலைவிளம்பரசபையாருடைய செலவில் கட்டப்படுகிறது. இது இரண்டு கோபுரங்களாலும் அவைகளை இணைக்கும் இரண்டு பாலங்களாலும் ஆகியது. முழுதும் திறமான எஃகுச சட்டங்களால் பிணைக்கப்படுகிறது.

இந்தக்கோபுரங்கள்தான் கிழக்கு தேசங்களிலே மிகப் பெரியவை. உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் விளம்பரத்தில் "இலங்கை நல்ல தேயிலைக்குப் பேர்போனது" என்ற பொருளுள்ள ஆங்கில வாக்கியங்கள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு எழுத்தும் 15 அடி உயரமுள்ளது. இரவில் "நியோன டியூப்பு"க்கள்மூலம் நீலம், வெள்ளை என்ற இரண்டு வர்ணங்களில் மேற்படி விளம்பரம் பிரகாசமாகத் தோன்றும். எழுத்துக்கள் ஒவ்வொன்றாகத் தோன்றி மறையும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கடலில் பல மைல்களுக் கப்பாலிருந்தே கப்பல்களிலிருந்து இதைப் பார்க்க முடியுமாம்.

## சிறுவனை ஏமாற்றிய சிங்கம்

மாதகல் சூசைப்பிள்ளை-சிங்கம் என்னும் 14 வயதுச் சிறுவன் அவ்வூர் இரத்தினம் என்னும் 7 வயசுச் சிறுவனை ஏமாற்றி அவனுடைய சகோதரியின் (மார்க்கண்டு மனைவி) தாலிக்கொடியைக் களவாக எடுப்பித்தான்என்று குற்றம் சாட்டப்பட்ட வழக்கு நேற்றையத்தினம் மல்லாகம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் விசாரணை செய்து தவணையிடப்பட்டது.

விலை நிதானம்! நயம் சரக்கு!

எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
. கேங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
மூ குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34.

கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி, யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

**பத்திரக்கிரயம்**

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு „ அணா 1.
மலாய்நாட்டுக்கு „ காசு 5.

# ஈழகேசரி

**விளம்பரவிகிதம்**

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
„ அரைக்கலம் „ 4-00
„ கால்கலம் „ 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி—௬. | யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவ ஐப்பசிமீ ௨௫ உ (10-11-35) ஞாயிற்றுக்கிழமை | பகுதி—௧௮.


## இலங்கையின் அரசியல் எழுச்சி.

நவாலியூர், "சத்தியநாதன்"

(15-ம் இலக்கத் தொடர்.)

1923-ம் ஆண்டில் நிறுவப்பட்ட சட்டசபையில் 12 உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினரும் 23 உத்தியோகப் பற்றற்ற அங்கத்தினரும் ஸ்தானம் வகித்தனர். இவர்களில் 34 பேர் தேர்தல் மூலமாக அங்கத்தவராயினர். மூவர் கவர்னரால் நியமிக்கப்பட்டனர். தேர்தல் மூலம் ஸ்தானம் பெற்றவர்களில் 23 பேர் ஸ்தலவாரியான தொகுதிகட்கும் கூட்டுத் தொகுதிகட்கும பிரதிநிதிகளாயிருந்தனர். ஏனைய அங்கத்தவர் விசேஷ சமூகங்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் பிரதிநிதிகளாக இருந்தார்கள். (அதாவது ஐரோப்பிய இந்திய சமூகப் பிரதிநிதிகளாகவும் வர்த்தகம் முதலிய விசேஷ நலன்களைப் பாதுகாக்கும் பிரதிநிதிகளாகவுமிருந்தனர்.)

வருடமொன்றுக்கு 600 ரூபாய் வருமானம் அல்லது 1500 ரூபாய் பெறுமதியான ஸ்தாவர சொத்து (immovable) உடையவர்களுக்கே வாக்குரிமை அளிக்கப்பட்டது. அங்கத்தவராகத் தேர்தலுக்கு முன்வருவோர் வருடமொன்றுக்கு 1500 ரூபாய் வருமானமும் 5000 ரூபாய் பெறுமதியான ஆஸ்தியுடையவர்களாயிருக்கவேண்டுமென்ற நியதியும் ஏற்பட்டது. ஜனப் பிரதிநிதிகளுடைய எண்ணப்படியே அரசாங்க நிர்வாகம் பெரும்பாலும் நடைபெறவேண்டுமென்ற இலங்கைத் தலைவர்களின் கோரிக்கையைக்கண்டு பிரிட்டிஷ் அதிகாரிகள் மூச்சுப் பேச்சில்லாமல் அக்கோரிக்கைகளையெல்லாம் அளித்தார்கள். 1923-ம் ஆண்டின் அரசியல் திருத்தத்தின அர்த்தம் இதுவே. ஜனப் பிரதிநிதிகளின் கையில் அதிக உரிமைகள் வழங்கப்பட்டனவேயென்று அவற்றை மிதப்படுத்த அரசாங்கம் ஒரு விதத்திலும் முயலவில்லையென்றே கூறலாம். பெரும்பாலான உரிமைகள ஜனப்பிரதிநிதிகளின் கையில் விடப்பட்டன. ஆனால் உரிமை ஒன்று; பொறுப்பு இன்னொன்று. பொறுப்பில்லாத உரிமையினால் பயனில்லை. மேலும் உரிமையைக் கொடுத்துப் பொறுப்பை மறுத்துவிட்டால் பொறுப்பற்றதன்மை உண்டாகும். எனவே 1923-ம் ஆண்டில் ஏற்பட்ட புதியசட்டசபை வேலை ஆரம்பித்துக் கருமங்களை நடத்திக்கொண்டுவந்தது. பொறுப்பில்லாத உரிமையினால் ஏற்பட்ட பொறுப்பற்ற நிர்வாகத்தின தன்மை அங்கத்தவர்கட்கு நாளுக்கு நாள் புலனாயிற்று.

சட்டசபையில் பெரும்பான்மைக் கட்சியினராயிருந்த சனப்பிரதிநிதிகள் இப் பொறுப்பற்ற தன்மையின பயனாகத் தாம் நினைத்தபடி அங்கு கொண்டுவரப்படும் சட்டங்களையும் பிரேரணைகளையும் நிறைவேற்றியும் எதிர்த்தும் வந்தார்கள். எந்தப் பிரேரணை என்ன பயனைக் கொண்டுவந்தாலும் அவர்கட்கென்ன? நாட்டின் நல்ல நிர்வாகத்துக்குப் பாத்திரவாளிகளா யிருக்கும் நிலைமையில் அவர்கள் வைக்கப்படாதபடியால் எது எப்படிப் போனாலென்ன? அவர்கள் சட்டைசெய்யவில்லை. எனவே தங்களுக்கு அளிக்கப்பட்ட வெறும் உரிமைகளைத் துஷ்பிரயோகஞ்செய்யவுந் தூண்டப்பட்டனர். இந்த நிலைமையை அறிந்த அரசாங்கம் வெளியரங்கத்தில் தாங்களும் சனப்பிரதிநிதிகளும் பிணக்குப்படுவதையும் தங்களுடைய அந்தஸ்துக் குறைந்துவிடுமென்பதையும் எண்ணிச் சனப்பிரதிநிதிகளுடன் அடிக்கடி சமாதானமான உடன்பாடுகள் செய்துவந்தது. எனவே இந்தப் பரஸ்பர பிணக்கைத் தீர்ப்பதற்கு ஏற்பாடுகள்செய்வதே அரசாங்கத்தின நிர்வாகக்கொள்கையாய் ஏற்பட்டது.

1925-ம் ஆண்டில் சேர் ஹியூ கிளிபோர்ட் இலங்கைக்குக் கவர்னராய் வந்தார். இந்தமாதிரியான நிலைமை இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. 13 வருடங்களுக்கு முன்னே அவர் இலங்கையில் கொலோனியல் காரியதரிசியாக உத்தியோகம் வகித்துவந்த காலத்திலேயே இலங்கையருடைய அரசியல் அபிலாஷைகட்கு அவர் அனுதாபங்காட்டாதிருந்துவந்தார். இப்பொழுதோ நிலைமை மிக மாறிவிட்டது. சிறுபராயந்தொட்டே சேர் ஹியூ கிரௌன் கொலனி ஆட்சிமுறை என்ற பாடத்தை நெட்டுருப்பண்ணிவந்திருக்கிறார். எனவே இலங்கையில் ஏற்பட்ட அரசியல்மாற்றத்தை அவரால் சகித்துக்கொள்ள முடியவில்லை. உடனே அவர் கொலோனியல் தலைமை நிலையத்துக்கு எழுதினார். "பழையகுருடி கதவைத திறவடி" என்றதுபோல் தான் முதலமுதல் உத்தியோகம் புரிந்துவந்த மலாய் நாட்டுக்குத் தன்னை அனுப்புமாறு அவர் அதிகாரிகளை வேண்டிக்கொண்டார். அவரை அப்படியே மாற்றிவிட்டனர். இலங்கையைவிட்டுப் போவதற்குமுன அவர் கொலோனியல தலைமைக காரியாலயத்துக்கு இலங்கையின் அரசியல் நிர்வாகமுறையைப் பரிசிலனைசெய்ய ஒரு சபையை ஏற்படுத்தவேண்டுமென்றும் ஒரு விண்ணப்பஞ் செய்துவிட்டுப்போனார்.

### டோனமூர் சீர்திருத்தம்

அந்தச்சபை (டொனமூர்குழு) 1927-ம ஆண்டில் இலங்கைக்கு வந்தது. டொனமூர்பிரபு, சேர் ஜொப்ரே பட்லர், சேர் மதியூ ரூதன, டாக்டர் டிரம்மண்ட்ஷீல்ஸ் என்ற இவர்களே அக்குழுவினங்கத்தவர்கள். டொனமூர்ப்பிரபு அக்குழுவுக்குத் தலைவராயிருந்தார். பல வாரங்களாக இக்குழு நாட்டிலுள்ள பலதிறப்பட்ட சனங்களிடமிருந்தும் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமான அபிப்பிராயங்களைக்கேட்டது. இவ்வபிப்பிராயங்கள் பெரும்பாலும ஒன்றுக்கொன்று முரணாகவே இருந்தன. எனவே இலங்கை பொறுப்புள்ள நிர்வாகத்தை நடத்தும் தகுதியை இன்னும் பெறவில்லை என்றமுடிபு அவர்களுடைய மனதில் எழுந்தது. ஆகவே பொறுப்பாட்சியடைவதற்கு ஒருபடியாயிருக்கும் முறையில் புதிய ஒரு அரசியல்முறையை வகுத்தனர். இதுவே டொனமூர் அரசியல் திட்டமென்னும் இரட்டை ஆட்சி. புதிய இவ்வரசியல் திட்டம் முக்கியமான வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அடியோடு ஒழித்து 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் கல்வி யோக்கியதை ஆஸ்தி யோக்கியதையாகிய நிபந்தனைகளின்றிச் சர்வசன வாக்குரிமை அளித்தது.

புதிய இத்திட்டம் 1931-ம் ஆண்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்டது. பழைய சட்டசபையை மாற்றி அரசாங்கசபை (இராச்சிய மந்திரிசபை) என்ற சனப்பிரதிநிதிகளின் சபை ஏற்படுத்தப்பட்டது. சட்டநிரூபண நிர்வாக உரிமைகளிரண்டும் இச்சபைக்கு அளிக்கப்பட்டன. இவ்வரசாங்க சபையில் (தற்போதைய அரசாங்க சபை) 3 உத்தியோக அங்கத்தினரும் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்ட ஐம்பது சனப்பிரதிநிதிகளும் கவர்னரால் நியமிக்கப்பட்ட எட்டு நியமன அங்கத்தினரும் இருக்கிறார்கள். மூன்று உத்தியோக அங்கத்தவரும் இராச்சிய உத்தியோகஸ்தர் Officers & State என்றழைக்கப்படுவர். இம் மூவரும் (அதாவது பிரதமகாரியதரிசி, சட்டக்காரியதரிசி அல்லது 'அட்டர்ணி ஜெனரல்' பணக்காரியதரிசி Financial Secretary) மந்திரி சபையிலும் இடம்பெறுவார்கள். இவர்கட்கு எந்த இடத்திலும பேச அதிகாரமுண்டேயன்றி வாக்களிக்க அதிகாரங்கிடையாது. பிரதமகாரியதரிசியே சிவில்சேவிஸ் உத்தியோகத்தருக்குத் தலைவர். மந்திரிசபைக்கும் அவரே தலைவர். உயர்தர உத்தியோகஸ்தர்களை நியமிக்கவும் உத்தியோக உயர்வு கொடுக்கவும் உத்தியோக மாற்றஞ் செய்யவும அதிகாரம் பெற்றுள்ள பப்ளிக் சேவிஸ் கமிஷனுக்கும் அவரே தலைவர். சேனை விஷயமும் மற்றைய வெளிநாட்டு விஷயங்களும் இவர் பொறுப்பிலேயே இருக்கின்றன. அட்டர்ணி ஜெனரல் சட்டமந்திரி. பணவிடயங்களுக்கு அதிகாரி பணக்காரியதரிசி.

அரசாங்க நிர்வாகத்தின் மற்றைய விடயங்களெல்லாம் அரசாங்கசபை அங்கத்தவர்கள்கையில் விடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொருநிர்வாகப் பகுதிக்கும் (Department) ஒவ்வொரு நிரந்தரக்கமிட்டி பொறுப்பாயிருக்கிறது. அரசாங்கசபை அங்கத்தவர்கள் இந்தக் கமிட்டிகளில் சரிசரியாகப் பகிர்ந்துவிடப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கமிட்டியின் தலைவரும் ஒவ்வொரு மந்திரி. இவ்வாறு ஏழு கமிட்டிகளும் அவற்றின் தலைவராக ஏழு மந்திரிகளும் இருக்கிறார்கள். உள்நாட்டு விஷயங்கட்கு ஒரு இலாகாவும், விவசாய நிலப்பரிபாலன விஷயங்கட்கு ஒரு இலாகாவும், ஸ்தல ஆட்சி விஷயங்கட்கு ஒன்றும், சுகாதார விஷயங்கட்கு இன்னொன்றும், கல்வி விஷயங்கட்கு மற்றொன்றும், தொழில் வர்த்தகமாகிய விஷயங்கட்கு வேறொன்றும், போக்குவரத்துச் சாதனங்கட்கு ஒன்றுமாக ஏழு அரசாங்க நிர்வாகப்பகுதிக ளிருக்கின்றன.

இப் புதிய திட்டம் குறைபாடுடையதென்றும் ஆதலால் அதனை ஏற்கக்கூடாதென்றும் நாடெங்கும் ஏற்கனவே கிளர்ச்சி நடைபெற்றது. இத் திட்டத்தை நிறைவேற்றக்கூடாதென்று சட்டசபையில் பலத்த முயற்சிகள் நடைபெற்றன. ஆனால் ஒரேஒரு வாக்கினால் திட்டம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.

வடமாகாணத்திலுள்ள நான்கு தமிழ்த் தொகுதிகளும் இப் புதியதிட்டத்தைப் பகிஷ்கரித்து தேர்தலில் கலந்துகொள்ளாது விலகின்றன. திட்டத்தின் குறைபாட்டைக்கண்டல்ல வேறு சில காரணத்தாற்றான் பகிஷ்காரம் நடைபெற்றதெனக் கூறப்படுகிறது.

மற்றைய தொகுதிகளெங்கும் தேர்தல் நடைபெற்றது. 978,548 ஆண்களும், 599,384 பெண்களுமாக 1577,932 வாக்காளர் பதிவுசெய்துகொண்டார்கள். ஒவ்வொரு தொகுதியிலும் 100-க்கு 60 குடியானவர்கள் தேர்தலில் வாக்குக் கொடுத்தனர். சாதிசமய அபிமானங் காட்டாமல் எங்கும் தேர்தல் ஒழுங்காய் நடைபெற்றது. இரண்டொரு இடங்களில் மாத்திரம் சமயாபிமானத்தைத் தேர்தல் விடயத்தில் சனங்கள் காட்டினார்கள். இரண்டு இந்தியரும் இரண்டு ஐரோப்பியரும் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து சாதியபிமானம் தேர்தலில் காட்டப்படவில்லையென்பதை அறியலாம். தோட்டங்களிலுள்ள இந்திய தொழிலாளரே குறிக்கப்பட்ட இவ்வங்கத்தவர்களில் மூவருக்குப் பெரிதும் வாக்களித்தபோதும் சிங்கள மகாசனங்கள் சாதிவேற்றுமை காட்டாதிருந்தனர். இவ்வுண்மை தேர்ந்தெடுக்கப்பட்ட இரு பெண் அங்கத்தவர்களுடைய வெற்றியிலிருந்து நன்கு புலனாகும்.

இந்தியாவிலும் பார்க்க இலங்கையில் பெண்கள் கூடிய சுதந்திரம் அனுபவித்துவந்தபோதிலும் டொனமூர்த்திட்டம் ஏற்படும்வரை அவர்கள் அரசியலில் அதிகம் கலந்துகொள்ளாதிருந்தனர். டொனமூர் குழுவினர் பேசிய ஒரு குறிப்பை உணர்ந்து ஒரு நொடிக்குள 'மாதர் அரசியற்சங்கம்' என்ற ஒரு சங்கம் ஏற்பட்டது. அச்சங்கத்தினர் உடனே டொனமூர் குழுமுன் தங்கட்கு வாக்குரிமை வேண்டுமென்று சாட்சியங் கொடுத்தனர். குழுவினர் ஒரளவுக்கு பெண்களுக்கும வாக்குரிமை கொடுக்கவேண்டுமெனச் சிபார்சு செய்தனர். ஆனால் குடியேற்றநாட்டு மந்திரி 21 வயதுக்கு மேற்பட்ட எல்லாப் பெண்கட்கும் வாக்குரிமை கொடுக்கப்படுமெனச் சங்கற்பம் செய்தார்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க.)

# விதியை வென்ற சுப்பிரமணியன் காதை.

(மனுப்புலியார்.)

(17-ம் இலக்கத் தொடர்ச்சி.)

வேறு

சுப்பிர மணியனன் றன்னைத் தூக்கியே
கைத்தல மீதினிற் தோளிற் கான்தொறும்
செப்பிய படிசுமந் தேனைச் சிந்தையில்
எப்படி மறந்தனை இயம்பு வாயரோ. 25

ஆல்டி அமர்ந்தனம் மந்தி சந்தியும்
மால்கெட மறைமொழி மாண்பி னேதினேம்
சாலவு மழகிது தனிய னெயொரு
கால்கடை கலைத்துழு வாழ்க்கை காண்பதே. 26

விற்றிடு மாட்டையும் விரும்பு நெல்லையும்
பெற்றிடு பணத்தினைப் பிறகு நல்வழி
உற்றிட ஒருசெயல் உவந்து செவ்வையாற்
கற்றறிந் தவனருள் காதன் மைந்தனே. 27

என்னலும் கணபதி இரண்டு கைகளாற்
தன்னையும் மறந்தவன் தன்னைக் கட்டியே
அன்னையு மிறந்தன ளப்ப னேகினன்
உன்னையுங் கடவுடா னுறச்செய் தானரோ. 28

சொல்லின னுவகையுஞ் சூழ நின்றனன்
நல்லது நவின்றனை நாமு நான்பெறு
மெல்லதுந் தருவது இந்த மேதியும்
நெல்லதும் தானென நினைவில் வைத்தியால். 29

நெல்லினை விற்றுப்பின் நெல்லை வாங்குவேன்
சொல்லிய அளவினுக் கதன்பின் சொச்சமாஞ்
சல்லியை மாத்திர மெடுத்தென் சாதமே
அல்லினிற் கொள்ளுவே னறிதி அன்பனே. 30

இப்படி யிருந்திட இவ்வி ரண்டையு
மெப்படி விற்குவே னேழை யானெனச்
செப்பினன் கணபதி திரும்பச் சுப்பனு
மப்படி யாயினென் றறைவன் கேளெனு. 31

எருமையும் நெல்லது மின்று விற்றுநாம்
வருபணந் தனக்கொரு விருந்து வைக்குவம்
அருமையன் றெனக்கிது அமையும் நாளையே
தருகுவன் இரண்டையும் தயங்கல் தம்பியே. 32

என்றுரை செய்திட வியைந்து சந்தையிற்
சென்றவை விற்றனர் செல வெடுத்தனர்
அன்றிரு பதின்மருக் கன்ன மிட்டனர்
நின்றது பகலிரா வெழுந்த தாமரோ. 33

தன்பொரு ளிரண்டையும் தானி ழந்துநின்
றென்பொரு ளினிவர வியலு மோவெனக்
கண்டுயில் கொண்டிலன் கண்ணை மூடியே
புன்கணுற் றுறங்குவான் போலப் பாயலில். 34

படுத்தவன் பின்னிராப் பக்கல் நெற்சுமை
இடித்திடப் புரண்டனன் எழுந்து கைகளாற்
பிடித்தனன் தடவினன் பெரிது வந்தனன்
அடுத்தது எருமையி னழுகை தானுமே. 35

அவ்விட மணுகியே அதிச யித்தனன்
கௌவிய புலனுடன் கரிய மேதியுஞ்
செவ்விதென் றுரைப்பது போலச் சென்னியை
இவ்வயி னவ்வயின் எடுத்த சைத்ததே. 36

வேறு

கதிரவன் குணபா லுற்றுன்
கத்திய எருமை மாடும்
புதியதென் றுணர்ந்தான் நெல்லுப்
பொதியதும் பொருந்தப் பெற்றுன்
அதிகுண முடைய வண்ணு
அறிதியோ வென்று கேட்டான்
சதியிதில் இலையோ வென்று
தயங்கினன் அதிகன் தந்தோன் 37

தம்பிநீ கவலல் வேண்டாஞ்
சார்ந்திடு நெல்லும் மாடும்
நம்பிநீ இன்றும் விற்று
நடத்துதி விருந்தை என்ன
உம்பரின் பேறு பெற்ற
ஒருவனு மென்ன நின்று
கம்பனின் கவியே யன்ன
கவின்சுவை விருந்து செய்தான். 38

(தொடரும்)

## பிழை திருத்தம்

20–10–35-ல் வெளிவந்த ஈழகேசரியில் 8-ம் பக்கத்தில் விதியைவென்ற சுப்பிரமணியன் காதையில், 2-ம் பாட்டு 4-ம் அடியில் "கண்சொண்டு" என்பதை "கண்டுகொண்டு" என்றும், 4-ம் பாட்டு 1-ம் அடியில் "கூட்டல்" என்பதை "கூடல்" என்றும், 2-ம் அடியில் "முளி வெளிறும்" என்பதை "முனி வெனினும்" என்றும், 20-ம் பாட்டு 3-ம் அடியில் "சென்றதன்பின்" என்பதை "சென்றதுபின்" என்றும் திருத்திப் பாடுக.

சரித்திரப்பகுதி

[பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது]

# "இலங்கைச் சரித்திரக் கதைகள்"

[சுன்னுகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது]

### 5. வாலகம்பாகு

**கை**முனு இறக்கத்தம்பி சதாதீசன் அரசனுனன். சதாதீசனின் பின் அவன் புத்திரர்கள் சிம்மாசன மேறினர். அவர்களுள் நான்காம் புத்திரனுன வாலகமபாகு விசேடம் பெற்றவன்.

இலங்கையின் செல்வச் சிறப்பை அறிந்த தமிழர், எப்பொழுதும் இதிற் கண்ணும் கருத்துமாகவே யிருந்தார்கள். ஆதலின் வாலகம்பாகு அரசனுன ஐந்தாம் மாதத்தில (கி. மு. 43) மீண்டும் ஏழு தமிழ்ப் பிரதானிகள் இங்கு படையெடுத்து வந்தார்கள். தமிழர் இரண்டாவது முறையாகப் படையெடுத்து வந்தமையின் இப்படை யெழுச்சி, "தமிழரின் இரண்டாம் படையெழுச்சி" எனப்படும்.

தமிழர் எழுவரும் அரசனின் தலைநகரான அநுராதபுரிக்குச் சென்றூர்கள். அங்கிருந்த அரசனைத் துரத்தி நாட்டைக் கைப்பற்றினுர்கள்.

அரசனும் தமிழருக்கஞ்சி நகரை விட்டோடிக் காடுகளிலும் குகைகளிலும் 15 வருடம் வதிவானுயினுன். மன்னனின் பிரியபத்தினியான சோமதேவியும் மாற்றுரால் சிறையாக்கப் பட்டாள். 15 வருடமும் வாலகம்பாகு தன் இராச்சியத்தை மீண்டும் பெறுவதற்காக முயற்சி செய்து கொண்டே இருந்தான்.

தமிழரில் இருவர் இந்தியாவுக்கு மீண்டார்கள். மற்றைய ஐவரும் ஒருவரை ஒருவர் கொன்று அரசனுயினர். ஆகவே தமிழரின் வலிமையும் படிப்படியாகக் குறைந்தது. மாற்றுன் வலிமையினும் தன் வலிமை மிக்கதெனக்கண்ட வாலகம்பாகு, ஒரு பெரிய படையுடன் அநுரதபுரிக்குச் சென்றுன். அங்கு ஆட்சி செய்த கடைசித் தமிழரசனைக் கொன்று இழந்த இராச்சியத்தை மீண்டும் பெற்றுன். பெற்று, இராணி சோமதேவியையும் சிறைமீட்டான்.

தமிழரின்கீழ் பல துன்பங்களையும் அநுபவித்த பிரசைகள் தம்மரசனை முன்னரிலும் பன்மடங்காக நேசித்தார்கள். "பிரிந்தவர் கூடினுற் பேசவும் வேண்டுமோ?" வாலகமபாகுவும் சீர்குலைந்திருந்த இராச்சியத்தைச் சீர்ப்படுததுவதற்கு வேண்டியன செய்தான். புத்தசமய வளர்ச்சிக்கு இம்மன்னன் புரிந்த தொண்டுகள் அளப்பில.

வாலகம்பாகு தான் ஒழித்திருந்த குகைகளிற பெருந்தொகையானவற்றைச் செப்பனிட்டு விகாரைகளாக்கினுன். விகாரைகள் எல்லாவற்றிலும் தம்பளையிலுள்ள விகாரை விசேடித்தது. இஙகு புத்தபெருமானின் விக்கிரகங்கள் பலவுண்டு. குகையின் சுவர்களில் "விஜயன் இலஙகையையடைதல்," "கைமுனு எல்லாளயுத்தம்" போன்ற காட்சிகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. தன் தேவியைச் சிறைமீட்ட ஞாபகத்திற்காகச் சோமராம சமாதியை இவ்வேந்தன் கட்டுவித்தான. பல்லோர் புகழும் அபயகிரி விகாரையையும் இலஙகா ராம சமாதியையுங் கட்டுவித்தவனும் இம்மன்னனே.

வாலகம்பாகுவின் காலத்தில் விசேடமான சம்பவமொன்று நடைபெற்றது. மகா விகாரையிலுள்ள புத்த குருமாருக்கும் அபய கிரிவிகாரையிலுளளோருக்கும் சமய சம்பந்தமாகக் கிளர்ச்சி ஏறபட்டது. உடனே மகா விகாரையிலுள்ளோர் தாம் கைக்கொண்டொழுகும் புத்த தர்மங்களையெல்லாம் ஒரு புததகமாக எழுதிவைததனர். இந்நூல் திரிபிடகம எனப்படும். இது நிகழ்ந்த ஒன்பதாம்வருடத்தில் (கி. மு. 17) மன்னனும் மரணமாயினுன். (தொடரும்)

## இலங்கையின் அரசியல் எழுச்சி.

(முன்பக்கத் தொடர்ச்சி)

அரசியலில் அதிகம் ஈடுபடாத ஒரு பெண்ணே முதல் பெண் அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இரண்டாவது பெண் அங்கத்தவர் தனது சாதியார் அதிகமில்லாத ஒரு தொகுதியால் தெரிந்தெடுக்கப்பட்டார்.

அரசாங்க சபை

அபசகுனத்துடன் புதிய அரசாங்கசபை ஆரமபமாயிற்று. நாட்டிலே பணக்கஷடமும் வியாபார முடையும் எங்கும் பரவியிருந்தது. நாட்டின் பிரதானமான விவசாயப் பொருள்களான தேயிலை, ரப்பர், தேங்காய் என்னும் மூன்று சாமான்களும் விலைபடாமல மந்தப்பட்டன. அரசாங்க வருமானம மிக மோசமாகக் குறைநதுபோயிற்று. அதனுல் வரவுசெலவுத் திட்டத்தில வருமானத்துக் கதிகமான செலவு ஏறபட்டது. எனவே புதிய இரண்டு முறைகளை மந்திரிகள அனுஷ்டித்தார்கள். வருமானவரியை ஏற்படுத்தியதுடன் அரசாங்கத்தின் நிர்வாகச் செலவிலும் சிக்கனத்தை மேற்கொண்டனர். இவ்விரண்டு விடயங்களும் பலகாலத்தொட்டுச் செய்யப்பட வேண்டியிருந்தன. அரசாங்க நிர்வாகச் செலவில் உயர்தர உத்தியோகஸ்தர்கட்குப்பிரயாணச் செலவு கொடுக்கும் விஷயத்திலேயே பொது வருமானத்தில் அரைவாசிக்குமேல் செலவானது. வருமான வரியை அரசாங்கசபை ஏற்படுத்தியதிலிருந்து, சனங்களிடம் எவ்வளவுக்கு முன்னையிலும் பார்க்க அதிகாரம வழங்கப்பட்டதென்பது வெளியாயிற்று. பழைய சட்டசபையில் வருமானவரி ஏற்படுத்த வேண்டுமென்ற பிரேரணை விவாதிக்கப்பட்டும் மூன்றும்முறை வருமானவரிச்சட்டம வாசிக்கப்பட்டபொழுது பணம்படைத்த முதலாளிகளின் பெருமுயற்சியால் அது நிறைவேற்றப் படாமற் போயிற்று.

ஆரம்பத்தில் ஏற்பட்ட கண்டத்திலிருந்து அரசாங்கசபை தப்பிவிட்டது. 4 வருடமாக இச்சபை தனது காலத்தைக் கழித்துவிட்டது. சென்ற ஜூன் மாதத்துடன் இதன் ஆயுட்காலம் முடிந்தது. அடுத்தவருட வரவுசெலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இதன் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டது. பக்ஷபாத மில்லாது விஷய ஆராய்ச்சிசெய்வோர் இவ்வரசாங்க சபையின் வேலை திருப்திகரமாய் நடைபெற்றிருக்கிறதென்றே கூறுகிறுர்கள். எப்படியும் அதன் சித்தி எவ்வளவென்று கணக்கிடும்பொழுது இரண்டு விஷயங்களை மனதில் வைக்கவேண்டும். திட்டமோ புதிய ஒரு திட்டம். பெரும்பாலான அங்கத்தினரோ முன் அனுபவமில்லாதவர்கள். முழுப்பொறுப்பையும் பிரதிநிதிகள்கையில் கொடுக்காத தன்மையுடைய இத்திட்டத்தை நிர்வகிக்கும் முறையில் அரசாங்கசபையின் வேலை நல்லாய் நடைபெற்றிருக்கிறது.

## கடிதம்.

### சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் அதன் நடவடிக்கைகளும்.

#### சங்கத் தலைவரின் பதில்.

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா!

**யா**ன் சைவ வித்தியாவிருத்திச் சங்க நிர்வாகத்தைப் பற்றியும் முகாமைக்காரனின் நடபடிக்கைகளைப்பற்றியும் இப் பத்திரிகையில் மூன்று கடிதங்கள் எழுதி வெளியிட்டமை வாசக நேயர்கள் நனகு அறிந்த விஷயம். இக்கடிதங்களுக்குத் தகுந்த விடையிறுக்கத் துணிவில்லாத முகாமைக்காரன் ஓர் பெருஞ்சூழ்ச்சி செய்துள்ளார். தாம் செய்யுங் குற்றங்களை மூடுமந்திரமாக வைத்திருக்கக் கருதிப்போலும் 1935-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 16-ந்திகதி காரியதரிசியும், வேறு சில பிரதானமான அங்கத்தவர்களும் சமுகங்கொடாது விட்ட நிர்வாகசபைக் கூட்டமொன்றில் தாம் செய்வது யாவும் சரியென ஓர் நிர்ணயத்தை நிறைவேற்றுவித்துள்ளார். 1935-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 20-ந்திகதி வெளிவந்த கேசரியில் யான் வெளிப்படுத்திய நீண்ட கடிதத்தைக் காரிய நிர்வாகசபையார் கண்ணுற்றிருப்பின் மேற்கூறிய தீர்மானத்தை ஒருபோதும் நிறைவேற்றியிருக்கமாட்டார்கள் என்பதே எனது துணிபு. ஐப்பசிமாதம் 16-ந்திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றிய நிர்ணயத்தை இரகசியமாக வைத்திருந்து, இப்போது அந்த நிருபங்களையெல்லாம ஒரேயடியாய் வீழ்த்திவிடவோ, பொய்யாககிவிடவோ கருதி சங்கத்தலைவரின் ஒப்பத்தோடு ஒரேயொரு சின்னஞ்சிறு பதிலை, கார்த்திகை மாதம் 3-ந்திகதி வெளிவந்த கேசரியில் வெளிப்படுத்தியுள்ளார். அதைப் பார்க்கும்பொழுது 'உலகத்தை உலைமூடியினுல் மூடிவிட்டாற்போலும்' எனக்குத் தோன்றுகிறது. குற்றத்தைக் குற்றமென்று பெரிய தாபனங்களும் அரசாங்கத்தார் தாமும் ஒப்புக்கொள்வது வழக்கமல்ல. எங்கள் இலங்கை அரசாங்கத்திலேயே அதற்குப் பல சான்றுகள் காணலாம். சேர். பான் ஜெயதிலகா அரசாங்கசபை அங்கத்தவராயிருந்துகொண்டு அகராதியொன்றின் பொருட்டு அரசாங்கத்தாரிடம் வேதனம் பெற்றது பிழையெனக் கொண்டுவரப்பட்ட வியாச்சியம் எவ்விதம் நிராகரிக்கப்பட்டதோ அவ்விதமே, சை. வி. வி. சங்கத்தில் காணப்படும் ஊழல்களை நிராகரிக்க இப்போது விசேஷ நிர்ணயம் ஒன்று தலைமையாபீசில் இருந்து தலைகாட்டியிருக்கிறது. தலைகாட்டியென்? தலைவிழி காட்டியென்? குற்றங் குற்றமே! இது உலகறிந்தவிஷயம்.

எனது நிருபங்களில் காட்டியவை பொய்யென எண்ணினுல் ஓர் விசாரணை வைத்து அதைப் பொய்யெனத் தீர்க்க வேண்டும். அல்லது எனது பொய்யைத் தாபிப்பதற்குச் சங்கத்தார் செய்யக்கூடிய மிகவும் பொருத்தமானவும் பெலயானவுமான செய்கை, என்மீதும் பத்திராதிபர் மீதும் வியாச்சியம் தொடுத்து எம்மைப் பகிரங்கமாகத் தண்டிப்பித்தலே. அதைவிடுத்து நொண்டிச் சமாதானங் கூறுவதும், அங்கத்தவர்களைப் பிடித்துத் தனித் தீர்மானம் பெறுவதும், இப்படிப் பெருமைவாய்ந்த சங்கத்தாருக்கும், முகாமைககாரனுக்கும் ஆண்மையும் அழகுமாகாது.

யான் எனது நிருபங்களிற் கூறியவற்றை விட வேறுவிஷயங்களை எடுத்துக் காட்டுவது அநாவசியம். அத்தனை விஷயங்களையும் அத்தாட்சிப்படுத்த யான் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறேன். என்னிடமிருக்கும் அத்தாட்சிகள் போதாவிடில் சங்கந் தொடங்கியகாலந் தொடக்கம் இற்றைவரை சங்கத்தின் காரியதரிசிகளாயிருந்த திரு. M. S. இராசரத்தினம், திரு. C. K. சுவாமிநாதன் திரு. S. சுவாமிநாதன் முதலியோரைக் கேட்டறிந்து சந்தேகந் தீர்த்துக் கொள்வீர்களாக; இவையும் போதாவெனில் அதிகாரசபை அங்கத்தவர்களாயிருந்த திரு. அ. மகாதேவா, திரு. சு. சிவபாதசுந்தரம், திரு. வை.விஜயரத்தினம், திரு.K.ஐயாத்துரை, திரு. அ. பசுபதிப்பிள்ளை, திரு. நொத்தாரிஸ் கந்தர் முதலியோரை நேரிற்கண்டோ கடிதமெழுதியோ அறியுங்கள். அழுக்குச் சீலையை விரித்துக் காட்டுவது அழகல்ல. எனினும் முன்கூறிய சிலவற்றையும் புதியன சிலவற்றையும் வாசகநேயர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

முதலாவதாக புரட்டாதி மாதம் 22-ந் திகதி நடைபெற்ற நிர்வாகசபைத் தீர்மானத்துக்கு மாருக முகாமைக்காரன் தான் நினைத்த பிரகாரம் ஆசிரியர்மார்களை மாற்றினுரோ அன்ருேவென்பதைத் தலைவரே வாய்கூசாது சொல்லுவாராக! இரண்டாவது முகாமைக்காரன் மயிலிட்டிதெற்குப் பாலர் ஞானோதயசங்க வித்தியாசாலை விஷயத்தில் ஊரவர்களின் பிரியத்தையாவது, பாடசாலையைக் கட்டிக்கொடுத்த பாலர் ஞானோதயசங்கத்தையாவது, ஸ்தல முகாமைக்காரனை (Local Manager) யாவது உசாவி எப்போதாவது நடந்ததுண்டோ என்று விசுவாசமாகச் சத்தியந் தவருது செப்புவாராக! இப் பாடசாலை விஷயத்தில் அதிகம் சிரத்தை எடுத்து வந்த மயிலிட்டி திரு. சி. சுவாமிநாதன் அவர்களின் அபிப்பிராயத்தையாவது பொருட்படுத்துகின்ருரா? இந்தமாதம் 1-ந் திகதி இப்பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக, தெல்லிப்பழை மிஷன் பாடசாலையிலிருந்த திரு. செல்லையா என்பவரை நியமித்தது காரிய நிர்வாகசபையின் அனுமதி பெற்ரு?

புதிய விஷயங்களாகச் சில கூறப்புகின், காரிய நிர்வாகசபையாரில் ஒருவர் இருவரைத்தவிர சை.வி.வி. சங்கத்தில் முகாமைக்காரனுல் நடாத்தப்படும் கருமங்களை அறிவார் எவரும் இல்லையென்றேகூறலாம். நன்கொடைப்பணங்கள் வந்தபின்பும் ஆசிரியர்மார் தம் பாக்கிவேதனத்தைப்பெருமல் கஷ்டப்படுவதை நிர்வாகசபையார் அறிவாரா? இந்த ஆசிரியர்கள் சங்கக் கந்தோருக்கு எத்தனைமுறை யாத்திரைசெய்தார்கள்; செய்கிருர்கள் என்பதைக் காரிய நிர்வாக சபையார்அறிவாரா? ஒரு வருடத்துக்குள் ஆசியர் சிலர் நாலு ஐந்து பள்ளிக்கூடங்களுக்கு மாற்றப்படுவதை இந்த நிர்வாக சபையார் அறிவாரா? அவ்விதம் அடிக்கடி மாற்றவேண்டியிருக்கும் தடுமாற்றத்துக்குக் காரணம் என்னென்று விசாரித்தறிந்தார்களா? தெரிவுச் செலவின்பொருட்டு முகாமைக்காரன் ஆசிரியரிடம் பணம்பெற்றது நிர்வாகசபையாருக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் எத்தனைமாசச் சம்பளம் பெற்ருர்? அதன் வரவு செலவுக் கணக்கென்ன? என்பதை நிர்வாகசபையாவது, தெரிவுசபையாவது, அல்லது அவரின் எச்சன்ருவது வெளிப்படுத்தினுர்களா? எச்செயலுக்கும் ஒரு கணக்கு வேண்டுமல்லவா? செலவினங்களைப்பற்றி நிர்வாகசபையார் எல்லா விபரங்களையும் அறிவாரா? ஏழாலைப் பாடசாலை, புதிய முத்துத்தம்பி வித்தியாசாலை முதலிய பள்ளிக்கூடங்கள் புதிதாகக் கட்டப்பட்டதற்கு வரவுசெலவுக் கணக்குகள் இதுவரை நிர்வாக சபையார் அறிந்த விஷயங்களா? அப்படியாயின் அவற்றை எப்பணங்கொண்டு கட்டியதென்று சொல்லுவார்களா?

சைவ வித்தியா விருத்திச்சங்கத்தின் 1926-ம் ஆண்டின் 23-ம் கட்டளைச்சட்டத்தின் 3-ம் பிரிவின் (a) பகுதி பின்வருமாறு காணப்படுகிறது. "To establish and maintain Hindu schools in Ceylon where they are needed" "இலங்கையில் எங்கெங்கே தேவையோ அங்கங்கே சைவ வித்தியாசாலைகளை ஸ்தாபித்து நடத்துவது." இவை இங்ஙனமாக தையிட்டியிலும், மட்டுவிலிலும் சைவப் பள்ளிக்கூடங்கள் இருக்கவும், அவ்வூர்களிலுள்ள சைவ நன்மக்கள் பெரும்பாலோரின் பிரியத்துக்குமாருக முகாமைக்காரன் அவ்வூர்களில் சிறு சிறு சைவப் பள்ளிக்கூடங்களை அண்மையில் கட்டுவித்தமையை நிர்வாகசபையார் அறிவாரா? அப்பள்ளிக்கூடங்களின் முகாமைக்காரர் சை. வி. வி. சங்கத்தைப்பற்றிக் குறை கூறுவதை நிர்வாகசபையார் அறிவாரா? மட்டுவில் திரு. நொத்தாரிஸ் கந்தர் சை. வி. வி. சங்கத்தில் 5,000 ரூபா நட்டம் அறவிட வியாச்சியம் தொடர்ந்தமை ஆருடைய செய்கையால் என்பதைக் காரிய நிர்வாகசபையாரறிவாரா? இச்சங்கத்தின் அதிகாரசபை அங்கத்தவர்களாகவிருந்த மேற்கூறிய சைவப் பெரியார்கள் இச்சங்கத்தின் தொடர்பை விட்டு விலகியமை எதனுல் என்பதைக் காரிய நிர்வாகசபையார் அறிவாரா? சராசரிக்கு மேலதிகமாக ஆசிரியர் இருப்பதைக் குறைக்கவேண்டுமென நிர்வாகசபையார் செய்த தீர்மானங்களுக்கு மாருக முகாமைக்காரன் இப்போது முன் அப்படியில்லாத ஓர்பள்ளிக்கூடத்தில் மேலதிகமான 6ஆசிரியர்களை வைத்து நடத்துவதை அந்த நிர்வாகசபையார் அறிவாரா? இன்னும் இந்த முகாமைக்காரன் செய்வது சரியெனறு தலைவரும் நிர்வாக சபையாரும் தீர்மானங்கள் நிறைவேற்றுவார்களா? அன்றேல் என் கூற்றைப்பற்றி விசாரிப்பார்களா? விரிவஞ்சி இத்துடன் முடிக்கிறேன்.

மயிலிட்டிதெற்கு,
5-11-1935.

இங்ஙனம்,
க. பொன்னம்பலம்.


# நாட்டு பொருள் அபிவிருத்தி (வரைவுளது)

**மூலதனம் ரூ 30,000**

**ரூபா 100 கொண்ட 300 பங்குகள் உடையது.**

பிரதான நோக்கமாகிய நெற்செய்கை
கரைச்சி நீர்ப்பாய்ச்சல் பகுதியில் நடந்துவருகிறது.

**பங்கு ஒன்றுக்கு ரூ 10- விகிதம்**
**பத்து மாதங்களில் கொடுக்கலாம்.**

பங்கு தொகை மொத்தமாக கொடுப்பவருக்கு
நூற்றுக்கு ஐந்து கழிவு.

நீர்ப்பாச்சல் பகுதிவேளாண்மை நாளேற வருவாய் ஏறிவருவது
தெளிவாயிற்று.

**அதிக ஆதாயம்தருவது! பங்குக்குமுந்துங்கள்!**

யாழ்ப்பாணம், திருநெல்வேலி    வ. சோமசுந்தரம்.
கந்தரோடை வித்தியாசாலை மனேஜர்    சி. கந்தையா.
நல்லூர் ஆசிரியர்    வி. முத்துக்குமாரு M. A.
ஆகியோரிடம் பங்குகள் பெறலாம்.

**ஆரம்ப கருத்தாக்கள் :—**

Dr. சி. சுப்பிரமணியம் Retired Prov: Surgeon.
R. R. நல்லையா. J. P. யா. ந. ச. தலைவர்.
சி. முத்துவேலு J. P. கோக்குவில் கிராமச்சங்கத் தலைவர்.
K. தம்பிப்பிள்ளை, வித்தியாசாலை மனேசர், காங்கேயன்துறை
ஆ. மாணிக்கம். விஞ்ஞான சாஸ்திர ஆசிரியர், ஸ்கந்த வரோதயக்கல்லூரி, கந்தரோடை.

(44) 10-11-35-4


## பரராசசிங்கத்தின் படுமோசம்

### பொய்க் கடிதத்தால் ஏமாற்றியதற்கு விருந்து

உடுவில் வாசியாகும் டிறைவர் பரராசசிங்கமென்பவர் தன்னை ஏமாற்றி 500 ரூபா பெறுமதியான நகைகளை வாங்கிக்கொண்டு போய்விட்டனரென உரும்பராய் நவரத்தினம் செல்லம்மாவால் யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஓர் வழக்குத தொடரப்பட்டிருக்கிறது. குறித்த பரராசசிங்கமென்பவர், அம்பலவாணர் மனோன்மணி மேற்படி செல்லம்மாவுக்கு சில நகைகள் இரவலாகத் தரும்படி எழுதியதாக ஒரு கடிதத்தைச் செல்லம்மாவிடம் கொடுத்தார். செல்லம்மா அக்கடிதம் மனோன்மணியினுடையதென நம்பி நகைகளைப் பரராசசிங்கத்திடம் கொடுத்துவிட்டு, பின் சில நாட் சென்றபின் நகைகளைக் கேட்டபோது மனோன்மணி தான் அப்படியொரு கடிதம் எழுதவில்லையென்றும் நகைகளைப்பற்றித் தனக்குத் தெரியாதென்றும் தெரிவித்தனர். நீதிபதி குறித்த பரராசசிங்கம் என்பவர்க்கு விருந்து விடுத்துள்ளார்.

## தேகவியோகம்

யாழ்ப்பாணம்—வண்ணார்பண்ணைச் செட்டித்தெரு மிஷன் பாடசாலைத் தலைமை ஆசிரியையும், ஓட்டுமடம் திரு. இளையதம்பி தம்பு அவர்களின் சிரேஷ்ட புதல்வியும, ஏழாலை வடக்கு வாசரும், உயரப்புலம் மிஷன கலவன பாடசாலைத் தலைமை ஆசிரியருமாகிய திரு. வேலுப்பிள்ளை டானியேல் ஐயாத்துரை அவர்களின் பாரியாருமாகிய ஸ்ரீமதி கிறேஸ் விசாலாட்சி அவர்கள் சென்ற 4-11-35 திங்கட்கிழமையன்று சாயந்தரம் 6 மணியளவில், பாலர் மூவரையும, பள்ளிச் சிருர்களையும், சுற்றமித்திரரையும், பெற்ருரையும், புருடனையும் கணகலங்கச்செய்து, தனது கிருகத்தில் தமது 29-ம் வயதில் இம் மண்ணுலகைவாழ்வை விடுத்தனர்.

தேவபக்தியில் மிகுந்தாராய், சுற்றம் பேணுவதில் சிறந்தவராய், ஆசிரியத்தொழிலில் வல்லுநராய், நற்குண நற்செய்கையுடையராய் இவர் விளங்கியமை குறிப்பிடத்தககது.

இவரது மரணக்கிரிகைகள் அடுத்தநாளாகிய செவ்வாய்க்கிழமை சாயங்காலம் 4 மணியளவில் மிக விசேடமாய் அனேக பெரியார்கள் முன்னிலையில் நிறைவேறியது.

இவரைப்பிரிந்து துன்புறும் அதி பால்யர்களாகிய செல்வநாயகம், புஷ்பநாயகி, கிருபைநாயகம் முதலிய மூவர்களுடனும, கணவனுடனும், பெற்ருருடனும், சுற்றமித்திரர்களுடனும், நாம் பெரிதும் துக்கமடைகிரும். அன்னரின் ஆத்மா சாந்தியடைவதாக. (கடி.)

குறிப்பு:— குறித்த ஆசிரியையின் ஞாபகார்த்தமாக ஈழகேசரிக்கு அனுப்பிய ரூபா 2 வரப்பெற்ரும். ப—ர்.

## புங்குடுதீவுக்கு வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம் 'சிவில்' வைத்தியசாலையில சத்திர வைத்தியராயிருந்த டக்டர் V. D. சிவரத்தினம்அவர்கள் புங்குடுதீவு வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரி (Medical Officer) யாக நியமிக்கப்பட்டிருக்கின்ருர். இவரே இத்தீவுக்கு முதன்முதலாக வைத்திய அதிகாரியாக' அனுப்பப்படுகிருர்.

# தனித்தமிழ்ப் பண்டிதர்களின் தற்கால நிலை.

(சாவைநகர்த் தமிழாசிரிய கழகத்துத் தமிழ்ஆசிரியன் திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள்.)

நேரிசைவெண்பா.

பனுவ லணிபுனையும் பாவன் மகாரைத்
தனுவற் றமிழ்த்தாயே! தந்தாய்—சனுவற்ற
பண்டிதர்க ளோங்கமதி பன்னுவனல் நின்
கொண்டிதமே நெஞ்சிற் குறித்து.[னருளைக்

செந்தமிழ் என்னச் சிந்தையினிக்கும் பைந்தமிழாய நந்தமிழ்மொழியை செவ்வனே வளர்க்குதுமெனத் துணிந்து நிற்பன யாழ்ப்பாண, மதுரைத் தமிழ்ச்சங்கங்களே. இவ்விரு பெருங் கழகத்தின்கண் பாண்டித்தியமடைந்து பல்லிடங்கட்கும் பலப்பல பண்டிதர் பரவுகின்றனர். இம்மாபெருமுதவிக்குத் தமிழ்மக்களியற்றுங் கைமாறுதான் யாதோ? அம்மம்ம! "செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமு மாற்றலரி" தென முன்னுட் பொய்யாமொழியர் புகன்றனரன்றே.

"பண்டைக்காலத்துப் பாவல பண்டித சிகாமணிகளைக் காவலருள்ளிட்டோரியாவரும் போற்றித் தொண்டாற்றி யாதரித்தனராக இற்றைஞான்று அறிவுத்துறைபோகிய பண்டிதர் பலர் பருவாலுற்று இருபது ரூபா வேதனத்துக்கும் வழியறறுப் படித்த கேள்வியை வெறுத்துரைக்கின்றவாயராய் வதிகின்றனரே! என்னே!! இஃது பழையன கழிதலும் புதியன புகுதலுமா?" எனவெறலாம் புலம்புவோ பண்டைக்கால இக்காலச் சமூகத்தவைகளை ஆராய்ந்துணராதாரேயென்க.

விசித்திரவினோத விஞ்ஞான சாஸ்திர விருத்தியும் அற்புதமின்சார அபிவிருத்தியும் ஆராய்ச்சியும் நிறைந்து பண்டையோர் நினைக்கவும் இயலா அபூர்வமானவைகளை இலகுவாக முடிக்கும் இவ் இருபதாம் நூற்றாண்டில ஆங்கில பட்டதாரிகட்கே சனமானமும் மேன்மையும் உண்டாக, தமிழ்ப்பண்டிதர்கட்கவை யிலவாதற்குக் காரணமென்னை? இதன் உண்மைக்காரணம் ஆழ்ந்துணர்வார்க்கு நன்கு புலனாகும்.

எழுத்துமுதலாகிய விழுத்தமிழ் இலக்கணம ஐந்தையும் அறுதியிடுவது ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப்பியமென்க. அறமேறல தொல்காப்பியப் பயிற்சியுடைய ஒருவற்கு ஐந்திலக்கணப் புலமையும் ஆரவமையும் செய்யுளியல் கற்பவன யாப்பருங்கலம், காரிகை எனறிவற்றையும் உவமவியல்கற்பவன் மாறனலங்காரம் தண்டி என்றிவற்றையும் கறறலெற்றிற்கோ? பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல ஆகலின புதியனவற்றைப் புதிய நூலகளிற் கறக வேண்டாமோ? எனில் நனறுகடாயினுய். ஒரு சில புதுப்பொருள் கற்றறகு ஒரு பொருள களத்தும பன்னூல முழுமையும் கொனனே கற்பது தகுமா? சொல்லாட்சி வேண்டுமேல ஒருபொருள களத்தும் பனனூல் இலககியததிற் பயிலலாமே? ஆசசெடடனபதை மடடிட்டறியாது அவர் 10000 சூத்திரம ஞாபகமுடையா. இவா 15000 சூததிரம் ஞாபகமுடையர். யாம் இருபதாயிரம சூததிரம் ஞாபகமுடையேம் எனவறிமத வாயசைககும பண்டிதர்கள் இனமுமுளரே. இவையெல்லாம் புதுநூற்றாண்டுப் புதுக்கல்வி முறைக்கு முற்றும் முரணுயதன்றே. இம்மகைகள் பண்டிதாகள மேலனவா? அன்றி அன்னவரையாக்கும் சங்கங்கள் மேலனவா?

மேற்கிளந்தவண்ணம் தமிழ்ச்சங்கப் பாடவிதானங்களினின்று அவசியமற்ற நூல்களை நீக்கின் வெற்றிடங்கள் தோன்றுமே. ஆங்கு இக்காலச் சமூகத்திற்கேற்ற கணித சாஸ்திரம் விஞ்ஞான சாஸ்திரம் தத்துவ சாஸ்திரம் ஆதிய கலைநூல்கள் இடம் பெறலாகும். அவ்வாறுயின் தமிழ்ச் சங்கங்களினின்று வெளிவரும் பண்டிதர்கள் இலக்கிய லக்கணப் புலமையும் கணிதம் சரித்திரம் பூமிசாஸ்திரம் விஞ்ஞான சாஸ்திரம் ஆதிய இக்காலக் கலைகளும் நிறைந்து பொனமலர் நாற்றமடைந்ததேபோல் மிளிர்வர். இவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்போங்கும். கழகங்களும் வருக! கலைபெருக அருள்தருக! என இவர்களை வரவேற்கும். பலரும் ஆதரிக்க முன்வருவர். ஆங்கிலப் பட்டதாரிகளும் வெட்கி நாணமடைய வேதனமுமுயரும். அப்போழ்து "பிறர்நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல வேண்டும். ........

அதை வணக்கம் செய்யவேண்டும்" என்று வீரகர்ச்சனை செய்த பச்சைத்தமிழனின் பெருவாக்கு நிறைவேறும். இதனைத் தமிழ்ப்பண்டிதாபிமானிகளும் தமிழ்ச்சஙகப் பாடவிதானம் அமைப்பாரும் ஆழ்ந்துணருங்காலமெதுவோ? இது எமது பொன்மொழி; இதில் அந்நியருக்கிடமில்லை. நாமும் அவர் மொழித தொடர்பிலேம்" எனக்கூறிய நாட்டு, மொழியும் கலையும் வளர்ச்சியற்றிருநதன என்பதைச் சரித்திரமுணர்ந்தோர் அறிவர்.

யாம் வேண்டுவதின்னு மொன்றுளது. என்னவெனில், இவ்வாறு பாடவிதானமாற்றம் செயயுஙகால் குறித்த ஒரு வகுப்புச் சித்தியடைநதோரே அதற்கடுதத மேல்வகுப்பிற் பிரவேசிததற் கருகராவர் எனும் நியதியும் ஆக்கப்படாதிருக்க வேண்டும் எனபதே.

தண்டமிழ் ஒண்டமிழ் வண்டமிழ் தீந்தமிழ் தெளிதமிழ் வடிதமிழ் தழற்புரை விழிக்கடவுள் தநத தமிழ் தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்த தமிழ் முதலையுண்ட பாலனையழைத்த தமிழ் என்பு பெண்ணுருவாககண்ட தமிழ் மறைக்கதவினைத திறந்த தமிழ் முச்சஙகமும் வளர்ந்த மூவா இளந் தமிழ் பாவலர் காவலர் பாடிய பழந்தமிழ் இழுமென்மொழிபல பழுநிய விழுததமிழ் இலக்கணலக்கியவரம்புடைத் திறத்தமிழ், தெய்வத்தனித்தமிழ் எனபபுகழ பெற்றிததாகி இசையினை நாற்றிசையினும போக்கிய எமது ஆராக் காதல் தாய்த்தமிழ்மே துறற ஆதரத்தானும் அம்மொழி பயினறும் அடைந்திலம் பெறென விம்மி வெறுக்கும் விழைதமிழ்ப பண்டிதர் முனனேறி விளஙகவும் இனனன பலப்பல பன்னுவா னுன்னினேன். இந்நன்மதி வெளிப்படுத்திய எம்மீது தமிழ்ச சங்கப் பாதுகாவலர்களும் பண்டிதர்களும் அன்புடையராவர் என மகிழ்கின்றேம

அணி செய்காவிய மாயிரம் கற்பினும் ஆழ்ந்திருக்கும் கவியுளங்காணுராய் வாளா மனனஞ்செய்து பரீசையில் ஒப்பித்துச் சித்தியடையுமாறு ஒழுங்கு செய்த தமிழ்ச் சஙகங்கள் வீளி நிலையுறுக! பூரணபண்டிதர்களை யுலகெலாம் போககி நும்புகழ் நிறுவுக!! வாழியதமிழே! வழிவழிச் சிறந்தே!!!

# சுன்னுகம் சந்தையின் சீர்கேடு

## ஏழைச் சனங்களின் இன்னல்

### தரகர்மாரும் குத்தகைகாரரும் செய்யும் அநீதிகள்

### விசாரணையில் வெளியான விபரங்கள்

யாழ்ப்பாணத்தில் மிகப் பிரபல்யமுற்றுவிளங்கும் சுன்னுகம் சந்தையின் அபிவிருத்தியிற் சிரத்தைகோண்ட அபிமானிகளின் முயற்சியால், சென்ற திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் அரசாங்கசபை அங்கத்தவரான திரு. சு. நடேசபிள்ளை அவர்களும், சுன்னுகத்திலும் சுற்றுப்புறத்திலுமுள்ள அபிமானிகள் பலரும் சேர்ந்து ஓர் விசாரணை நடத்தினர்.

விசாரணையின் பெறுபேருகச் சந்தையில் குத்தகைகாரரும், தரகர் முதலியோரும் செய்யும் அநீதிகளும், அதனுல் ஏழைச்சனங்கள் படுமே கஷ்டங்களும், அரசினா சந்தைக் குத்தகையாகப்பெறும் பெருந்தோகையான பணம் சந்தையின் விருத்திக்காகச் செலவு செய்வதில்லையென்பதும் பிறவும் அறியப்படலாயின.

சந்தைக்குட் பிரவேசித்து விசாரணை நடத்தியபொழுது, சந்தையில் வியாபாரஞ் செய்து சீவிக்கும் ஏழைகளின்முறையீடு மிகவும் பரிதாபமாகவிருந்தது. பொருள்களை விற்பனைக்குக் கொண்டு வருவோரிட மிருந்து குத்தகைகாரர் ஒருபுறமும், தரகர்மார் மற்றோர்புறமும், கோயில்காறர் இன்னோர் புறமுமாக அவர்கள் பொருள்களைச் சினனு பின்னப்படுத்தித் தகுந்தவிலைக்கு விற்பனைசெய்ய முடியாமவிருக்கும் நிலைமையை யாவரும் கண்டனர்.

சந்தைக்குள்ளிருக்கும் கட்டடங்களில் நிலையான வியாபாரிகளுக்கே இடங்கொடுத்திருப்பதால் சந்தைக்கு வரும் பொதுசனங்கள் மழை வெய்யிலுக்கு ஒதுங்கிற்க முடியாமலிருப்பதுடன், வண்டிப் போக்குவரத்து பஸ் வண்டி முதலியவற்றுல் சனங்கள் நடமாட முடியாமலிருப்பதையும் நேரிற் கண்டனர்.

சந்தையின் சுற்றுப்புறங்கள் சுகாதாரமற்றிருப்பதும், சந்தையில் வியாபாரஞ்செயபவர்களிடம் விதிக்கப்பட்ட பிரமாணத்திற்குமேல் பணம்அறவிடப்படுதலுமஅறியத்தக்கதாயிருந்தது.

இவ் விசாரணையின்பின் மேற்கண்ட குறைபாடுகளை நீக்கிச் சீர்ப்படுத்துவதற்காக ஓர் சபை நியமிக்கப்பட்டது. அச்சபைக்கு, அரசினர் ஆசிரியகலாசாலை அதிபராயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. அ. பொன்னையா அவர்கள் தலைவராகவும், கொழும்பு மெர்க்கண்டயில் வங்கியில் உதவி உத்தியோகத்தராயிருக்கும் திரு. த. வல்லிபுரம் அவர்கள் லிகிதராகவும நியமிக்கப்பட்டபின், கீழ்க்காணும் விஷயங்களைப்பற்றி நடபடிக்கைகள் கையாளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1. சாமான்கள் விற்பவரிடமிருந்து அநியாயமாக வாடகைப் பணம் பெறுவோரைத் தடுப்பதற்காக ஓர் விசேஷ உத்தியோகஸ்தர் நியமிககப்படல்வேண்டும்.

2. இச்சந்தையினதும் சுற்றுப்புறத்தினதும் சுகாதாரமற்ற நிலையைச் சீர்திருத்தச் செய்வதுடன் சந்தையிற் சாமான்கள் விற்போர்க்குப் போதிய இடவசதிகள் இல்லாமலிருப்பதால் சந்தைக் குத்தகையாகக் கிடைக்கும் 6250 ரூபாவில், ஓர்தொகைப் பணம் கடைகள கட்டுவதற்காக ஒதுக்கப்படல்வேண்டும்.

3. சந்தைக்குச் சமீபமாகவுள்ள சந்தியில், வண்டிச் சஞ்சாரத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்காக்குவதற்கு ஏதும் நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும்.

—நிருபர்.

## ஸ்ரீமான் தெ. அ. இராசரத்தினம்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழையைப பிறப்பிடமாகவும், சென்னை மாநகரை வாசஸ்தானமாகவும கொண்ட இப்பெரியார், சிலதினஙகட்குமுன் பரகதி யெய்திய செய்தியறிந்து நாம மிகவும் கவல்கின்றேம. தாய்மொழியாகிய தமிழிலும், ஆஙகிலததிலும நிரம்பிய கலாஞானமுடைய இவ்வறிஞர் ஆராய்ச்சித் துறையில் மிகவும் பிரசிததிபெற்று விளங்கினரென்பது அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் பலவற்றுலும செவ்விதின் விளஙகும். நமது நாட்டுப் பேரறிஞர் காலஞ்சென்ற ரூவ்-பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை யவாகள் சீவிய வரலாற்றைப் புத்தக ரூபமாக எழுதி வெளியிட்டு, நம் யாழ்ப்பாணத்தைப் புகழுறச்செய்த இவரது பெரும்பணி நம்மவரால என்றும மறக்கற்பால தொன்றன்று. இன்றொன்றுமே இவரை நாம என்றும மறவாதிருக்கச்செய்ய வல்லதாகும் என்பதில் ஐயமில்லை.

தெல்லிப்பழை மகாஜன ஆங்கில வித்தியாசாலை ஸ்தாபகா ஸ்ரீமான் தெ. அ. துரையப்பாபிள்ளை யவர்கட்கும், ஸ்ரீமான் தெ. அ. இராசநாயகமவர்கட்கும், இப்பெரியார் மூத்த சகோதரா ஆவர். இத்தகைய இவரது பிரிவினுல, தமிழுலகம், ஓர் நல்லறிஞனை—ஆராய்ச்சியாளனை—நுண்மதியாளனை—இழந்ததென்று கூறுவது மிகையாகாதென்றே நாம் நம்புகிறேம்.

இவரது பிரிவு குறித்துத் துயருறும் உறவினர் நண்பர் முதலியோருடன் நாமும் அனுதாபப்படுகின்றேம்.

—பர்.

## தபாற்கந்தோர்த் தலைவர்க்குக் கடூழியச் சிறை

நெடுந்தீவு உப தபாற்கந்தோர் அதிபரான கணபதிப்பிள்ளை அப்புத்துரை என்பவர், சென்ற தைமாதம் 12-ந் திகதி ஷை தபாற்கந்தோரில் இருந்து 459 ரூபா 42 சதத்தையும், 7-ந திகதி 85 ருபாவையும், 10-ந் திகதி 40 ரூபா 50 சதத்தையும் நமபிக்கைத் துரோகஞ்செய்து அபகரித்துத் துர்விநியோகப்படுத்தினுர் என்று யாழ்ப்பாணம் டிஸ்திறுக நீதிஸ்தலத்தில சென்ற செவ்வாய்க்கிழமை குற்றஞ்சாட்டப்பட்டார்.

நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக்கண்டு அவர்க்கு ஒருவருஷக் கடூழியச்சிறைததண்டனை விதித்தார்.

இன்னும் ஷை கந்தோரில இருந்து 600 ரூபா பெறுமதியான மணி ஆடர்களை ஷை அப்புத்துரை மாற்றி அவற்றைத் தம சொந்தப் பாவிப்புக்குத துர்விநியோகப் படுத்தினுர் என்று இன்னோர் குற்றமும பார்க்கப்பட்டது. அதிலும் 1000 ரூபா அபராதம் அல்லது 9 மாதக கடூழியச் சிறைததண்டனை விதிக்கப்பட்டார்.

# சுற்றுடல்.

—"வாராந்தன்."

சுன்னுகம் சந்தையில் ஏழைச்சனங்களுக்கு "நாட்டாண்மை"க்காரர் செய்யும் அக்கிரமங்களைப்பற்றி சென்ற திங்கட்கிழமை ஓர் விசாரணை நடைபெற்றது. காங்கேசன்துறைப் பகுதிப் பிரதிநிதி திரு. சு. நடேசனும் சந்தையின் அயற்கிராமங்களிலுள்ள சில பெரியோரும் சந்தையைச் சுற்றிப் பார்த்துச் சிலரிடத்து ஏதோ விசாரித்தனர். இவ்விதவிசாரணையொன்று நடைபெறுமென முன்னரே விளம்பரப்படுத்தப்பட் டிருந்தது. திரு. நடேசன் ஒருபோதாவது சந்தைக்குள் வாராதவராச்சே. ஆனல் அன்று அங்கு ஏன் வந்தார்? என்றதைப்பற்றிச் சனங்கள் பலவிதமாகவும் பேசிக்கொள்கின்றனர். * *

## "தேசவளமை"

சட்டப் பிரமாணப்படி சிவில் வழக்குகள் தீர்ப்புப் பெறுது தேசவளமையின்படி தீர்ப்புப் பெறுதலுமுண்டு. அதனல் சட்டப் பிரமாணப்படி ஒழுகாத விஷயங்களுக்கெல்லாம் "தேசவளமை" என்று கூறுதல் எப்பொழுதும் பொருந்துமா? என்பதும் ஒரு கேள்வி. ஆனல் எல்லாக் கேள்விகளுக்கும் விடை கூறுதல் இலகுவான காரியமன்று. 1891-ம் ஆண்டின 9-ம் இலக்க வடமாகாணச் சந்தைச்சட்டப் பிரமாணத்தின் 4-ம்விதி மீன், பழவகை, காய்கறிபோன்ற பழுதுபடக்கூடிய தின்பண்டங்களை விற்கும் ஏழைகளிடத்துச் சந்தைக் குத்தகைக்காரர் வாடகை அறவிடக்கூடாதென்று கூறுகின்றது. சந்தை நடபடிக்கை இதற்கு முழுமாறுகவேயிருக்கிறது. ஆனல வடமாகாணச் சந்தைச் சபைத்தலைவர் பழுதுபடக்கூடிய சாமான்கள் என்பன இடியப்பம், பலகாரம், அவித்தகிழங்கு, அவித்த கடலைபோன்ற தின்பண்டங்கள் எனக் கருத்துக் கூறுகின்றூராம். குத்தகைக்காரர் சட்டப்பிரமாணம் எப்படியிருந்தபோதிலும் தாம் வளமையின்படி வாடகை வாங்குவோமென்பார்கள். இதுவும் "தேசவளமை"யாகுமா?

* * *

## "எரிச்சல்"

எரிச்சல் என்பது பெரும்பாலும் பெண்களிடத்தேயுள்ள ஓர் கொடூரமான நோய். இந்நோய் உலகத்தின்கண்ணேயுள்ள பேதி, அம்மை, குட்டைபோன்ற நோய்களிலும் கொடூரமானதாம். இது தற்போது உலகத்தில் வரவர மிகவும் அதிகரித்துக்கொண்டு வருகின்றது. ஆடவர்களை இந்நோய் பீடிப்பது மிகக்குறைவு. இந்நோய் இரு வகைப்படும். ஒன்று நோயாளியே தன்னிடத்தில அத்துன்பம் இருக்கிறதென்பதை ஒத்துக்கொள்வாராம். மற்றது அத்துன்பத்தை மறைபொருளாக வைத்திருப்பாராம். இதில் பின்கூறப்பட்டதே மிகக் கொடூரமானதாம். முதல் முதலாக உலகத்திலே ஓர் ஜர்மன வைத்தியர் இந்நோயை மாற்றுவதற்கு வைத்திய முறையொன்றைக் கண்டுபிடித்திருக்கிறூர். வியன்னுவில் இதற்காக ஓர் வைத்தியசாலை திறக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில 14 பெண்கள தங்களிடத்திலிருக்கும் "எரிச்சல்" என்னும் வியாதியைக் குணப்படுத்திவிடும்படி வைத்தியரை வேண்டிநிற்கின்றனராம்.

* * *

## விதியும் கதியும்

வாசோ என்னுமிடத்தில் யூதசாதியாரின் புதுவருடத் தினத்தன்று ஒருவர் இருதயநோயால் இறந்தார். வைத்தியர்கள் பரிசோதனை செய்து இறப்புப்பத்திரம் அளித்தனர். அத்தினத்தில் இறந்தவர்களை அடக்கஞ்செய்யச் சமயவிதிகள் இடங்கொடாவாதலால் மறுநாட் காலையில் கடைசிக்கடன்கள் செய்வதாகப் பிரேதத்தைப் பெட்டியில் வைத்திருந்தார்கள். பத்துப்பேர் அன்றிரவு பிரேதத்தைக் காவல்செய்து சமயநூல்களைப் படித்துக்கொண்டிருந்தார்கள். சடுதியாகப் பெட்டி அசைந்தது. இறந்தவர் உயிர்த்தெழும்பினூர். உடனே காவல் காத்துக்கொண்டிருந்தவரில் ஒருவர் பயமிகுதியினல் உயிர்துறந்தார். இது புதினமாகின்றது. ஆனல் அன்று புதுவருடத் தினமல்லாத சாதாரணமான தினமானல் என்ன சம்பவித்திருக்கும்? அவரை அடக்கஞ்செய்திருப்பார்கள். அவர் அசைந்து பார்த்துவிட்டு அமைதியாக இறந்திருக்கவேண்டுமல்லவா?

* * *

## "வேலையில்லாப் பாட்டுப்பெட்டி"

பாட்டுப் பெட்டிகள் எங்குமுண்டு. வேலையில்லாப் பாட்டுப் பெட்டிகள் மிகுதியாகக் கடைவீதிகளிலுண்டு. பாட்டுப்பெட்டியை "வேலையில்லாதது" என்று கூறுதல் பொருந்தாது. ஆனல் அதன் பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் வேலையில்லாதவர்களாதலால் பெட்டி அப்பெயர் பெற்றது. இது அயலவர்களுக்கு இரவில் அவசியமில்லாத தொந்தரவைக் கொடுக்கின்றது; நித்திரைக்கு குழப்பமுஞ்செய்கின்றது; என்பதெல்லாம் உண்மை. கொழும்பிலுள்ள இரு கடைக்காரர்மீது இதுவிஷயமாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பெற்று நீதிபதியும "இது ஓர் தொந்தரவான சாமான்" எனத் தீர்ப்பில் கூறியிருக்கிறூர். ஆனல் இரவில் இது நித்திரைக்குழப்பஞ்செய்யாது தடுப்பதற்கு என்னவழி? இரவில் தாலாட்டு முதலிய பாட்டுத் தட்டுகளைப் போட்டுப் பாடினல் யாவருக்கும் சந்தோஷமாகவிருக்குமென்று கூறலாம். ஆனல் இவ்விதப் பாட்டுப்பெட்டிகள் சங்கீதத்தை வளர்த்துவருகின்றதென்பதை எவரும் மறுக்கமாட்டார்.

* * *

## மன்னூர்ப் போட்டி

திரு. G. G. பொன்னம்பலமவர்கள் பருத்தித்துறைப்பகுதிப் பிரதிநிதியானதின் காரணமாக M. S. C. பட்டங்கிடைத்தது. தற்போது கேம்பிறிட்ச் சர்வகலாசாலையிலிருந்து இவருக்கு M. A. பட்டமும் வந்துவிட்டது. ஆகையால் M. A., M. S. C. ஆக விளங்குவார். இதில M. A. நிச்சயமானது. M. S. C. அநித்தியமானது. M. S. C. பட்டத்தை நிலைநாட்டி வைத்திருப்பதன் பொருட்டு வரும பொதுத்தேர்தலில் மன்னூர்ப் பகுதிக்குப் போட்டிசெய்வதாகத் தீர்மானித்திருக்கிறூர். ஆனல் M. S. C. பட்டம் பெறுவதற்காக திரு. R. ஸ்ரீ பத்மநாதன் இவருடன் பருத்தித்துறைப் பகுதியில போட்டிசெய்து தோல்வியுற்றூர். இவரிடத்தும் ஒக்ஸ்போட் M. A. பட்டம் ஒன்று உண்டு. இவருக்கும தேவையானது M. S. C. பட்டந்தான். இவர் திரும்பவும்வரும் பொதுத்தேர்தலில் திரு. பொன்னம்பலத்துடன் மன்னூர்ப்பகுதிக்குப் பிரதிநிதி யாவதற்காகப் போட்டிசெய்யப்போகின்றூராம். நிற்க, அரசாங்கசபையும் வரும் டிசம்பர் மாதம் 7-ந்திகதியுடன் காலகதியடையுமெனத் தேசாதிபதி அறிக்கைசெய்திருக்கிறூர். * *

## குறித்துக்கொள்ளுங்கள்

தகப்பன் : சூரன் மரமா? மனிதனு?
மகன் : வெட்ட வெட்டத் தளைக்கிறபடியால் மரமாகத்தானிருக்கவேண்டும்.

# இத்தாலி - அபிசீனிய மகா யுத்தம்

# இத்தாலியரின் முன்னேற்றம்

## அபிசீனியர் பதுங்கிச் சண்டைசெய்யும் சூழ்ச்சி

## இத்தாலியரைத் திருப்பிக் கலக்கும் காட்சி

## மக்கலே பிடிக்கப்படவில்லை

### 2000 பெண்களும் 4000 சிறுவர்களும் கொலையுண்டனர்.

நவம்பர் 7

வடக்குப்போர்முனையில் மக்கலேநகரை நாடியும தெற்குப்போர்முனையில் டோலோ நகரை நாடியும் இத்தாலிய போர்வீரர் பலதிக்கிலுமிருந்து நெருங்கிச் செல்கின்றனர். கனடி என்னும் மலைப்பிரதேசத்தில் இத்தாலியரும் அபிசீனியரும் கைகலந்து பெரிய யுத்தம் செய்தனர். மலையிலேற இத்தாலியர் முயன்றபோது அபிசீனியர் யந்திரப் பீரங்கிகளால் இத்தாலியர் மீது குண்டுப்பிரயோகங்கள் செய்தனர். பற்றைகட்கிடையில் மறைந்திருந்தே அபிசீனியர் தாக்கினர். குண்டுகளின் வேகத்தைத் தாங்கமுடியாதிருந்தும் இத்தாலியர் முன்னேறினராம். இத்தாலியர் பலர் இந்த யுத்தத்தில் மடிந்தாராயினும் அவர்கள் ஆவேசத்துடன் முன்னேறிச்சென்று கனடி என்னும் மலையைப் பிடித்தனர். இங்கே யுத்தம் இரண்டுமணித்தியாலங்களாக நடந்ததாம்.

இன்னெரு இத்தாலிய படையினர் சனிறறினி என்னும இத்தாலிய தளகர்த்தருக்குக்கீழ் குயிஹா என்னும் மலைப்பட்டினத்தை நோக்கிச் செல்கின்றனர். இப்பட்டினம் 6000 அடி உயரத்திலுளது. இங்கே பீரங்கிகள் ஏற்றப்படின் மக்கலே நகரைத் தாக்குவது மிகவும் இலகுவாகும்.

இத்தாலிய தளகர்த்தராகும் பினூலி என்பவர் தனியே மக்கலே நகரைக் கைப்பற்ற விரும்பவில்லை. மற்றைய படைகளுடனும தலைவர்களுடனும் அந்நகர்க்குள பிரவேசிப்பதே அவர் விருப்பமாகும். மக்கலே நகரைக் கைப்பற்றி அந்நகரிலுள்ள என்டாயேசஸ் என்னும் கோட்டை மீது இத்தாலியர் தமது கொடியை நாட்டுவராம. இக்கோட்டையைத்தான் இத்தாலியர் 40 வருடங்கட்கு முன் ஒருமாதமாக பிடித்துப் பாதுகாததவர். இக்கோட்டையைப் பிடித்த கலியானி என்னும் சேனைத்தலைவர் பின் அடோவா நகரில் கொல்லப்பட்டதுமுண்டாம்.

அபிசீனிய அரசரின் மகன் யுத்தமுனைகளைப் பார்வைசெய்துவிட்டு இப்போது அடிஸ்அபேபா வந்துவிட்டனர். அரசியல் பொறுப்பினை அவரிடம் விட்டுவிட்டு அரசர் டிஷே நகருக்குச் செல்வாரென்றும அங்கே யுத்தமுனைகளைப் பார்வையிடுவாரெனவும் சொல்லப்படுகிறது. போகும்போது பாதுகாப்புகளுடனேயே அரசர் செல்வார்.

தெற்குப் போர்முனையில் அபிசீனியர் பெருந்தொகையாக வீரர்களைக் கொணர்ந்து சேர்க்கின்றனர். டோலோ என்னுமிடத்தைநோக்கி 40 000 வேடுவப் போர்வீரர்கள் செல்கின்றூர்களாம். இன்னெரு படையினர் ஒக்டன் மாகாணத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். 30 000 போர்வீரர்கள் டூராவா என்னுமிடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறூர்கள். தெறகுப்போர்முனையில உக்கிரமாகத் தாக்கினல இத்தாலியர் வடக்குப்போர்முனையில் சிறிது தளர்ச்சியடையக்கூடுமென்பது அபிசீனியர் கருத்து.

வடக்குப் போர்முனையில் ரைக்கிரி (Tigre) மாகாணத்தில ரக்காஜே என்னும் ஆறறுக்கு வடக்கேயுள்ள எல்லாவிடங்களும் இததாலியர் வசமாயினவாம். மக்கலே நகருககு வடக்கேயுள்ள ஒரு மலைப்பிரதேசமும இததாலியர் வசமாயிறறு. மக்கலே நகருக்கு வடக்கிலும் வடமேறகிலும் அபிசீனியர் பற்றைகள், மலைக் குகைகட்குள் பதுங்கியிருந்து சடுதியில் இத்தாலியரைத் தாக்கும் முறையைக் கையாண்டு அதிக நட்டத்தை இத்தாலியர்க்கு வருவிக்கின்றனர். மக்கலே நகருக்குப் பதினெருமைலுக்கிடையில் வந்த இத்தாலியரை ராஸ் காஸா என்பவரின் சேனைகள் தாக்கி அவர்களைத் திருப்பிக் கலைத்துவிட்டன. சிற்சில இடங்களில் அபிசீனியர் பின்வாங்குவதாக நடித்து, பின இத்தாலியர் தம்மைச் சிறிது தூரத்துக்குப் பின்தொடர்ந்து சென்றதும் சடுதியாகத் திரும்பி அவர்களைத் தாக்கிப் பெரும் நட்டத்தை விளைத்தனராம். மேலும் ரைக்கர் மாகாணத்தில் அபிசீனியர் தவழ்ந்துவந்து வாள், ஈட்டியுடன் இத்தாலிய போர்வீரரைத் தாக்கினராம். இப்போது இத்தாலியர் மக்கலே நகர்க்கெதிரேயுள்ளதும 9000 அடி உயரமுள்ளதுமான மலையில் வந்து தாமதித்துள்ளார்.

நவம்பர் 6

அபிசீனியர் கையாண்ட முறையின் வன்மையால் இத்தாலியர் மக்கலே நகரைப் பிடிக்கவியலாது சங்கடமுற்றனர். பகலில் அபிசீனியர் நகரை விட்டு வெளியே சென்று, இரவில் சடுதியில் தோறறி இத்தாலியர்க்குப் பெருநட்டத்தை விளைத்தனர். அபிசீனியநாட்டரசர் எல்லைக் கணித்தாக தமது நாட்டிற்குள் இருக்கும் பிரதானிகளைத் தம்வசபபடுத்தி வைத்திருப்பது பெரு நூதனமாகின்றது.

தெறகுப் போர்முனையில் ஒக்டன் நகரில் விமானஙகள் சுட்டுவீழ்த்தப்பட்டன. அவைகளிலிருந்த நால்வர் கொல்லப்பட்டனர். ஒரு விமானம் நிறைய வெடிகுண்டுகள் ஏறறப்பட்டிருந்தனவாம்.

டானக்கல் பிரதேசத்தில் ஒரு பகுதி இத்தாலியப்படை பின்னணிகளினின்று முற்றுக வெட்டப்பட்டுள்ளதாம். அப்படையினர்க்கு இத்தாலியர் விமானங்கள் மூலமாக உணவுப பொருள்கள் வழங்குகின்றூராம். அபிசீனிய அரசரின் மருமகனும் ராஸ் குக்சாவும் அவருடைய சேனையும மக்கலே நகருக்குள் புகுநதபோது அவர்களை எவராவது எதிர்க்கவில்லை யென்று சொல்லப்படுகிறது.

அபிசீனியாவில் பல்வேறு தொழில்களையும் நடத்திவந்த 25 இந்தியர் சென்ற வியாழக்கிழமை பம்பாய்வநது சேர்ந்தனர். இவர்கள் சாதாரண கூலியாட்களாகையால யுத்தத்தைப்பற்றி விபரமாகச் சொல்லக் கூடியவராயிருக்கவில்லை.

நவம்பர் 5

மக்கலே நகருக்கு வடகிழக்கே 15 மைலுக் கப்பாலுள்ள அகுலா நகரை இததாலியர் கிட்டிச் சேர்நதுவிட்டனர். இவ்விடத்திலேயே மற்றைய போர்முனையிலிருநதுவரும் படையினரும் சந்திப்பதாக முன்னர் ஒழுங்கு செயயப்பட்டதாகும். பெருமழையும புயலும் இடிமுழக்கத்துக்கிடையே இத்தாலியர் முன்னேறவேண்டியிருந்தது. போர்வீரர் மழையில் நனைந்து குளிரால பீடிக்கப்பட்டிருந்தனர். முன்னேறிய இத்தாலிய படையினர்க்குப் பின ஆயிரக்கணக்கான கூலியாட்கள் இடைவிடாது வேலை செய்து தெருக்கள் போடுகின்றனர். அப்போதான் மோட்டார்களும் கழுதைகளும் சாமான்களுடன் முனனேறக்கூடும.

ஹாஉஸைதின் என்ற இடம் இத்தாலியரால பிடிக்கப்பட்டபோது சரணபுகுந்தவருள் ராஸ் குக்சாவின் மருமகனும் அவர் பரிவாரங்களும காணப்பட்டனவாம்.

(தொடர்ச்சி 9-ம் பக்கம் பார்க்க)

ஒழுக்கத்தைக் காக்கி னவ்வொழுக்கமே துணை.




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்

யாழ்ப்பாணம், சுன்னாகம்:
யுவஹூ ஐப்பசிமீ உருஉ

## சவுக்காரத் தொழில்.

கொப்பரு, தேங்காய் நெய் முதலிய தென்னைப்பண்டங்களின் விலை சென்ற சிலவாண்டுகளாக அதிகம் குறைந்ததன்பயனாக, இலங்கை வாசிகள் தென்னைப்பண்டங்களிலிருந்து பல்வேறு பொருள்களைப் பெறுவதில் ஊக்கங் காட்டி வருவது போற்றப்படவேண்டியதாகும். தென்னைப் பொருள் விருத்திக்கு உழைப்பதில் பொதுசனங்கள் மாத்திரமன்றி அரசினரும் ஊக்கங்காட்டி நிற்பதும் நற்கால அறிகுறியேயாகும். தென்னைப்பண்டமாகும் கொப்பரு, நெய் என்பவற்றிலிருந்து அந்நிய நாட்டினர் இதுவரையும் நமக்கு அனுப்பிய பொருளகள் யாவை? இனிப்புகள், மெழுகுவர்த்திகள், சவுக்காரம் என்பனவே. இப்பொருள்கள் இலங்கையில் செய்யப்படின் எவ்வளவு நன்மை வந்தெய்தக்கூடியதாகும்.

இப்போது இலங்கைவாசிகள் சிறிதும் தாமதமின்றிக் கைத்தொழிலமுறையில் தேங்காய் நெய்யிலிருந்து செய்யக்கூடியது சவுக்காரமே. இது செய்தற்கு அதிக கஷ்டமிருபபதாக நாம் அறியவில்லை. தற்போது இலங்கையில் தேங்காய்நெய்யிலிருந்து சவுக்காரம் செய்தற்கெனச் சில தொழிற்சாலைகளே யிருக்கின்றன. பொதுவாக வஸ்திரங்கள் முதலியனவற்றின் அழுக்கினைப் போக்கிச் சுத்தப்படுத்தக்கூடிய சவுக்காரங்களை நம்மவர் போதியளவு சரிக்கட்டலாமே. அந்நிய நாடுகளிலிருந்து எத்தனையோ லட்சம் ரூபா பெறுமதியான சவுக்காரங்கள் வருடாவருடம் இலங்கைக்குள் இறக்கப்படுகின்றன. இந்த அரிய சநதர்ப்பத்தில் இலங்கை வாசிகளும் அரசினரும் சோம்பாயிராது வேண்டிய முயற்சிகளைச் செய்து நிற்பின், சென்ற சில ஆண்டுகளாக அடைந்த நட்டங்களை ஒருவாறு நிவிர்த்தியாக்கிச் சிறிதுலாபத்தையாவது அடையக்கூடியதாகும். உயர்ந்த விலையுள்ள வாசனைச் சவுக்காரங்களை நம்மவர் இப்போது சரிக்கட்ட வியலாவிடினும் மற்றைய அழுக்குப்போக்கும விலை குறைந்த சவுககாரங்களைப் போதியளவு உற்பத்தி செய்யலாமே. இதற்கு உறுதுணையாகும்படி அரசினர் சவுக்காரத்தில் இதுவரையும் விதிக்கப்பட்ட தீர்வைவரியை இரட்டித்துள்ளார். இவ்வாறு அரசினர் செய்தமையால இலங்கையில் சவுக்கார உற்பத்தி சிறிது ஊக்கமடையும் போற் காணப்படுகிறது.

இலங்கையில் பெறப்படும் சவுக்காரம் அழுக்குப்போக்கும் விலை குறைந்த சவுக்காரமே. இச்சவுக்காரம் மிக அதிகமாகவும் விலை சகாயமாகவும் உபயோகத்திற்குப் போதிய அளவாகவும் இலங்கையில் உண்டுபண்ணக்கூடிய வசதிகள் யாவும் உள. இதன் தீர்வை வரியை அரசினர் கூட்டியது மிகவும் பொருத்தமுடைத்தே. ஆனால், மற்றைய வாசனைச் சவுக்காரங்களது தீர்வைவரியைக் கூட்டியது மிகவும் ஏற்றதன்றென்பதே எமது அபிப்பிராயம். இச்சவுக்காரத்தின் தீர்வைவரி நூற்றுக்கு இருபத்தைந்திலிருந்து நூற்றுக்கு ஐம்பது வீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இவ்வரி உயர்த்தப்பட்டமையால் அதிகம் நட்டமடைவோர் இலங்கைவாசிகளே. இலங்கையில் அதிகம் பெறப்படாதிருக்கும் ஒரு பொருளின் தீர்வைவரியைக் கூட்டின், அவ்வரியை இறுப்பவர் இலங்கைவாசிகளேயாவர். மேலும், இவ்வரியைக் கூட்டுங்கால் அது எல்லா நாட்டினர்க்கும் ஒப்ப விருப்பினும் ஒருபோது சாலும். பிறிட்டிஷ் நாடுகளிலிருந்து வரும் வாசனைச் சவுக்காரங்கட்கு நூற்றுக்குப் பதினைந்து வீதமும், அந்நிய நாடுகளிலிருந்து வரும் வாசனைச் சவுக்காரங்களுக்கு நூற்றுக்கு ஐம்பது வீதமும விதிக்கப்படுவது நியாயமாகுமா? இலங்கையில் இவ்வித சவுக்காரங்கள் செய்யும் தொழிற்சாலைகள் ஒன்றுமில்லாதிருக்க, வரியை அளவுக்கு மிகுதியாகக் கூட்டிநிற்பது எப்படி நடுவுநிலைமையாகும்? பல்வேறு நாட்டினர்க்குமொப்ப வரி விதிக்கப்படின அப்போது இலங்கைவாசிகள் நன்மையடைவர். இவ்வளவு அதிகமாக வரி கூட்டியதிலிருந்து நாம என்ன அறியக்கூடியதாகின்றது? பிறிட்டிஷார் தமது நன்மையை முதலிலும் பின் இலங்கைவாசிகளின் நயத்தையுமே கருதுகின்றார்களென்பதே. இவ்வித வரிகளால் அரசினர் அடையும் பெரு நன்மைதான் யாவை? இலங்கைவாசிகளின் அவநம்பிக்கையைப் பெறுவதன்றி வேறு பெறும் பேறுதான் உண்டோ?

பொதுவாக அரசினர் விதிக்கும் புதிய வரிகள், இலங்கைவாசிகளின் நன்மையை நாடியிருப்பது மிக அவசியம். அப்படியாயின் எவராவது மனச் சஞ்சலம் அடையக் காரணமில்லை. அன்றியும் வாசனைச் சவுக்காரங்கள் செய்தற்கேற்ற உபகரணங்களை நிலைநாட்டிப் பின் இவ்வரியை விதிப்பின் ஒருபோது அங்கீகரிக்கப்படலாம். அரசினர் தேச நன்மையையும், செல்வ விருத்தியையும் நாடி அரசியலை நடதத முற்படும்வரையும் எல்லாம் சங்கடந்தான்.

## யுத்தம் தடுக்கப்படுமா?

சர்வதேசசங்கம் ஆரம்பமாய்ப் பதினைந்து வருடங்களுக்கு மேலாகின்றன. இச்சஙகததின பிரதம கொள்கை உலகத்தில் யுத்தம் ஏற்படாது தடுப்பதே. இச்சஙகத்தின் அங்கத்துவம்பெறும் இருநாடுகள், யுத்தம் ஆரம்பித்தகாலத்துச் சமாதானத்தை எதிர்த்துநின்ற நாட்டிற்கு மாறாக நடபடிக்கைகளைக் கையாளவேண்டியது சர்வதேசசங்கத்தின் கடமையாகும. அவ்வாறே இப்போது சர்வதேச சங்கத்தினர் முடிவுகளைத் துரும்பாகத்தானும் மதியாது யுத்தத்தைக் கிளப்பிநிற்கும் இத்தாலியர்க்கு நற்புத்திபுகட்டிச் சமாதானத்தின் நன்மைகளை உணரச்செய்வதும் சர்வதேச சங்கத்தின் கடமையாகும். இப்போது 50 அரசினர் பொருளாதார விஷயமாக இத்தாலியர்க்கு மாறுக முன்வந்துள்ளார். இந்நாட்டினர் உண்மைவழிநின்று நடபடிக்கைகளை ஏற்றவழியில் உபயோகிப்பின் இத்தாலியர் கண்விழித்துப் பார்ப்பர். இத்தாலியர் பொருள்களை வாங்குவோரிலராகவே, இத்தாலியர்க்குப் பணமுடையுண்டாக அந்நியர் பொருட்களையும் இத்தாலியர் வேண்டவியலாதவராவார். இத்தாலியரை இப்போது சார்ந்துநிற்கும் அவுஸ்திரியா, ஹங்கேரி முதலிய நாடுகட்கு அதிக பொருட்களும் தேவையின்று. இத்தாலிக்குக் கொடுக்கப் பணமுமின்று. இத்தாலியர் ஈற்றில் பலபக்கத்தாலும் நெருக்கமடைந்து பெரும் நஷ்டத்தையும் கஷ்டத்தையும் அடையவேண்டி வருமென்பது நிச்சயம். சர்வதேச சங்கத்தில்சேராத சிலநாடுகளும் இவ்விஷயததில் சர்வதேசசங்கததுக்கு உதவிபுரிய உடன்படுவதாக அறிகின்றோம். அப்படியாயின் இத்தாலியர்நிலை விரைவில் பாதிக்கப்படக் கூடும்.

இவைகள் ஒருவாறுகச் சர்வதேசசங்கம நடபடிக்கைகளை விரைவில் செய்யாது விடுவதால் பெருநட்டங்கள் வந்தெய்துகின்றன. யுததம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாயின, நடபடிககைகள் இனனும் முற்றுக அநுட்டானத்துக்கு வந்தபாடில்லை. இவ்விஷயத்தில் ஒருநாள்பிந்தினும் அது இத்தாலியர்க்கு நயமாகவும அபிஸீனியர்க்கும் உலகசமாதானத்திற்கும் பாதகமாகவுமேமுடிகின்றது. இனனொருவிஷயம் நாம் ஆலோசிப்பது அவசியம். சர்வதேசசங்கம் இவ்வித நடபடிக்கைகளை முன்னொருபோதும் கைக்கொண்டதில்லை. நடபடிக்கைகளைக் கையாளுங்கால் நாளுக்குநாள் புதுப்புதுச் சஙகடங்கள் வநதெய்தக்கூடும். இவைகள் யாவற்றிற்கும் பல்வேறு வல்லரசினரும் சோராது திடமாகநின்று ஏற்றதைச்செய்யவேண்டும். விஷயத்தைத்தொடங்கியபின் சோர்வடைதல் பெருங்குற்றமாகும். எப்படியாயினும் இவ்விஷயததில் சர்வதேசசங்கம் களங்கமின்றிவெற்றியுடன் வெளியேறினன்றி இனி உலகததில் சமாதானததைநாட்டுதல் கஷ்டமாய்விடும். சர்வதேச சஙகமும் இருந்தவிடந்தெரியாது மறையநேரிடும். ஆகையால், பிரதம வல்லரசினராகும் பிரான்ஸியரும் பிறிட்டிஷாரும் போதிய அக்கறையுடன் வேலைசெய்வரென்பது எமது நம்பிக்கை.

## நிர்வாக சக்தி

சைவவித்தியா விருத்திச்சங்க வித்தியாசாலைகளின் நிர்வாகத்திலுள்ள குறைமுறைகளைக் குறித்த கடிதங்கள் பல, இப்பத்திரிகை வாயிலாக வெளிவநததும், ஷை சங்கததலைவர், முகாமைக்காரன் செய்வன யாவும் சரியென நிர்வாகசபை செய்துகொண்ட தீர்மானமொன்றை எமக்கனுப்பி, அது பத்திரிகைவாயிலாக வெளியிடப்பட்டதும் வாசகநேயர்கள் அறிந்திருப்பார்கள். குறித்த தீர்மானத்தைக் கண்டபின்னுவது நமதுகடிதர் அடங்கினுரில்லை. அவர் மீண்டும்மீண்டும் பலகுறைகளை யெடுத்துக்காட்டிக் கடிதங்களை ஒன்றன்பின்னென்றுக வரைந்துகொண் டிருக்கிறா. அரசியல் விஷயங்களிலோ அன்றிப் பொது ஸ்தாபனங்களிலோ உள்ளகுறைகளை வெளியிட்டு அவற்றை நீக்குவதற்கான முறைகளைக் கையாளச்செய்யவேண்டியது பொதுசனங்களின் கடமை யென்பதை எவரும் மறுக்கமாட்டார்.

ஆனுல், இவைகளை யெல்லாம் பார்த்தும—கேட்டும், இக்குறைகள் நேர்ந்தமைக்குக் காரணம் இதுவென அறிந்து அவற்றை உரியகாலத்தில்—ஏற்ற முறையில் — நீக்க முயலவதே கௌரவமுள்ள பொது ஸ்தாபனங்களின் நிர்வாகமுறைக்கு ஏற்றதாகும்.

நாமறிந்தவரையில் இவைகளையிட்டுக் குறித்த நிர்வாகசபையார் எவ்வித விசாரணையுஞ் செய்ததாகத்தெரியவில்லை. அப்படியிருந்தும் "தீர்மானம்" நிறைவேற்றியிருப்பது "நிர்வாகமுறை" யின்பாற்பட்டதாகாதென்றேகூறவேண்டியிருக்கிறது. நித்திரையி லிருப்பவர்களை எழுப்பிவிடலாம். நித்திரைபோன்றுபாசாங்குசெய்பவர்களை எழுப்பிவிட யாராலும்முடியாது. ஆகவே, கடிதர் இனியாவது நீண்ட கடிதங்களை எழுதிப் பத்திரிகையின் இடத்தை வீணுக்காதிருப்பாராக.

## அம்பேத்காரும் மதமாற்றமும்

வட இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட—அதாவது ஹரிஜன வகுப்பினரின் தலைவராகும் Dr. B. R. அம்பேத்கார் என்பவர் இதுவரையும் இந்துசமயியாகவிருந்து இப்போது இந்துக்களின் கொடுமையைத் தாங்கவியலாதென்றும், ஹரிஜனங்கள் இந்துக்களாக இருக்கும்வரையும் சமத்துவம் பெறுவது கூடாதகாரியமெனவும் முடிவுசெய்து வேறுமதத்தைத் தாம் நாடப்போவதாகவும் அறிவித்துள்ளார். இவர்மாத்திரமன்றி ஹரிஜன மகாநாட்டில் சமூகமாயிருந்த 10000 பேரும் ஏகமனதாய் ஆமோதித்துத் தாமும் அவ்வாறுசெய்வதே முறையென அபிப்பிராயப்பட்டனர்.

இவ்விஷயம் இந்தியாவெங்கணும் பெருந்திகிலை யுண்டுபண்ணிவிட்டது. ஒருவரிருவர் தமது மனச்சாட்சிக்குச் சரியென வறிந்ததைச் செய்தக்கால், அதற்கு மாறுகநிற்பாரெவருமில்லை. ஆனுல் ஒருசமயத்தில் பிறந்து நெடுங்காலமாக அதில்வளர்ந்து விருத்தியெய்தியபின் உலக சுகத்தை மெய்யெனக் கருதின், அதை நாம் எப்படி அங்கீகரிப்பது? சிற்சிலவிடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் மிகக் கேவலமாக நடத்தப்படுகின்றனரென்பது உண்மையே. அதற்காக இந்தப் பேய்த்தனமான விஷயத்தைச் செய்ய முற்படுவதை யார்தான்மெச்சுவார்? ஒருவர் தமது அபிப்பிராயத்தை மாற்றலாம்; உடையை மாற்றலாம்; சமயத்தை மாற்றுவதாயின் அது எவ்வளவு ஆலோசனையுடன் செய்யப்படவேண்டியது. சமயமாவது கடவுளுக்கும் ஆன்மாவுக்குமிடையிலுள்ளது. அதைச் சாமான்யமாக எண்ணுவதாயின் பின் செய்வது யாது?

இப்போது பண்டிதர் மாளவியா முதலிய இந்துக் கனவான்கள் அம்பேத்காருடன் இவ்விஷயமாகத் தாம் கலந்து பேச ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். இந்து மகாசபையுடன் கலந்து ஆலோசியாது தாம் ஒன்றுஞ் செய்யவில்லையென அம்பேத்கார் உறுதி கூறியுள்ளார். தீண்டாமை நாளுக்குநாளாக ஒழிந்து வருவதை யார்தான் மறுப்பர்? மகாத்மா காந்தியடிகள் சென்ற பதினைந்துவருடமாக இவ்விஷயமாக எடுத்துக்கொண்ட அக்கறை இம்மட்டன்று. இவர்போன்றவர்களின் அரிய வேலைகள்' அம்பேத்கார் தீர்மானம் அனுட்டானத்தில் வரின், பெரும் பங்கமடையுமே.

ஹரிஜனங்கள், இந்துசமயத்தில் தான் தீண்டாச்சாதியினர். மற்றைய சமயங்களில் புகுந்துவிடின் சமத்துவத்தைப் பெறுகின்றனரென அம்பேத்கார் எண்ணுவாராயின் அது சிறிதும் பொருந்தாது. தாழ்த்தப்பட்டவர்கள் எச்சமயத்திற் புகினும் தாழ்த்தப்பட்டவரே. இந்துசமயத்திலிருந்தே தமது ஈடேற்றத்துக்கு உழைத்துச் சமத்துவத்தை யடையினன்றி ஒருபோதும் அவர்க்கு நன்மை வந்தெய்தாது. அம்பேத்கார் தாம் நினைத்ததை முடிப்பின், அவர் தாழ்த்தப்பட்டவரின் விருத்திக்குப் பெருந் தடைசெய்தவராவர். இதுவரையும் தாழ்த்தப்பட்டவரின் முன்னேற்றத்தை நாடிச் செய்த வேலைகளும் வீணுகும். இத்தொண்டில் ஈடுபட்டோரும் அதைரியமடைந்து சோர்வடைவர்.

# இற்றலி-அபிசீனிய மகா யுத்தம்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

4000 சிறுவர்களும் 2000 பெண்களும் இத்தாலியரால் கொல்லப்பட்டனராகப் புதினங்கள் வெளியிடப்படுகின்றன. இவ்விஷயம் சர்வதேசசங்கத்தால் அவசியம் நோக்கப்படவேண்டுமோம். இப்போது இத்தாலியர் சிறிதும் கஷ்டமின்றி மக்கலே நகருள் புகக்கூடுமெனச் சொல்லப்படுகிறது.

சமீபத்தில் 3000 இத்தாலிய போர் வீரர் நேப்பிள்ஸ் நகரிலிருந்து அபிசீனியாவுக்குப் புறப்பட்டனராம். மேலும் 1000 போர்வீரர் இதற்குமுன் சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

தெற்குப் போர்முனையிலுள்ள கோரஹாய் நகர்மீது இத்தாலியர் இடைவிடாது ஆகாயவிமானத்தால் குண்டுகள் சொரிந்தாராயினும் அபிசீனியர் அதைவிட்டு விலகவில்லையாம்.

வடக்குப் போர்முனையில் யுத்தம் சிறிது நிற்பாட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் தெருக்கள் புதிதாக அமைக்க வேண்டியிருப்பதே. டானக்கில் பிரதேசத்தில் தெற்கேயுள்ள ஒரு மகமதிய பிரதானி அபிசீனிய அரசரின் கட்டளைக்கு அமையாது விட்டனர். படையைத் திரட்டிக்கொண்டு யுத்தத்திற்குச் செல்லும்படி ஏற்பட்ட கட்டளையை இவர் ஏற்றூரில்லை. இப்போது இவரும் இவரது பரிவாரங்களும் இத்தாலியரைச் சார்ந்துள்ளாரெனக் கூறப்படுகிறது.

எவ்விததிலும் மக்கலே நகரை இத்தாலியர் பிடிக்காது பாதுகாக்கவேண்டுமென அபிசீனியர் பிடிவாதமாக நிற்கின்றனர். ராஸ்சேயம் என்பவரின் படையினர் இத்தாலியரை மிக உரமாக எதிர்த்துச் சண்டைசெய்கின்றூராம். இப்போது மூன்றுபடையினர் மூன்றிடங்களிலிருந்து மக்கலே நகரைநோக்கிச் செல்கின்றனர். மக்கலே நகரிலுள்ளார் தமது கைகளில் வெள்ளை வஸ்திரங்கள்கொண்டு வீசுவதை இத்தாலிய விமானங்கள் கண்டனவாகக் கூறப்படுகிறது. அதன் கருததுயாதெனில் மக்கலே நகரை இத்தாலியர் பிடிப்பது தமக்கும் விருப்பமென்பது மக்கலே நகரவாசிகள் கருத்தாம்.

மழை இடைவிடாது பெய்தமையால் எங்கும் வெள்ளப் பிரவாகங்களும் சகதிளும் காணப்படுகின்றன. முனனேறுவது இத்தாலியர்க்குக் கஷ்டமாகிறது.

இத்தாலியரிடம் சரண்புகுந்த ராஸ்குக்சாவின் குடும்பத்தவரும் அவர்கள் சுற்றத்தவரும் கொலைசெய்யப்பட்டனரென முன்வந்த புதினம்,நம்பக்கூடியதாயில்லையாம்.

அபிசீனிய அரசரைக் கொலைசெய்ய எத்தனித்தார்களென முன்வந்த புதினத்துக்கும் ஆதாரமில்லை.

மத்தித்தரைக்கடலில் பிறிட்டிஷார் அனேக யுத்தக் கப்பல்களைக் கொணர்ந்து சேர்த்தவிஷயமாக இன்னும் ஆட்சேபமிருந்துவருகிறது. இததாலியர்க்குச்சொந்தமான லிபியாவில் வைக்கப்பட்ட சேனையினெருபாகத்தை மறுபடியும் இத்தாலிக்குக் கொண்டுபோய்விட்டதாகவும் இனியாவது பிறிட்டிஷார் யுத்தக்கப்பல்களை அப்பாற்படுத்தலாமேயென இத்தாலியர் கேட்கின்றனர். ஆனுல் பிறிட்டிஷார் இதற்கு இணங்குகின்றூரில்லை. எகிப்திலுள்ள எகிப்திய பிறிட்டிஷ் படைகளிலும் லிபியவிலுள்ள இத்தாலிய படை மூன்றுமடங்கு அதிகமென பிறிட்டிஷார் கூறுகின்றனர்.

நவம்பர் 4.

எப்படியாயினும் விரைவில் போர்புரிந்து வெற்றிபெற வேண்டுமென்பதே இத்தாலியரின் நோக்கமாகும். வடக்குப் போர்முனையில் 2 லட்சம் போர்வீரர் யுத்தஞ் செய்கின்றனர். மேலும் புதிதாய் அமைக்கப்பட்ட தெருக்கள் மூலமாக 5000 மோட்டார் இரதங்கள் இரவும் பகலும் ஓடிச் செல்கின்றன. இதுவரையில் இத்தாலியர் 300 மைல் தூரமான தெருக்கள் அமைத்துள்ளார். 50000 கழுதைகளும் ஒட்டகங்களும் யுத்தத்தில் உபயோகிக்கப்படுகின்றன. மசோவாத் துறைமுகத்தினின்று 4000 தொன் நிறையுள்ள சாமான்கள் நாள்வீதம் போர்முனைக்கு அனுப்பப்படுகின்றன. போதிய ஆயத்தங்களுடன் இத்தாலியர் முன்னேறுகின்றனராகவும் எவ்விதத்திலும் மக்கலே நகரைக் கைப்பற்றுவாரெனவும் கூறப்படுகிறது.

போதிய உணவுப் பொருட்களைச் சேகரித்து வைத்தாற்றுன் யுத்தத்தை நீடிக்கவியலும். யுத்தம் நீடிக்கப்படினன்றி அபிசீனியர் வெற்றியடைவது கஷ்டம்.

கோரஹாய் நகர்மீது இத்தாலியர் இடைவிடாது குண்டுபோட்டமையால் 30-பெண்களும்15சிறுவர்களும்உயிர் துறந்தனர்

அடுத்துவரும் மழைகாலம் வரையும் யுத்தத்தை நடத்திச்சென்றூல் பின் அபிசீனியர் வெற்றி கொள்வது நிச்சயமெனச் சொல்லப்படுகிறது. வடக்குப்போர்முனையில் என்டிமாஸ் என்னுமிடத்தில் சுதேசிகளாகும் அபிசீனியர், கையில் சிலுவைகளுடன் வந்து இத்தாலிய படைத்தலைவரை வணங்கி உணவுப் பொருட்களும் கொடுத்தனராம். இவ்வாறு பலவிடங்களில் செய்யப்படுவது அதிகமாய்விட்டது.

வடக்கே மேற்கடையவிருக்கும் பிரதேசங்களிலுள்ள ஒருபிரதானி தனது பரிவாரங்களுடன் இத்தாலியரிடம் சரண்புகுந்தனராம்.

சல்றன் மகமத் யாஹியோ என்னும் இன்னெரு பிரதானியும் அவருடைய 25 000பேர்கொண்ட பரிவாரமும் அபிசீனிய அரசர் கட்டளையை மீறி இத்தாலியர் பக்கம் சேர்ந்து நிற்கின்றனர்.

நவம்பர் 3.

இத்தாலியர் இரு போர்முனையிலும் மிக உக்கிரமாகத் தாக்கிச்செல்கின்றனர். வடக்குப் போர்முனையில் சனற்றினி என்னும் சேனைத்தலைவரே பிரதானமாக நின்று யுத்தத்தை நடத்துகின்றனர். யுத்தமுனைக்கு இததாலியரால் 10000 தொன் நிறையுள்ள மருந்துகளும் குண்டுகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. 3500 மோட்டார் லொறிகள் சாமான்களை ஏற்றிச் செல்கின்றன. இத்தாலியர் அபிசீனியாவில் படும் கஷ்டங்கள் நான்குவகையாகும். அவையாவன: தாங்குதற்கரிய வெப்பம், கடததற்கரிய மலைநாடு, நீர்ப்பஞ்சத்தால் தாகம், பசி என்பன. இரவுகாலமோ தாங்குதற்கரிய குளிராயிருக்கிறது. 2 அங்குல நீளமுள்ள முட்களைக்கொண்ட பற்றைகள் போர்வீரர் செல்லுங்கால் காயத்தை உண்டுபண்ணுகின்றன.

நவம்பர் 2.

அபிசீனியர் தமக்குப் பணவுதவி செய்யும்படி சர்வதேசசங்கத்தைக் கேட்கின்றனர்.

இன்னும் சமாதானத்துக்கு இடமிருக்கின்றதென்பது பிரான்ஸிய மந்திரியாராகும் லவாலின் கருத்து. இத்தாலியருக்கும பிரான்ஸியருக்கும் நெருங்கிய நட்பு உண்டென்றும் எப்படியாயினும் சமாதானம் நாட்டப்படுதல் அவசியமென்றும் சொல்லியுள்ளார். ஏற்படும் சமாதானம் சர்வதேசசங்கத்தின் அங்கீகாரத்தைப் பெறினன்றி உபயோகமாகாதாம்.

அபிசீனிய அரசர் இத்தாலியரிடம் சரண்புகுந்து அவர்கள் பக்கமாக யுததஞ் செய்யும் தனது மருமகனுகும் ராச்குக்ஸாவின் தலையைக் கொண்டுவந்து கொடுப்பவர்க்கு 12000 தங்கப்பவுண் கொடுப்பதாக விளம்பரஞ் செய்திருக்கிறூர்.

நவம்பர் 1

இத்தாலியர் பீரங்கி யேற்றப்பட்ட மோட்டாருடனும், கவசந்தரிதத மோட்டார்களுடனும் டானக்கில் பிரதேசத்தில் தாக்க முறபட்டனர். இவ்வாறு சென்று அடிஸ்அபேபாவுக்குச் செல்லும் புகையிரதப்பாதையைக் கைப்பற்றலாமெனஎண்ணுகின்றனர்.

பிரான்ஸியருக்குச் சொந்தமான நாடாகும் சோமாலிலன்ட் எல்லைப்புறத்துக் கருகாமையிலிருந்து 15000 இத்தாலியதுருப்புக்கள் முன்னேறிச் செல்கின்றன.

தெற்குப் போர் முனையில் டோலோ நகரில் அபிஸீனியர் இத்தாலிய விமானமொன்றைச் சுட்டனர். இப்போர்முனையிற்றுனே 3500 அபிஸீனியர் கொல்லப்பட்டனராகக் கூறப்படுகிறது. வால்வால் பிரதேசத்தைச் சூழ்ந்து கோரயுத்தம் நடந்ததாம். அபிஸீனியர், இத்தாலியர்போரிற் சிறந்த ஆயுதபாணிகளாக விருந்தும் அதிக கெட்டித்தனத்தைக் காட்டினராம். மேலும் கோருஹேய் மாகாணத்திலுள்ள ஊர்களிலுள்ள கிணறுகட்கு அருகாமையில் சாக்குகளில் நஞ்சுகள் சேமித்து வைக்கப்பட்டிருக் கின்றனவாம். இத்தாலியர் அபிஸீனியரை முறித்துக்கொண்டு நுழையின் கிணற்றுக்குள் நஞ்சினைப் போட்டுவிட்டு ஓடுவாராம்.

மௌசாலியிலிருந்து அலகிரா என்னும் இடங்களிலிருக்கும் கிணறுகட்குள் அபிஸீனியர் உப்பிட்டுள்ளாரெனச் சொல்லப்படுகிறது. அபிஸீனியர் மக்கலேநகரை இழநதனராயினும் அதிகோர யுத்தத்தைச் செய்தபின்னரே அப்படிச்செய்வாராம்.

---

உயர்ந்த சாதியினரும் இச்சமயத்தில் இவ்விஷயத்தை நோக்கித் தமது கடமைகளையும் சரிவரச் செய்வது அவசியமாகும். உயர்ந்த சாதியினரின் பிடிவாதமும் வன்கண்மையுமே சிற்சிலவிடங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் சமயமாறுதலுக்குக் காரணங்களாகின்றன. விஷயங்களை நன்கு நோக்கிக் காலத்துக்கேற்ப நடந்து கொள்வதே விரும்பப்படுவது.

---

# சர்வதேச சங்கம் செய்யும் முயற்சிகள்.

பிறிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியாராகும் சேர் சாம்யேல்ஹோர் என்பவர் இத்தாலியரின் சர்வதேசசங்கப் பிரதிநிதியாகும் பறன் அலோஸியுடன் 45 நிமிஷமாகச் சமரசத்தை நாட்டும் விஷயமாக ஆலோசனைசெய்தார். அப்போது ஹோர் அவர்கள் பிறிட்டிஷார் கொள்கைகளை விபரமாக எடுத்துக்காட்டினர். பிறிட்டிஷார் சமாதானத்தை நாடிநிற்பினும் அவ்வாறு செய்யுங்கால் அபிசீனிய அரசரையும் சர்வதேச சங்கத்தையும் நாடியே தாம் யாதாவதுசெய்ய வியலுமென்பதையும் எடுத்து விளக்கினர்.

சர்வதேச சங்கத் தீர்மானங்களை எல்லாநாட்டினரும் இந்தமாதம் 18-ந் திகதி தொடக்கமாக அனுட்டானத்தில் கைக்கொள்ள ஆரம்பிப்பார்.

அவுஸ்திரேலியாவின் முதன்மந்திரியாராகும் மெஸ். L. A. லயன்ஸ் என்பவர் சர்வதேசசங்கத்தினரின் நடபடிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமையால்தமது பதவியினின்று விலகும்படி உத்தரவிடப்பட்டனர்.

மேலும் சர்வதேசசங்க நிர்வாக சபையினர் கூட்டத்தில் ஒரு புதிய பிரேரணை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இத்தாலிக்கும் அந்நாட்டிற்குச் சொந்தமான இடங்கட்கும், கரி, மண்ணெய், பெற்றோல், இரும்பு ஏற்றுமதி செய்யப்படாதென்பதே அப்பிரேரணையாகும். அப்படியாயின் மோட்டார்கள், ஆகாயக்கப்பல்கள், எண்ணெயில் ஓடும் கப்பல்கள் என்பனவற்றின் பிரயாணங்கள் நின்றுவிடவேண்டியதாய்விடும். இப்பிரேரணையினுல் நன்மை நன்கு கைகூடுவதற்குச் சர்வதேசசங்கத்தில் சேராத மற்றைய வல்லரசினரும் ஒத்துழைப்பது அவசியமாகின்றது. இதுவரையில் சர்வதேசசங்கத்தில் அங்கத்துவம்பெறும் 47 நாடுகள் இத்தாலிய பொருட்களைப் பகிஷ்காரம் செய்ய முன்வந்துள்ளன.

இத்தாலியில் பெற்றோலின்விலை பன்மடங்கு அதிகரித்துவிட்டதாம்.

சர்வதேச சங்க நடபடிக்கைகள் வல்லரசினரால் கையாளவாரம்பிக்கப்பட்டதும் எத்தனையோ புதுப் புது விஷயங்கள் தோற்றுகின்றன. இத்தாலியிலிருந்து பாரிஸ் நகர்க்குச் செல்லவிருந்த விளையாட்டுக் கோஷ்டியினரும்அங்குபோகாது தடுக்கப்பட்டனர்.

முன்னே இத்தாலிக்கு அனுப்பப்பட்டு வந்ததிலும் பார்க்க ஆறுமடங்கு மண்ணெய் இப்போது அமரிக்க ஐககிய நாட்டிலிருந்து இத்தாலிக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாம். இவ்வாறு செய்யாவிடின் தாம் நடுவு நிலைமை எப்படிக் கையாள்வதெனை இத்தாலியர் கேட்கின்றனர்.

சர்வதேச சங்கத்தைச் சேர்ந்த நாடுகள் நடபடிக்கைகளை எவ்வாறு கையாள்கின்றன வென்பதைக் கவனிப்பதற்கு ஒரு நிர்வாகசபையமைக்கப்பட்டிருக்கிறது. இத்தாலியிலிருந்து வரும் சில சாமான்கட்கு பகிஷ்காரம் ஏற்படவில்லை. அவையாவன புதினப் பத்திரிகைகள், புத்தகங்கள், படங்கள் ஆகும்.

இத்தாலிய அரசினர் இறைச்சிக் கடைக்காரருக்கு எத்தனையோ நிபந்தனைகள் ஏற்படுத்தியுள்ளார்.

அபிஸீனிய அரசர் அமரிக்கருக்கு ஓர் செய்தி அனுப்பியிருக்கின்றனர். அதன்படி மனித சமூகத்தின் நன்மையை அமரிக்கர்நாடினவராயின் சர்வதேச சங்கம்இத்தாலிக்கெதிராகக் கையாளும்நடபடிக்கைகளில்அமரிக்கரும் சேரவேண்டுமெனக் கேட்கப்படுகிறது.

சர்வதேச சங்கத்தை ஜேர்மனியர் விட்டு விலகினூராயினும் இப்போது அவர்களும் இத்தாலிக்கு மாறுகச் சில நடபடிக்கைகளைக் கையாள முன்வந்துள்ளார். இத்தாலியர்க்கு ஜேர்மனியிலிருந்து யுத்த தளபாடங்கள் அனுப்புவதில்லையென உறுதி கூறியுள்ளார். இதனுல் சர்வதேச உடன்படிக்கைகள் சிறிது பெலமடைகின்றது.

இப்போது இங்கிலாந்தில் தேசாளுமன்றத் தெரிவுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. அப்போது அபேட்சகர்கள் சர்வதேச சங்க விஷயமாகப் பிறிட்டிஷார் கைக்கொள்ளும் முறையைச் சிலர் கண்டிக்கின்றனர். இத்தாலியர்க்கு மாறுகப் போவதுபிறிட்டிஷார்க்கு விருப்பமில்லையெனவும் சிலர் கூறினர். இவ்வித ஆதாரமற்ற கதைகளை ஒருவரும் நம்பவேண்டாமென்றும் பிறிட்டிஷார் சர்வதேச சங்க விஷயத்தில் மிகவும் நேராகநின்று நடபடிக்கைகளைக் கையாள்வதாகவும் கூறினர்.

---

## நன்கொடை வரவு.

ஊரெழு,கிழக்குவாசியாகிய திரு அ. சி. க, குமரையா என்பவர், தனது புதிய கிருகத்திற் பிரவேசஞ் செய்தமையை முன்னிட்டு, ஈழகேசரிக்கு நன்கொடையாக அனுப்பிய ரூபா இரண்டு கிடைக்கப்பெற்றூம். குறித்த குமரையா அவர்கள் சகல செல்வங்களும் பெற்றுப் புதிய கிருகத்தில் நீடூழிவாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைப்பதாக.

---

## சுன்னுகம் சந்தையைப்பற்றிய அறிக்கை.

வடமாகாணச் சந்தைப் பொறுப்பாட்சிச் சங்கத்தலைவர் பழுதுபடக்கூடிய தின்பண்டங்கள் என்பன எவைகளென்பதைக் குறித்து சுன்னுகம் திரு. த. வல்லிபுரத்துக்கு விடையாக எழுதியிருக்கும் கடிதம்:-

### Perishable Articles.

With reference to your letter dated 5-11-35, you are informed that by perishable articles it is meant viz: hoppers, boiled jams, betel, grams and oats, fish, vegetable and such other similar species brought to sale by poor vendors at the place set apart by the Committee.

**C. P. de Silva**
*for Chairman, D.R.C., Jaffna.*

திரு. த. வல்லிபுரம் சுன்னுகம்.
யாழ்ப்பாணம் 6-நவம்பர் 1935.

### பழுதுபடக்கூடிய சாமான்கள்.

5-11-35 ஐக் கொண்ட உமது கடிதத்துக்கு விடையாக அறிவிப்பது யாதெனில், பழுதுபடக்கூடிய சாமான்கள் என்பன: அப்பம், அவித்தகிழங்கு, வெற்றிலை, நிலக்கடலை, மாக்கடலை, மீன், காய்கறி முதலிவையாகும். அவை; சங்கத்தாரால் குறிக்கப்பட்ட இடத்தில் வைத்து விற்பதற்காக ஏழை வியாபாரிகளால் கொண்டு வரப்படும் சாமான்கள்.

சீ. பீ. டீ. சில்வா.
மாகாணரோட்டு
நிர்வாகசபைத்தலைவருக்காக.

# இந்தியச் செய்திகள்

## லாகூர் சச்சரவு

சமீபத்தில்இடிக்கப்பட்ட பள்ளிவாசல் விஷயமாக லாகூரில் ஆரம்பித்த கிளர்ச்சி இன்னும் முடிந்தபாடில்லை. இன்னும் வகுப்புப் பகிஷ்காரக் கிளர்ச்சி நடந்தே வருகின்றது. இந்துக்கள் மகமதியர்களின் கடைகளிலும், மகமதியர் இந்துக்களின் கடைகளிலும் பொருட்கள் வாங்கப்படாதென அவ்வவ் வகுப்பினர் தமக்குள் வேலைசெய்கின்றனர். பகிஷ்கார வேலையைப் பரகஸ்யமாகச்செய்த இரு இந்து வாலிபர்கள் கைதிகளாக்கப்பட்டனர். இன்னொரு தொழிற்கட்சித் தலைவரும் கைதியாயினராம். இருகட்சியினரும் சமரசத்துக்குவந்து கலகத்தை நிற்பாட்டின் தாம் இக் கலகவிஷயமாகச் சிறைவாசஞ்செய்வோரை விடுதலை செய்வதாகவும், பத்திரிகைகள்மீது பிணைக்கட்டும்படி விடுத்த உத்தரவை நிற்பாட்டுவதாகவும், பாஞ்சாலநாட்டரசினர் அறிவிக்கின்றனர். சமீபத்தில் மகமதியர் ஓர் ஸீக்கிய கனவானைக் கொலைசெய்ததைக் கண்டித்து மகமதிய தலைவர் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். இஸ்லாம் சமயத்திற்கு இவ்வித பலாத்காரங்கள் மாறென்றுங் கூறுகின்றனர்.

## காங்கிரஸ்சபையும் உத்தியோகபதவிகளும்

சட்டசபைகளில் அங்கத்துவம் வகிக்கும் காங்கிரஸ் பிரதிநிதிகள் வேண்டுமாயின் மந்திரிப்பதவிகள் முதலியவற்றை வகிக்கக் காங்கிரஸ் மகாசபை உத்தரவு கொடுக்கவேண்டுமென்ற விஷயம் சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் நிர்வாகசபையில் விவாதிக்கப்பட்டுப் பின் அவ்விஷயம் இப்போது ஆலோசிக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும், வருடாந்த மகாசபைக்கூட்டத்தில் வேண்டுமானால் ஆலோசிக்கப்படலாமெனவும் முடிவுசெய்யப்பட்டது. எல்லா மாகாணத்தினரும் இவ் விஷயமாக ஒற்றுமையான அபிப்பிராயம் உடையராயின் மகாத்மாகாந்தியடிகளும் உடன்படுவாரெனக்கூறப்படுகிறது. காங்கிரஸ் விரோதிகள் ஸ்தானங்களை வகிக்காது தடுப்பது காங்கிரஸ் கட்சியின் வேலையென வல்லபாய்படேல் கூறியதும் இவ்விஷயத்தை உறுதிப்படுத்துகிறது. மகாத்மாவின் அபிப்பிராயத்தை யொட்டியே படேலவர்களும் அபிப்பிராயம் வெளியிட்டிருப்பார்கள் என்பது நிச்சயமாம்.

## உருவப்படம் திறந்துவைக்கப்பட்டது

சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைச் சர்வகலாசாலை மண்டபத்தில் மிகக் கீர்த்திவாய்ந்த ஆங்கில பேச்சாளரும் அரசியல்வாதியும், மேற்படி சர்வகலாசாலை அத்தியட்சரும் ஆகிய கௌரவ V. S. ஸ்ரீநிவாச சாஸ்திரியாரின் உருவப்படம் சென்றவாரம் சென்னைத் தேசாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது. அப்படம் பம்பாயில் வசிக்கும் ஓவியவிற்பன்னர் C. நாகேஸ்வரராவ் அவர்களால் சித்திரிக்கப்பட்டதாகும். தேசாதிபதி படத்தைத் திறந்துவைக்குங்கால் சாஸ்திரியாரைக் குறித்துப் பலவாறாகப் புகழ்ந்தார். சாஸ்திரியாரின் ஆதிக்கத்தின் கீழிருந்து கல்விகற்கும் மாணாக்கர் மிக உயர்ந்த நிலையையடைவாரென்றும் மாணவரை வழிகாட்ட சாஸ்திரியாரிலும் சிறந்தவர் இந்தியாவில் கிடையாரெனவும் கூறினர். கல்வியிலேயே தமது தொண்டினை ஆரம்பித்த சாஸ்திரியார் சீவியகாலத்தின் பிற்பகுதியிலும் அதனை நாடி நிற்பதைப்பார்க்கத் தமக்கு ஆநந்தம் உண்டாகின்றதெனவும் தேசாதிபதி கூறினர்.

## காங்கிரஸ் தலைவர் சுற்றுப்பிரயாணம்

காங்கிரஸ் தலைவராகும் பாபு இராசேந்திர பிரசாத் அவர்களும் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் சபைத் தலைவராகும் ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அவர்களும் தமிழ்நாட்டின் பற்பல மாகாணங்கட்கும் கிராமங்களுக்கும் விஜயம்செய்து வருகின்றனர். காங்கிரஸ் தலைவர் காங்கிரஸ் சபையின் கொள்கைகளையும் அதன் பெருமைகளையும் யாவர்க்கும் எடுத்துரைத்துச் செல்கின்றனர். பெருந் திரளான சனங்கள் இவர்களை எங்கும் வரவேற்று நிற்கின்றனர். பண முடிப்புகளும் கொடுக்கப்படுகின்றன. மதுரை, திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி முதலியவிடங்களில் நகர சங்கங்களும் மற்றும் அரசியற் சபைகளும் இவருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்தனவாம். இவர் இம்மாதம் 11உ சென்னைக்குத் திரும்புவார். அன்று காலை சென்னை காங்கிரஸ்சபையாரால் சேர்க்கப்பட்ட பணமுடிப்பு இவர்க்குக்கொடுக்கப்படும். இம்மாதம் 12உ தொடக்கம் தெலுங்குதேசத்தில் சுற்றுப்பிரயாணம்செய்வார். டிசம்பர்மீ முதற் திகதி கள்ளிக்கோட்டை சென்று அகில இந்திய சுதேசீய பொருட்சாலையைத் திறந்துவைப்பாராம்.

## அடுத்த காங்கிரஸ் தலைவர்

எப்படியாயினும் அடுத்த காங்கிரஸ் தலைவர் பதவி ஸ்ரீமான் C. இராசகோபாலாச்சாரியரைச் சேரவேண்டுமென்பது பலர் கருத்தாகின்றது. சமீபத்தில் தற்போதைய காங்கிரஸ் தலைவராகவிருக்கும் பாபு இராஜேந்திரப்பிரசாத் அவர்கள் கூறியதும் நோக்குந்தரத்து. காங்கிரஸ் வேலையில் இரவும் பகலும் ஈடுபட்டுழைத்துப் பெருமைபடைத்தவராகும் இராசகோபாலாச்சாரியார் இருக்கத் தாம் அவர் பதவியைக் களவாடிவிட்டதாக இராஜேந்திரப்பிரசாத் கூறுகின்றார். எப்படியாயினு மவரைத் தலைவராக்க வேண்டுமென்பது பலர் கருத்து. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் அவரிலும் விசேஷமான ஒருவரை இவ்வுயர்ந்த பதவிக்குத் தெரிந்து கொள்ளுதல் கஷ்டமாகுமாம்.

## இடம்மாற்றப்படுமோ ?

அடுத்த காங்கிரஸ் மகாசபையின் வருடாந்தக்கூட்டம் ஐக்கிய மாகாணத்திலுள்ள இலக்குமணபுரியில் கூட்டப்பட வேண்டுமென முன்னமே முடிவுசெய்யப்பட்டது. மேற்படி கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்றகாலத்தில் வரவேற்புச்சபையும் கூட்டப்பட்டது. இப்போது மேற்படி வரவேற்புச் சபையினர்க்கிடையில் இடைவிடாது கலகங்கள் ஏற்பட்டு வருகின்றன. வரவேற்புச்சபையின் காரியதரிசியாகும் முராரிலால் என்பவர் நீக்கப்பட்டு அஹமத்கிட்வாய் என்பவர் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவ்விஷயமாகவும் வரவேற்புச்சபை அங்கத்தவர்க்கிடையில் வேற்றுமை ஏற்பட்டுளது. எல்லா விஷயத்யையும் நோக்கி காங்கிரஸ்மகாசபைக் கூட்டத்தை அக்கிரா நகரில் நடத்தினால் நலமென ஒருவர் ஒரு பிரேரணை கொண்டுவந்துள்ளார். இவ் விஷயத்தை உற்றுநோக்கின் வெட்கத்துக்கிடமாகிறது. அற்ப விஷயத்தையிட்டுப் பெரும் மாறுதல் ஏற்படுவதா ?

## படு கொலை.

லாகூரில் ஒரு மடத்தில் வசித்த ஒரு மகமதியனை யாரோ கொன்றுவிட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. உடம்பில் கத்தியடையாளங்கள் இருந்ததாகவும் இரத்தம் வாருகப்பெருகியிருந்ததாகவும் சொல்லப்படுகிறது. இம்மகமதியனுடன் ஒருவர் கூட வசித்ததாகவும் அவன் இப்போது மறைந்தோடி விட்டதாகவும் சொல்லப்படுகிறது.

## அனுமதி கொடுக்கப்பட்டது

இப்போது வியன்னா நகரில் தேகாரோக்கியத்தின் பொருட்டு வசிக்கும் சுபாஷ்சந்திரவஸு அவர்களை பிரிட்டிஷ் அரசினர் லண்டன் நகர்க்குச்செல்ல இதுவரையும் உத்தரவு கொடுத்திலர். பன்முறை உத்தரவைநாடி வஸு அவர்கள் மனுச்செய்தும் சித்தி எய்தினாரில்லை. இப்போது பிரிட்டிஷ் அரசினர் நல்லுணர்ச்சி வரப்பெற்று இங்கிலாந்துக்குப்போக இவருக்கு உத்தரவளித்துள்ளார். இதுவரையும் அரசினர் யாதுகாரணம்பற்றி வழங்காதிருந்தனரோ அறியோம்.

## இந்திய நண்பரின் மரணம்

சமஸ்கிருத பாஷையில் மிகப் பாண்டித்தியம் வாய்ந்தவரும் இந்திய விஷயமாக அநேக நூல்கள் இயற்றியவருமாகிய பிரான்சிய நாட்டவராகும் ஆசாரியர் சில்வன் லெவியென்பவர் சென்றவாரம் (31-10-35) வியாழக்கிழமை இறந்துவிட்டனரெனக் கேட்டுத் துயரடைந்தோம். இவர் பாரிஸ்நகரிலுள்ள சர்வகலாசாலையில் சமயபோதகாசிரியராயிருந்தார். 5 வருடங்களாக இந்தியாவில் கவியரசர் தாகூரின் விஸ்வபாரதியென்னும் சர்வகலாசாலையில் கல்விகற்பித்துவந்தவர். இந்தியாவிலிருக்குங்கால் அநேக விஷயங்களைச் சமஸ்கிருத வித்வான்களிடம் கற்றுக்கொண்டனர். இவர் இந்தியாவிலன்றி இரங்கூன், யப்பான், சைகோன், சீனா, கோரியா என்னும் இடங்களிலும் பாஷை சமயம் என்னும் விஷயங்களைப் பலகாலமிருந்து கற்றவர்.

## பெருங்கொடை

சென்னையில் மிகப் பிரபல ஆங்கில வைத்தியராகவிருந்து காலஞ்சென்ற டக்டர் இரங்காச்சாரியின் ஞாபகத்தை நிலைநாட்டும்பொருட்டு அவர் மனைவியாராகும் கமலாதேவி ஒருலட்சம்ரூபாவரை தருமத்திற்செலவிட உத்தேசித்து அதற்கு வேண்டிய அனுகரணங்களையும் ஏற்படுத்துகின்றனர். அத்தொகையில் 50,000 ரூபாவிலிருந்து வரும் வட்டிப்பணத்திலிருந்து சென்னை வைத்தியக்கல்லூரியில் 5 மாணவர் இலவசமாகப்படிக்கவேண்டுமாம். இதைவிடக் கல்வியின்பொருட்டும் வேறு தரும ஸ்தாபனங்களின் வளர்ச்சியை நாடியும் 50,000 ரூபா விடப்பட்டிருக்கிறது.

## பழைய மந்திரிக்குச் சிறைவாசம்

லாகூர் வாசியும் பாரிய வியாபாரத்தலைவரும் தனவந்தரும், இற்றைக்குப் பத்துவருடங்கட்கு முன் பாஞ்சாலநாட்டரசாங்கத்தில் மந்திரியாக விருந்தவருமாகிய லாலாஹாக்கிஷேஷன் பால் என்பவர் பாஞ்சாலநாட்டு உயர்தரநீதிமன்றத்தினர் விடுத்த கட்டளையைஅவமதித்து நீதிமன்றத்திற் சமுகமளியாததற்காக முதல் நீதிபதி அவரை விசாரணை செய்தனர். இவர் கோட்டினை அவமதித்தாரென நீதிபதி அபிப்பிராயப்பட்டு இவர்க்கு ஒருமாதச் சிறைத்தண்டனை விதித்தனர். நீதிமன்றத்தைத் தாம் அவமதிக்கவில்லை, வேறு காரணம் பற்றிச் சமுகமளிக்கவியலாதாயிற்றெனப் பழையமந்திரியார் கூறியும் நீதிபதி ஏற்றுக்கொண்டாரில்லை. இத்தீர்ப்பு இந்தியா எங்கணும் பெருந்திகிலையுண்டுபண்ணிவிட்டது. லண்டனிலுள்ள உயர்தர நீதிமன்றத்துக்கு (Privy Council) இததீர்ப்புக்கெதிராக மனுச்செய்ய உத்தரவு தரும்படி கேட்டும் நீதிபதி மறுத்துவிட்டனர்.

## சென்னை நகரசபையின் தலைவர்.

சென்ற வாரம் புதிதாக ஒரு தலைவரைச் சென்னை நகரசபையினர் தெரிந்துள்ளார். அவர் பெயர் அப்துல்ஹமித்கான். இவர்காங்கிரஸ்வாதி. நகரசபைக்காங்கிரஸ் கட்சியின் தலைவர். இந்நகரசபையின் தலைமை ஓர் காங்கிரஸ்வாதிக்காயது காங்கிரஸ் மகாநாட்டிற்கு ஒருபெரிய வெற்றியேயாகும். மேலும இவரைத் தெரியுங் கால எல்லாக் கட்சியினரும் பேதமின்றி ஏகமனதாய் இவர்க்குத் தமது சம்மதத்தைக் கொடுத்தது இன்னொரு விசேஷகாரியமாகும்.

## ருஷியாவில் பொன்சுரங்கம்

சென்ற வருடத்தில் ருஷியாவில் அமரிக்கரால் கிண்டி யெடுக்கப்படும் பொன்னிலும் பார்க்கக் கூட எடுக்கப்பட்டிருக்கின்றதாம், 1940 வருடத்தில் எட்டுக் கோடி தங்கப்பவும் விலை மதிப்புள்ள பொன் கிண்டியெடுக்கக் கூடியதான சுரங்கங்களை காகேஷன் மலையிலும, ஆக்றிக் சமுத்திரக் கரையோரத்திலும புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அறிகின்றேம்.


### விளம்பரம்

**வருகிறது! வருகிறது!!**

**திறம் சிமேந்து ! திறம் சிமேந்து !!**

**யாழ்ப்பாணம் ரேகில்**

எல்லோரும் வசதியாய்ப் பெற்றுக்கொள்ளக்கூடிய

**திறம்**

**சகூரு (பூ) மார்க் சிமேந்து**

நிகழும் நவம்பர் (கார்த்திகை) மீ 5-ம்உ

வருகிறதாக விளம்பரப்படுத்திய மேற்படி சிமேந்து

13-ந் திகதி புதன்கிழமைதான்

"SHUNSHOMARU" சன்ஷோமாறு என்ற கப்பலில்

**சகூரு (பூ) மார்க் சிமேந்து**

**யாழ்ப்பாணம் துறைமுகத்துக்கு வருகிறது**

**விலை சகாயமாய் பெற்றுக்கொள்ளலாம்**

சொற்ப தொகையே வருகிறபடியால் தேவைக்கு முந்திக்கொள்ளவும்

| | |
|---|---|
| **M. O. Othuman Lebbe & Sons**<br>Grand Bazaar<br>JAFFNA<br>1-11-35 | மு. உ. உதுமான்லெப்பை<br>அன் சன்ஸ்<br>பெரியகடைத்தெரு<br>யாழ்ப்பாணம் |

(43) 3-11-35

சிறுவர் பகுதி

# வினோலா இளவரசி கதை

சி. த.

முன்னொரு காலத்திலே, அயர்லாந்து தேசத்திலே, வினோலா என்னும் இளவரசி யொருத்தி யிருந்தாள். தாய்தகப்பனுக்கு அவள் ஒரேயொரு புதல்வியாக விருந்தாள். இவளுடைய தகப்பனுக்கு ஒருதம்பியிருந்தான். அவன் மிகவும் பொல்லாதவன். தனது தமையனைக் கொன்றுவிட்டுத் தானே அரசனாகவரவேண்டுமென்று அவன் விரும்பினான். சில துட்டருக்கு அவன் பணங்கொடுத்துத் தனது தமையனைக் கொல்வித்தான். பின்பு தானே யரசனானான்.

அவன் வினோலாவை ஒரு தனியிடத்துக்கு அனுப்பினான். ஊமையும் செவிடுமான ஒரு கிழவியை யுதவியாக அனுப்பினான். வாரமொரு முறை ஒரு குள்ளன்மூலம் உணவுப்பொருள்களை யனுப்பினான். இக்குள்ளன் வினோலாவை மணக்க விரும்பினான். வினோலா அவனுக்கு நல்ல பணிகாரவகைகளைக் கொடுத்தாள். அவன் ஏறிவரும் குதிரைக்குத் தானியமுங் கொடுத்தாள்.

வினோலா விடுதலையடையுமாறு தான் உதவி செய்யவேண்டுமென்று குள்ளன் தீர்மானித்தான். ஒருநாள் குள்ளன் குதிரைமீது ஏறிவரும்போது பின்னாலே யாரோ கூப்பிட்டார்கள். குள்ளன் திரும்பிப் பார்த்தான். பொன் உடுப்பு அணிந்திருந்த ஒரு மனிதன் தன்முன் நிற்பதைக் கண்டான்" நான் உன்னுடன் பேச விரும்புகிறேன். கீழே யிறங்கு, "என்றான் அந்த மனிதன். குள்ளன் தான் ஊமை யென்று சமிக்கைகாட்டினான். "என்னோடு வந்தாற் பேசப் பண்ணுவேன்" என்று அந்தமனிதன் சொன்னான்.

பின்பு அந்த மனிதன் தனது கையிலிருந்த கோலினால் மலைமீது அடித்தான். உடனே ஒரு கதவு திறக்கப்பட்டது. இருவரும உள்ளேசென்றார்கள். அங்கே குள்ளன் ஒரு அலங்கார மண்டபத்தைக் கண்டான். தான் தேவதைகளுக் கரசனென்றும் அவ்வரண்மனை தன்னுடையதே என்றும் அம்மனிதன் கூறினான். பின்பு பேசப் பண்ணும் மந்திரக்கோலை ஒருவேலையாளைக்கொண் டெடுப்பித்து அதைக் குள்ளன் மீது சுமத்தினான். உடனே குள்ளன் பேசவாரம்பித்தான்.

"நீ யார் சொல்லு" என்று தேவதை யரசன் குள்ளனைக்கேட்டான். பின்பு குள்ளனுக்குப் பலவகையான தீன்வகைகள் கொடுக்கப்பட்டன. குள்ளன் வயிறார உண்டான். பின்பு குள்ளன், "எனக்கு என்னைப்பற்றி யதிகந் தெரியாது. வாரமொருமுறை அந்தத் தனிவீட்டிலிருக்கும் இளவரசிக்குத் தானியம் கொண்டுபோய்க் கொடுப்பேன" என்று விடைகூறினான். "அந்த இளவரசியை விடுதலையடையச்செய்வதில் நீ உதவிசெய்வாயா?" என்று தேவதைகளரசன் குள்ளனைக்கேட்டான். குள்ளன் அதற்குச் சம்மதித்தான். "அந்த இளவரசியின் பெயர் வினோலா. அவள் தனது கொடிய சிறியதந்தையால் அங்கே வைக்கப்பட்டிருக்கிறாள். நீயும் ஒரு மந்திரவாதியாலே குள்ளனாகச் சபிக்கப்பட்டிருக்கிறாய். அந்தச் சாபத்தை நிவிர்த்தி செய்வதற்கு ஒரு பொன் ஈட்டியும் வெள்ளிக் கேடயமும் தேவை. அவை ஒரு தேவதையின் வாவியிலுள்ள ஒருதீவிலேயுள்ளன. நீ யங்குசென்று அவற்றைக் கொண்டுவரத்தக்க துணிவுடையயாயின் அம் மந்திரசக்தி பறந்துவிடும்" என்று தேவதையரசன் கூறினான். தான் உடனே போகவேண்டும் என்றான் குள்ளன். இருவருமாகக் குதிரைமீது ஏறிப்போனார்கள். இருவரும் வெகுதூரம் சென்றார்கள். கடைசியாக அந்தத் தீவிலிருக்கும் கடற்கரைக்கு வந்தார்கள். களைப்பு மிகுதியால் அவர்கள் படுத்துறங்கினார்கள்.

அதிகாலையில் எழுந்தார்கள். கடல் கொந்தளித்தெழுந்தது. அந்தத் தீவிலிருந்து அநேக பயங்கரமான கடற்குதிரைகள வந்தன. நீர்மட்டத்துக்குமேலே அவற்றின் தலைகளும் பிடர்மயிரும காணப்பட்டன. அவைகள் மிகவும் பயங்கரமாகக் கனைத்து உறுமின. கால்களாலே கடலையுழக்கி நுரையெழச்செய்தன. "எங்களுக்கு ஏதாவது வெகுமதி கொடுப்பாயா?" என்று அக்குதிரைகள் குள்ளனைக் கேட்டன. குள்ளன் தேவதையரசனைத் திரும்பிப்பார்த்தான். "உன் குதிரையைக் கொடு" என்றான் அவன். உடனே குதிரை கடலுக்குள் போடப்பட்டது.

பின்பு தேவதையரசன் ஒரு வீணையை யெடுத்து மிகவும் இனிமையாகப் பாடினான். கடற்குதிரைகள் யாவும் நித்திரையாய்விட்டன. "இப்போ நீ போகலாம்" என்றான் தேவதையரசன். குள்ளன் நீந்திச்சென்று அக்கரையை யடைந்தான். அங்கே தனது குதிரையைக்கண்டு சந்தோஷம் அடைந்தான். பொன் ஈட்டியையும் வெள்ளிக் கேடயத்தையும் குள்ளன் கண்டான். கிட்டப்போனதும் தனது சாயலை அந்த வெள்ளிக்கேடயத்திலே கண்டான். தான் ஒரு குள்ளனல்லவென்றும், ஓர் அழகிய இளவரசனேயென்றும் கண்டான்.

ஈட்டியையுங் கேடயத்தையுமெடுத்துக்கொண்டு குதிரைமீதேறி வினோலாவிருக்கும் தனிவீட்டுக்கு வந்தான். கீழேயிறங்கி ஈட்டியின் பிடியினால், கேடயத்தில் மும்முறை தட்டினான். உடனே அங்கேயொரு பூஞ்சோலை காணப்பட்டது. வினோலாவும் தன்னை விடுதலைசெய்த இளவரசனுக்குவந்தனஞ் செலுத்திப் புன்முறுவல் பூத்தாள்.

அவள் அவனுடன் அவனுடைய தகப்பனாரின் ஊருக்குப் போனாள். அவ்விடத்தே யவர்களிருவருக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. இளவரசி வினோலா இப்பொழுது "எரின்" என்னும் அத்தேசத்து இராணியாய் விட்டாள்.

# கலம்பகம்

மலேரியாக் காய்ச்சல் தடைவேலைத் திட்டங்கள் தற்போது முடிந்துவிட்டன. இதற்கென 25 லட்சம் ரூபா செலவாகுமாம்.

o o

சென்ற 3-ந் தேதி கொழும்பிலிருந்து சிலாபத்துக்குச் சென்ற மோட்டர் பஸ் ஒன்று கொச்சிக்கடைக்கருகே கானில் இறங்கியதால், அதிற் பிரயாணஞ் செய்த மூவர் மரணமடைந்தனராம். பலர் காயமடைந்தனராம்.

o o o

கராச்சி என்னுமிடத்திலுள்ள 60 வயதுடைய வங்காளி யொருவர் 13 மாத காலமாக மௌனமாக இருந்து வருகிறார். இவர் ஏதும் பேசவேண்டுமானால் எழுத்துமூலந் தெரிவிக்கிறார். இவர் இருபது வருடங்களுக்கு முன் 500 ரூபா சம்பளமுள்ள அரசாங்க உத்தியோகத்தை விட்டு விலகி உலகசஞ்சாரஞ் செய்துவருகிறாராம்.

o o

சென்ற செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அரசாங்க சபையில், பகல் 3 மணியளவில் நிறைவேற்றப்பட்ட கொழும்பு நகரசபைத் தேர்தல் சட்டம், உடனே தேசாதிபதியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டதாம்.

o o

தெகிவலையிலுள்ள மிருகக்காட்சிச்சாலையை அரசினர் வாங்கிப் பெரிய மிருகக்காட்சிச்சாலை யொன்றை அமைப்பது சம்பந்தமான அறிக்கையொன்று அரசாங்க சபையில் பிரேரிக்கப்படுமாம்.

o o o

ஆர். சின்னையா என்னும் ஒருவன் கண்டி தபாற்கந்தோரைச் சேர்ந்த திரு. நவரத்தினராசா என்பவருக்குச் சொந்தமான நகையொன்றைக் களவாடினானெனக் குற்றஞ்சாட்டப்பட்டு இரண்டு வருடக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெறறான். இவன் இதற்குமுன் 5 முறை தண்டனை பெற்றவனாம்.

o o o

கடுகாஸ் தோட்டம் தபாற்சேவகனான எச். பி. நிகதனனை என்பவர், 5 ரூபா போஸ்றல் ஓடர் ஒன்றைக் களவாடினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 30 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

அக்குருமுல்லையைச்சேர்ந்த பி. பெம்பிசிங்கோ என்பவன் சென்ற 31-ந் தேதி இரவு கம்பகாப் பொலிஸ்கோட்டுக் கட்டடத்திலிருந்தமை காரணமாக பொலிசரால் சிறைப்படுத்தப்பட் டிருக்கிறாராம்.

o o o

மருதானையைச்சேர்ந்த திரு. ஜே. எட்வேட் கொறியா என்பவர், தகுதியற்ற துவிச்சக்கர வண்டியிற் சென்றதுடன் கவலையீனமாகச் செலுத்தி மோட்டர்பஸ் ஒன்றைத் தடைசெய்தாரெனவுங் குற்றஞ்சாட்டப்பட்டு 35 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

முறட்டுவாவைச்சேர்ந்த டி. உவில்லியம் பீரிஸ் என்பவர் பம்பலப்பிட்டியில் இரண்டு கோழிகளைத் திருடினாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 6 மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பெற்றாராம்.

o o o

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து பல போட்டிப் பந்தாட்டங்களில் வெற்றிபெற்றுள்ள முஸ்லிம் கால்பந்துக் கோஷ்டியினர் சென்ற செவ்வாய்க்கிழமை இந்தியாவுக்குச் சென்றனராம்.

o o o

நகர சபையின் தலைவருக்கு வருடமொன்றுக்கு 1000 ரூபாவாக இருந்த மான்யத்தை 2000 ரூபாவாக்க வேண்டுமெனச் சென்ற 5-ந் திகதி நடைபெற்ற காலிநகர சபைக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

புத்தபிரான் முத்தியடைந்த புண்ணிய சேத்திரமாகிய ஸ்பெண்டியிலிருந்து கப்பலில் கொண்டுவரப்படும் போதி விருட்சக்கன்றைக் கேகாலைப் பகுதியிலுள்ள ஸாலகாலை என்னுமிடத்தில் பதித்துப் பயிர்செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o

கொழும்பு-கொம்பனித்தெரு சேட்ஸ் வீதியில் வசிக்கும் அப்துல்காதர், கோபாலன் ஆகிய இருவரும் இரவில் ரேடியோ கிராமபோன் கருவியை உபயோகித்துப் பக்கத்தில் வசிப்பவர்களின் நித்திரைக்குப் பங்கத்தை யுண்டாக்கினார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டனர். எதிரிகள் இரவு 11 மணிக்குமேல் அந்தக் கருவியை உபயோகிப்பதில்லை எனக் கூறியதால் எச்சரிக்கையின்பேரில் விடுதலைசெய்யப்பட்டனராம்.

o o

றங்கூன்-குதிரைப் பந்தயச் சங்கத்தார் இரண்டு இந்திய ஜாக்கிகளை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, ஆஸ்திரேலிய ஜாக்கிகளை நியமித்தது காரணமாக 100 ஜாக்கிகள் வேலை நிறுத்தஞ் செய்துள்ளாராம்.

o o

சிலாபத்தைச் சேர்ந்த முகுரத் தோட்டத்திலுள்ள டொன் பெர்னண்டோ என்னும் செம்படவன் ஒருவன் குடிவெறி காரணமாகத் தனது மனைவியை அடித்துக் கொன்றுவிட்டானும். இறந்தவளுடைய ஐந்து குழந்தைகளும் பொலிஸ் பாதுகாப்பிலிருக்கின்றனவாம்.

o o

தற்போதுள்ள இலங்கை அரசாங்க சபை வருகிற டிசம்பர் மாதம் 7-ந்திகதி குலைக்கப்படுமாம்.

o o

புத்தசமய ஸ்தாபனங்களுக்கு வரி விதிப்பதை ஆட்சேபித்து அரசாங்கசபைக்கு அனுப்பியுள்ள மனுப்பத்திரத்தில் புத்தகுருமார் 2,250 பேரும், ஏனைய புத்தமதத்தினர் 4,100 பேருமாக ஏறக்குறைய 6,350 பேர் வரையில் கையெழுத்திட்டிருக்கின்றனராம்.

o o

பம்பாயிலுள்ள பெண்மக்கள் விடுதியொன்றில் நுழைந்து திருட முயன்ற ஒருவனை, அங்கிருந்த பெண்கள் அந்த விடுதியின் ஸ்நான அறைக்குள் விட்டுப் பூட்டி அகப்படுத்தி விட்டனராம்.

o o o

கொழும்பு "டெயிலிநியூஸ்" பத்திரிகையின் அதிகாரிகளாற் சேகரிக்கப்பட்டு வரும் அபிசீனியச் சகாயநிதிக்குச் சென்ற 6-ந்திகதி வரை 8,399 ரூபா சேர்ந்திருக்கிறதாம்.

o o

இலங்கை அரசாங்கசபைப் பொதுத் தேர்தலில் மன்னார்ப்பகுதிக்கு திரு. R. ஸ்ரீ பத்மநாதன் அவர்கள் அபேட்சகராக வருவாராம்.


எல்லோரும்

நட்சேஷத்திர (ஸ்ட்டார்) அடையாளமுள்ள உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





(ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.)

பாத்திரங்களையே

வாங்குகிறார்கள்.

இதனை வாங்குவது:

இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனால்,

இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!

இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்

அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்,
122, மூன்றாம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

கதைப்பகுதி.

# மந்திரவாதியின் மகள்

"துகிலிகை."

[பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியைக் காலமாகக் கொண்டு இக்கதை எழுதப்பட்டது.]

(முற்றொடர்.)

"எக்காரியத்தையும் ஆறுதலாக யோசித்துச் செய்யவேண்டும் எனப் பெரியோர்கள் சொல்லிவைத்தது சும்மாவுக்கன்று. அவர்கள் வாக்கைக் கடவாது நடந்தமையால் அதனாலாய பயனை யான் இன்று துய்க்கின்றேன். சுந்தரமுதலியார் ஒரு பொன்னான பெரியார். அவரே அத்தீவின் தலையாய தனவந்தர். அவரொப்பார் இத்தீவிலிலர். அவருடைய இல்லம் மிகவும் அழகாகவும் தூய்மையாகவும் இருக்கின்றது. அவருடைய மனைவியார் ஒரு குணவதி. அவ் இல்லத்தின் சிறப்புக்கு அப்பெண்மணியே காரணம். இவைகளின் நடுவே அழகே உருவெடுத்தாற்போற் பொலியும் அவர்கள் புதல்வன் ஒரு தனிப்பெருமகன். அவனிடம் செல்வச் செருக்கென்பது கொஞ்சமுமில்லை. ஒருகணமும் வீட்டில் ஓய்ந்திரான். முக்கியமான அலுவல் காரணமாய் வெளியே புறப்பட்ட இளைஞன் என்னைக்கண்டதும் தனது செலவை நிறுத்திவிட்டு என்னோடேனிருந்து நன்கு அளவளாவினன். அவன் எனக்குச் செய்த மரியாதையை உன்ன என் உள்ளங் குளிர்கின்றது. அவன் மந்திரம் சோதிடம் மருத்துவம் என்பனவற்றில் மிகவும் தேர்ச்சிபெற்றிருக்கின்றான். மந்திரத்தில் அவனுக்கிருக்கும் திறனைப்பற்றிச் சுந்தரமுதலியாரே சிறப்பாகக் கூறினார். ஆடாத பேயினர் என மந்திரவாதிகளால் கைவிடப்பட்டோர் பலர் இவனிடம் வந்து பேய் நீங்கப்பெற்றனர். இஃதெல்லாம் அவரவர் பிறந்த நேரம் எனக்கூறி அவர் சிரித்த சிரிப்பை நினைக்க எனக்கே சிரிப்புண்டாகின்றது. பின்னர் என் எண்ணத்தைக் கூறினேன். அவர் அளப்பிலா ஆனந்தமுடையவரானார். என்மகனுக்கு நற்குடிப் பெண்ணொருத்தி கிடையாமை காரணமாக யானும் என்மனைவியும் மிகவும் துன்புற்றோம். இனிமேல் மானதீவுக்காவது செல்வது எனவே முடிவுசெய்திருந்தோம். மானதீவில் உங்களுடைய பெண்ணைப்பற்றியும் வேறு சில பெண்களைப்பற்றியும் பலர் புகழ்ந்து பேசக் கேட்டுள்ளோம். உண்மையைச் சொல்லிவிடுகின்றேன்: உங்கள் பெண்ணை நாங்கள் நினைக்கவில்லை. நீங்கள் உடன்படமாட்டீர்கள் என்றே கருதினோம் என அவர் கள்ளமின்றிக் கூறினார். யானும் என் பெண்ணுக்கேற்ற நாயகனைத் தேடுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்துவந்தேன். என் பெண்ணுக்கேற்ற நாயகனைப்பெற மானதீவு பாக்கியம் செய்யவில்லை என்பதை நன்கு ஆராய்ந்து தெளிந்துகொண்டே இவண் வந்தேன். உங்கள் புதல்வனின் புகழ் ஊரெங்கும் பரந்துளது என்றேன. மற்றைய அலுவல்களைப்பற்றிப் பேசிக்கொள்ள ஒருவாரங்கழித்து வருகின்றேன். மணத்தைப்பற்றி யாம பேசிக்கொள்ளவேறென்னவிருக்கின்றன. காமவல்லி கற்பகதருவினன்றி மற்றெதனிற்படரும் எனக் கூறினர்'' என்றார் குமாரசாமி முதலியார்.

முதலியாரின் வார்த்தைகளால் மனைவியார் மிகுந்த உவகை அடைந்தார். கதவின் புறத்தேநின்ற மருக்கொழுந்து வருந்தினாள். அவள், "இவர்கள் சொல்லும் இளைஞன் காளைபின் சென்றோனின் அடித்துகளுக்கும் ஈடாகான். இவர்கள் சொல் மயக்கமுடையது. என் தந்தை என் அறிவார்! இக்கால வயோதிபருக்கு இன்சொற்கொண்டு முகமன் மொழிந்தாற்போதும். மற்றொன்றையும் கவனிக்கமாட்டார்கள். எனது காதலன் காளைபின்சென்ற காளையே. இன்றேல் மற்றப்பிறப்பில்தான் எனக்கு மணமென்பது'' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டாள். தனது எண்ணத்தைத் தந்தையார் அறியின் வெகுண்டெழுவர் எனவும், தாயார் தந்தையின் எண்ணத்துக்கு மாறாக நில்லார் எனவும் கலங்கினாள். பின்னர் "என் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்ட இளவல் இனி எஞ்ஞான்று இவ்வழியே வருவாரோ! என்போல் அவரும் முழுதொத்த சிந்தையராயின் நாளையும் இவ்வழி வருவார். வருவரேல் யான் என் நாணம் முதலியவற்றை உதறிவிட்டு என் உள்ளக்கிடக்கையை வெளியாகக் கூறிவிடல்வேண்டும். அப்பால் அவர் எவ்விதத்திலாவது என்னைச் சேர்த்துக்கொள்வர்தானே'' என ஒரு முடிவுக்கு வந்தாள்.

மறுநாள் அவள் வழக்கம்போல் தன் அயலகப் பெண்களோடு செல்லாது காளைகள் வரும் நேரமறிந்து ஊருணிக்குச்சென்றாள். இளைஞனும் வந்தான். மருக்கொழுந்தைக் கண்டதும் அவன் அகமும் முகமும் மலர்ந்தன. என் உள்ளத்தைக் கவர்ந்த கன்னி என்மீது காதலுடையளாயின் பெண்கள் குழுவினின்றும் பிரிந்து என்னைக் காண நிற்பள். நிற்பாளேல் என் விருப்பத்தை அவளிடம்கூறிப் பதில்மொழி கேட்டல் வேண்டும் என்னும் முடிந்த எண்ணத்தினன் அவன். இருவரும் தத்தம்உட்கோளை எடுத்துரைக்க வேண்டியவரானார்கள்

"என் அன்பிற்குரிய பெண்ணே, காதலென்னும் கடலுள் வீழ்ந்து தவிக்கின்றேனுக்கோர் புணையாகாது இன்னும் பன்னாட் கடத்துவையோ?'' என்றான் அவ் இளைஞன்.

மருக்கொழுந்து பேச வாயெடுத்தாள். நாணம் தடுத்தது. "ஏ! நாணமே! உனக்குவந்த நட்டமென்ன? உன்சொற்கேட்டால் உய்யேன்'' என நாணத்தை அடியோடழித்து, "நேற்றுத் தாங்கள் காதற்கடலுள் கால் தவறியபோதே யான் புணையாய்விட்டேன். புணையைப் பயன்படுத்திக் கொள்வது உங்கள் வேலையன்றோ?'' என்றாள்.

அப்பால் பேசநேரமுமில்லை. உலகமுமிடங்கொடாது. ஒரு இளைஞனுடன் மங்கை ஒருத்தி பேசினாள் என்பது தெரிந்தால் அவள் தந்தை அவளைத் தண்டிப்பதுமன்றி அவனுக்கும் தண்டமிடாதுவிடான். இஃது அந்நூற்றாண்டின் பொதுவிதி.

(தொடரும்)


*Ginger Rogers* பேசுகிறாள்.




Radio Pictures.

ஜின்ஜர் ரோஜர்ஸ் என்ற ஸினிமா ஸ்டார் லக்ஸ் டோயிலெட் ஸோப்பைப் பற்றி சொல்லுவதை வாசித்தீர்கள். ஹோலிவுட்டிலும், இங்கிலாந்திலும் உள்ள 857 பிரபல ஸினிமா நடிகைகளில் 846 பேர்கள் இங்விதமாகவே கருதுகிறார்கள். மாசற்ற அழகைப் பாதுகாக்கும் குணம் லக்ஸ் டொயிலெட் ஸோப் ஒன்றிற்கே உண்டு என்பதைக் கண்டு அதையே அவர்கள் உபயோகிக்கிறார்கள். லக்ஸ்டொயிலெட்ஸோப்பின்வெண்மையான நுரை மிருதுவாய் சுத்திசெய்வதுடன் சருமத்தின் மேலிலும் மயிர்க்கண்களினிடையிலும் படிந்துள்ள எல்லா அழுக்குகளையும் அறவே நீக்கி தேகத்தை சோபிக்கச் செய்கிறது. ஸினிமா நடிகைகள் அனுஷ்டிக்கும் லேசான இவ்வழகுபடுத்தும் முறையை நீங்களும் அனுசரித்து ஆனந்தமடையலாம். லக்ஸ் டொயிலெட் ஸோப் ஒரு கட்டி இன்று வாங்கி அதனல் உங்கள் தேக சருமத்திற்கு ஏற்படும் விசேஷ குணத்தை நீங்களே மனதார உணருங்கள்!




# LUX TOILET SOAP

X-LTS 407-250A TAMIL LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

# நரகலோகச் செய்தி - - பழைய யாழ்ப்பாணத்தார் சங்கம்.

(சட்டம்பி எழுதுவது.)

எங்குசென்றாலும் எம்மூரவர்கள் ஏதோ மற்றவர்களிலும் பார்க்க முன்மாதிரியான விஷயங்களில் தலையிடுவது வழக்கமல்லவா? அப்படியே நரகலோகத்திலும், இங்கிருந்து அங்கு சென்ற நம்மூர் வாசிகள் சிலர் அவ்விடத்திலும் தஞ் சுயநலத்தின் பொருட்டு, மேற்சொல்லிய மகுடநாமத்துடன் ஒரு சங்கம் நிறுவ ஆலோசித்து, ஒரு விஞ்ஞாபனம் வெளியிட்டனர். இது அங்குள்ள மற்ற ஊர் நரகவாசிகளைப் பிரமிக்கச்செய்து விட்டது. அங்குள்ள சில சிங்களவர்வள் தம் நண்பர்களாகிய தமிழர் சிலரைக் கண்டு மனம்வருந்தி, "இங்குமா நமக்குச் சாதிச்சண்டை. இச்சங்கத்தில் எம்மையும் சேர்த்துக் கொள்ளக்கூடாதா? யாழ்ப்பாணத்தார் சங்கமென்றதை மாற்றி இலங்கையர் சங்கமென அழைக்கலாகாதா? இங்கே சட்டசபையில்லையே? பட்டப்போராட்டமில்லையே? எம்மிரு சாகியத்தாரையும் பேதப்படுத்தி ஒவ்வொருவரையும் தனித்தனி தட்டிக் கொடுத்துக் கிளப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் ஆங்கில அரசினருமிங்கில்லையே!" என்று கூறினர். அதைச் செவிமடுத்த தமிழ்ப்பிரபுக்கள் "அது சரிதான்; ஆனல் நாங்கள்தமிழர். நீங்கள் சிங்களவர். தமிழருக்காக வேண்டியது பார்த்துக்கொண்டுதான் பின் மற்றக்காரியம். ஏதோ நரகலோகம் இப்பொழுது எங்கள் சார்பாக இருக்கிறதுபோலத் தோன்றுகிறது. இச்சந்தர்ப்பத்தை இழந்துவிடக்கூடாது. எம்மை நசுக்க எண்ணியிருபபவர்களை இங்காகிலும் ஒருகை பார்க்கவேண்டுமென்று சிலர் கூறுகின்றனர்" என்று சொல்லிப் போய்விட்டனர்.

மேற்சொல்லிய கூட்டம் நடைபெறவேண்டிய நாளும் நேரமும் வந்துவிட்டது. குறிக்கப்பட்ட நேரத்திற்கு ஒரு மணித்தியாலத்தின்பின், எம்மைவிட்டுப் பிரிந்தாலும் எம் நாட்டின்பற்றுக் கொஞ்சமுமநீங்காத அபிமான சிந்தையுடைய நம் யாழ்ப்பாண வீரரெல்லாம் ஒருவரும் பாக்கியில்லாமல் அங்கு வந்து சேர்ந்தனர். அங்கு நிறுவப்போகும் சங்கத்திற்கு யார் யாரை உத்தியோகஸ்தர்களாக நியமிக்க வேண்டுமென்று முன்னமே யோசிக்கவேண்டி, கூட்டம் கூட்டமாக பலர் நின்று 'குசுகுசு' கூட்டங்கள் நடாத்தினர். இதற்காக அங்குள்ளவர்கள், முன்னே யாழ்ப்பாணத்தில் வகித்த உத்தியோகம, முதலியவற்றைப்பற்றி ஒரு மதிப்பு எடுக்கப்பட்டது. பெருந் தொகையினர் நியாயதுரந்தரர்களாக விருந்தனர். இது நல்லகாரியமல்லவா? சமூக விஷயங்களிலும், பொதுஜன ஊழியதததிலும், மற்றும் பொதுவாய்த் தேசத் தொண்டோடு சம்பந்தமுடைய எவ்விஷயத்திலும் சிறந்தவர்கள் இவர்கள் அல்லவா? இவர்கள் அங்கு பெருந்தொகையினராய் இருந்ததாலல்லவோ இப்படி ஒரு சங்கமும் தோற்றவேண்டி யிருந்தது. இவர்களில், இற்றைவரையில் எம்மூரை விட்டுப் பிரிந்தவரில் ஒருவரும் வேறிடம் செல்லவில்லை. முழுப்பேரும் அங்கேயே சென்றுவிட்டனர். அடுத்தபடியில் பல அரசாங்க உத்தியோகஸ்தர் காணப்பட்டனர். கீழ் உத்தியோகஸ்தர் மேல் உத்தியோகஸ்தர் எல்லாரும் அங்கிருந்தனர். மணியகாரன்மார், முதலியார்மார், விதானை உடையார்மார் பொலீஸ் உத்தியோகத்தர் இவர்களிலும் ஒருவரும் பாக்கியில்லை. சிவாலய தர்மகர்த்தாக்கள், பிராமண அர்ச்சகர்கள் இவர்களிலும் பாக்கியில்லை. வேறும் பலர் இருந்தனர். இப்படி நான் சொல்லும்பொழுது எனது நண்பராகிய பத்திராதிபர் ஒருவர் தம்முடைய ஆட்களிலும் யாராகிலும் அங்கு இருந்தார்களோவென வினவுகின்றார். இது என்ன மூடத்தனமான கேள்வி? அங்கு இருந்தார்களென்று சொல்லட்டுமா? நல்ல காரியம். நான் கை நோவநோவ எழுதிய இவ் விஷயம் குப்பைத் தொட்டியிடம் போய்விடுமே. இருக்கவில்லையென்று சொல்லட்டுமா? வாசிக்கிறவர்கள் என்னில் சந்தேகங்கள் கொள்ளார்களோ? இதற்குத்தப்ப ஒரு வழிதான் உண்டு. அதுதான் தற்போது சட்டசபை அபேட்சகர்கள் கையாளும் வழி. தான் தான் தப்பக் கதைத்துக் கொள்ளும் வழிதான். அல்லது மௌனம் சாதிப்பதுதான். பூநகரிக்கும், புங்குடுதீவிற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து பாலங்கள்போட யோசிக்கின்றனர். ஆனல் ஒன்றுதான் இப்பொழுது போடமுடியும். எது முக்கியமானதோ அதைத்தானே செய்யவேண்டும். அந்தக்கேள்வி இப்பொழுது கேட்கவேண்டியதில்லை. யாழ்ப்பாணப் பிரதிநிதி பூநகரிக்குப் போடவேண்டுமாம். தீவுப்பகுதிப் பிரதிநிதி புங்குடுதீவுப் பாலம் போடவேண்டுமாம். பருத்தித்துறைப் பிரதிநிதி வடகரைத் துறைமுகங்கள் திறக்கப்படல் வேண்டுமென்றார். எது பருத்தித்துறையா? காங்கேயன்துறையா? ஏன் பருத்தித்துறைதான். காங்கேயன்துறைப் பிரதிநிதியல்லவோ காங்கேயன்துறை வேண்டுமென்பார். தெரிவுகாலம் கிட்டிவிட்டது. குட்டிக்காரணங்களும் பல.

இது யாழ்ப்பாண விஷயம். எடுத்த விஷயத்தைப்பற்றிச் சொல்ல வேண்டுமே. கூட்டத்திற்கு வந்தவர்களில ஒருவர்மாத்திரம் மூலையொன்றில் இருந்துகொண்டு ஆழமாக யோசிக்கின்றார். விரட்டி விரட்டி விழிக்கிறார். இளைப்புற்ற தோற்றமுடையவராயும் வாடிய முகத்தவராயும் காணப்படுகிறார். அவரைச் சிலர் மாஷ்டர் என்கிறார். சிலர் உபாத்தியாயர் என்கிறார். சிலர் சட்டம்பியார் என்றும அழைக்கிறார்கள். இவரை ஒரு அப்புக்காத்து பார்த்து, ஏதோ இவர்மீதும் இவர் நண்பர்மீதும் அனுதாபங்கொள்பவர்போல சிலரை நோக்கி "உங்களுக்கும் நம் பழைய யாழ்ப்பாணத்தவர் சங்கத்தில் ஒரு பிரதிநிதிக்கு இடங்கொடுத்திருக்கிறோமென்றார். சட்டம்பியார் பெருமூச்சு" விட்டு நான்தான் எனக்குப் பிரதிநிதி, வேறொருவரு மிங்கில்லையா என்றார். அப்புக்காத்து "என்ன நீர் தனியாகவோ இருக்கிறீர்? மற்றவர்கள் வேறு நரக லோகத்திற்குச் சென்றுவிட்டார்களோ என்று திகைப்புடன் கேட்டார். "இல்லை இங்குதான் வரவேண்டியவர்கள். ஒருவரும வரவில்லை. நான் மாத்திரம் ஒரு மனேச்சருடைய மருமகனுனபடியாலும், 'இன்ஸ்பெக்டர்'களுடன் நட்புப்பூண்டு சட்டம்பி வேலையிலும் பார்க்க மற்ற வேலைகளைக் கூடச்செய்துகொண்டு திரிந்தேன். அதனுல் இங்குவந்தேன்" என்றார். இச்சம்பவம் எல்லார் செவியிலும் எட்டியது. முதலியார் ஒருவர் நரகலோக இடாப்பை எடுத்துப் பார்த்தார். சட்டம்பியில் ஒரு பேர்வழிதான உண்டு. சிலருக்குக கோபமவந்தது. சிலருக்குப் பெருமைவந்தது. "இதில் ஏதோ மர்மம் இருத்தல் வேண்டும். அல்லது சட்டமபியா இங்குவாராமல் இருப்பது?" என்றார் சிலர். எல்லோரும ஒருங்குகூடி மிகவும் ஊன்றி ஆலோசிததனர். அவர்களில் ஒரு புத்திசாலி மறறவர்களை நோக்க, "சட்டமபி இருந்தாலென்ன இராவிட்டாலென்ன? அதனுல் நமக்கென்ன? வந்த காரியததைப் பார்ப்போமென்றார்" பலர் இதை மறுத்துப் பேசி அங்கே ஏதோ பிழை நடந்திருக்க வேண்டுமென்றும் அதை நரகலோகாதிபதியிடம் கேட்டறியவேண்டுமென்றும் தீர்மானிதது, எல்லோருமொருஙகு கூடி நரகலோகாதிபதியை அடைந்து "ஐயனே, நம்மூரில பெருந தொகையினர் கல்வி கறபிக்கிறோமென்று ஊரவர்களையும அரசினரையும் ஏமாற்றிப் பணம் பறிக்கும் சட்டமபிமாராகும் அவர்கள் ஒருவரையும் இங்கு காணோமே. நாம் மாததிரம் பாவிகள என்று இவ்விடம் அனுப்பப்பட்டிருக்கிறோம் அவர்கள்எவ்விடஞ் சென்றார்களோ விளங்கவில்லையே" என்று முறையிட்டனர். இதைச் செவிமடுதத நரகலோகாதிபன புன்முறுவல் செய்து அவர்களை நோக்கி "நமமுடைய நரகலோகத்தில் இப்பொழுது அதிகம் வேலை கூடிக்கொண்டமையால், அற்ப குற்றஞ் செய்வோரையெல்லாம் இங்கு வரவிடாது அவ்வவ்விடத்திலேயே வைத்துத் தண்டிப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம. இச்சட்டம்பிமாரையெல்லாம பார்ப்பதற்காக எங்கள் நரகலோகப் பிரதிநிதிகளாக, சில மனேச்சர்களையும், சில பெற்றார், மாணக்கர் முதலியோரையும் நியமித்திருக்கிறோம. இப்பிரதிநிதிகள் கொஞ்சங் கொஞ்சமாகச் சட்டம்பி பாவத்தைப் பற்றிக்கொண்டு நம்மிடம் வந்து சேருகின்றனர். இதனுல் எமது வேலை சுலபமாகின்றது" என்று கூறி முடித்தார். (தொடரும்.)

# யார் யோக்கியர்?

அறிவுடையீர், நல்லாய்வுடையீர்!! உள்ளபடியில் ஒருவர் உள்ளக் கிடக்கையை ஓர்ந்தறிந்துகொள்வது, எவராலும் இயலாதவொன்று என்பது யாரும் ஒத்துக்கொள்ளக்கூடியவொன்றுயிருக்க: ஒருவரைப்பார்த்து நாம் இவர் யோக்கியர் என்று பாராட்டி மதிப்பதும், மற்றொருவரை அயோக்கியர் என இழித்து அவமதித்துச் சொல்வதும் எப்படி? யோக்கியரென மதிக்கப்படுவாருள், ஆசாரம், யதார்த்தம், பொறை, இரக்கம், ஈகை, ஈசுரபக்தி, பிறர்மனை விரும்பாமை, பிறர்பொருள் விரும்பாமை, நடுமொழிதணமை ஆதிய பெருங்குணங்கள் அணுத்துணையும் உண்மையில் இல்லாதவரா யிருந்துகொண்டு பூரணமாய் உள்ளவர்போலப் பெரும் பாசாங்கு காட்டி நடிக்கும் போலிமக்களே பலர்.

இங்ஙனமாகவும், உலகத்தனேகர் இவான்ஞரை உண்மைப்பிரபு, யோக்கியர், பெரியார் என மதிப்பதற்குக் காரணமென்ன? ஆராய்ந்தறியும் அறிவுக்குறைவு, அவர் செல்வம், உத்தியோகம், அதிகாரம், செல்வாக்கு ஆதியவைகளை யெண்ணிக் கொள்வதில் உண்டாகும் ஒருவித அச்சம், அவரிடம் காட்டும் பத்தியால, பாராட்டால் சுகமுண்டு என்னுமுள்ளல், அன்றி ஒருவரைக்கண்டு ஒருவர் கொள்ளும் (சனமருள்) மதிப்பு என்றே கூறுவேம். இதினுல் உலகத்தில் யோக்கியமுள்ளார் யாருமில்லை என்பது எம் சித்தாந்தமெனக் கோடற்க.

நாம் நங்கால நல்லாராய்ச்சியில், நந்தேயத்தில் நாமறிந்தமட்டில் யோக்கியரெனப் பாராட்டிப் பேசி மதிக்கப்பட்டுவரும் பன்னூற்றுக் கணக்கானவரை, கண்டும் கேட்டும் அவரோடு இனிது கொண்டாடியும் அறிந்திருக்கின்றேம். ஆனல் அவருள் மிக்க பல்லாரைச் சொல்லளவிலன்றிச், செயலளவிலும் யோக்கியர்தான் எனச் சொல்லவோ எம்மனம் நாணுகிறது. நாம் அறிந்த யோக்கியருள்ளும் அயோக்கியருள்ளும் அதிகம் வித்தியாசமிருப்பதாய்த் தெரியவில்லை. இரு பாலாரின் மதிப்பு வெளிப்படுதலில், மறைதலும், ஏறலும் தாழ்தலும் தங்கியிருப்பது யாங்ஙெனவோரில், அவை மேற்குறித்த உத்தியோகம் செல்வம் செல்வாக்கு சாமர்த்தியம் வெளிநடிப்பு என்பவையிலேயே தங்கியிருக்கிறதென்னலாம்.

உண்மையில் அயோக்கியன் என மதிக்கப்படுகிறவனும் நன்னிலைப் பேற்றுல் மகாயோக்கியன் என்று நன்கு மதிக்கப்படுகிறுன். சிறிது யோககியன் என மதிக்கப்படுகிறவனும் நிலைமையின் கேவலத்தால் மிக அயோக்கியன் என்று மிக அவமதிக்கப்படுகிறுன். இவை கண்கூடே காணப்படுமொன்றுமே. வெளிப்பகட்டு நடையினுல் உலகம் ஏய்ப்புற்று நேர்மைவழியைச் சாதிக்க அச்சுறுகின்றது.

உண்மையில் நீ யோக்கியதையுடையவரெனத் திடப்படுத்திக் கொண்டவர் ஒருவர் பலர் இருந்தால்; அவரை மர்மமாய்ப் பிடித்துள்ள அயோக்கியச் செயல்களில சிலவற்றை அச்சமற்ற சித்தமுள்ள ஆப்தர்களால் அறிந்து கொள்ளலாம். "கள்ளனை நமபினும் குள்ளனை நம்பாதே" என்பது பிராசீனர்மொழி. எத்தனைபேர், நான் பிரபு, நான்யோக்கியன், நான் துட்டநிக்கிரக சிட்டபரிபாலன துரேந்திரன், நான் பிறர்பொருள், பிறர்மனையவா, ஓரச்செயல், தற்பொழிவு அற்ற பெரியார் என நடித்து மதிகெட்ட துணிவற்ற ஏழைமக்களைத் தம் மாய அவதந்தர வலைக்குட்சிக்கி அவரால் தம் வயிற்றையும் வளர்த்து, பெரியார் என்ற பட்டத்தையும் மதிப்பையும் பெற்றுச் சீவிக்கின்றார். அவர்களின் உண்மைக்குணம் அவர்க்கும் பகவானுக்கும் அனுபவித்து அனுபவததிற் கண்டுணர்ந்தவர்க்குமே தெரியும். அவர்போல்வாருட் சிலரை நாமும் நன்கறிவோம். அவர் தங்குறை தமக்கு உண்மையில் தெரியாமற்தன்பா [illegible] ரே எம்முடன் [illegible] எம்மிடமு [illegible] ன்னமச் சொல்லுமென்பரால் நாம்காட்டுவதை அவர் மர்மத்தில் ஒத்துக் கொள்ளினும், அவரை மதிப்பவர் ஒத்துக் கொள்ளாரெனில், அவர்கள் போலிப் பிரபுத்துவம் கொழுந்துவிட்டெரியாதழிவதுதான் எப்படி?

தற்கால யோக்கியர் கதியைப்பற்றி நாம் கூறுவது: அகப்பட்டுக் கொண்டவன் அயோக்கியக் கள்ளன்; அறியப்படாது ஓடித் தப்பிககொண்டவன் மகா யோககியன் எனபபடல் போலதாமென்பதே.

ஓர் ஆப்தன்.

ஈழமண்டல திருத்தல
தேவார திருப்புகழ்
(குறிப்புரையுடன்)

விலை சதம் 5

தனலக்ஷ்மி புத்தகசாலை,
சுன்னுகம்

பொறுமை யுள்ளவனிடத்துச் செல்வமில்லாமைபோல, ஆசார மில்லாதவனிடத்து மேன்மை யில்லை.

# புத்த சமயம்.

(சென்ற 14-10-35ல், கொழும்பு, ஆகாயவசனி நிலையத்தில், கற்கிசை, திரு. வ. கந்தையா அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு)

புத்த சமயம் இப்போது எங் நாடுகளிலும் காணப்படுகின்றது. எங்கும் மிக ஆர்வமுடன் படிக்கப்படுகின்றது. அறிவாளிகள், புத்தசமயத்தில் நுண் பொருள்கள் பல உள்வென்று கோடிக்கணக்காய்ப் பணத்தைச் செலவு செய்து, ஆராய்ச்சி நிலையங்கள் இடந்தோறும் நிறுவி வன்மையுடன் உழைக்கின்றார்கள்.

புத்தசமயத்திற்கு ஒருவாறு இருப்பிடமென்று சொல்லக் கூடிய நமது இலங்கையிலும் வெளியிடப்படாத பெருந்தொகையான புத்தசமய நூல்களை, மூல பாஷையிலேயே இங்கிலாந்து முதலிய பிற விடங்களில் வெளியிட்டிருக்கிறார்கள். ருசியாவிலும் செர்பாட்ஸ்கி (Stcherpatsky) என்பவரின் தலைமையின் கீழும அரும் பெரும் ஆராய்ச்சி நூல்கள் வெளியாகி வருவதைப் பலரும் கண்டு வியக்கலாம்.

இவ்வண்ணம் புத்தசமயம் எந்நாட்டிலும் நிலைபெறுகின்றது. எம்மதத்தினரும் புத்தமதத்தில் காணும் உண்மையில் வயப்பட்டு மிகவும் மரியாதையுடன் தம் அறிவை வளர்த்து வருகின்றனர்.

இந்து சமயத்திலிருந்து ஒரு காலத்தில் கிளைத்ததாயினும, புத்தமதம இந்துமதமன்று. இந்து மதத்தில் நனகு தேர்ந்தோர், புத்தமதம் என்று பெயர் சொன்ன மாத்திரத்திலே தலைசாய்க்கின்றனர்.

இந்து மதத்தின் அடிமுடிகண்ட சமஸ்ககிருத நிபுணர் சிலரை நான் நேரில் அறிவேன. கடைசியில் அவர்கள் புத்தசமயத்தைத் தழுவுகின்றனர். பிராமண குலத்துதித்துக காசியிற் பிறந்த ஸ்ரீ இராமோதார், சங்கருத்தியாயன என்னும் சமஸ்கிருத மகாபண்டிதன நம் நாட்டில் இரண்டாண்டிருந்து திரிபிடகம் முழுமையும் கறறுத் திரிபிடக ஆசாரியரென்று பட்டம் பெற்று, காவியுடை தரித்துப் புத்தகுருவாய்ப் போனதை அறிவோம.

மெய்ந்நூலுணர்ச்சி மிக்குள்ள இராதாககிருட்டினனும் போனவாண்டில் இநநாடு வந்தபோது ஓரிய உணமையொன்றை மேடைமீது நின்று சொல்லிச சென்றார். இந்து சமயதண[illegible]யொராயய்ந்தோர், தாம க[illegible]ப்பற்று டை[illegible]

ஆகையால் அப்புத்தமதத்தின் தெள்ளத் தெளிந்த நீரை யாமும் அருந்தி மெய்யறிவு காண்பது இப்பிறப்பின் பெரும் பயனாகும்.

புததமதத்தின் கொளகைகளை யறியுமுன் அம்மதத்தை நிறுவிய மாமுனியின் வாழ்க்கை வரலாற்றை ஒரு சிறிது சொலலுவோம்.

யாம் காணும புததசமயம் கோதம புத்தரால நிறுவப்பட்டது. அவர்க்குமுன் பலப்பல புததர் இருநதனா எனபதற்குக் கதைகள் பலவாறுள. நூல்களும பலவேறு விதமாயக் கூறுகினறன.

கோதம புத்தர் கிறிஸ்துவிற்கு ஏறக்குறைய 563 ஆண்டுகளுக்கு முன பாரத நாட்டில பிறநதனா எனபது நூலாராய்ச்சி வல்லுநர் முடிபு.

அவரது தந்தை சுததோதன அரசன. தாயார் மாயாதேவி. புத்தர் பொது மானுடர்போற் பிறந்தவரல்லர். புத்தர் என்னும் பெயரின் பொருள் "ஞானமடைந்தவர்" என்பது. ஆகவே ஞானமடைவதன் முன் போதிசத்த என்றழைக்கப்பட்டனர். போதிசத்த என்பதன்பொருள் ஞானமடைதற்குரியர் என்பது. இதை சமக்கிருத நூலார் போதிசத்வ என்பர்.

துடித என்னும் அவரது உயர் குடி உடலினின்று இறங்கித் தம் அன்னையாகிய மாயாதேவியின் வயிற்றிற் புகுந்து உறைந்தார்.

இப்பொழுது நான்கு கடவுளர் மாயாதேவியின் முறபடுகினறனர். "மானுடரோ, மானுடரின் மேலான சாதியாரோ, அல்லது பிறவோ போதிசத்தரையாதல், அவரது அன்னை மாயாதேவியையாதல் தீண்டவிடாது காத்தற்கு வந்துளேம்" என்று சொல்லிக்கொண்டு எதிர்ப்படுகின்றனர்.

மாயாதேவி ஒரு புனிதவதி. மனம்வாக்குக் காயஙகளில் தூய்மையுடையவள். கற்புக்கரசி. மகவு தரித்தவுடன் புலன்கள் வழிமனம செலலுவதை நிறுத்திக் கொண்டாள். அவள் வாழ்வே ஓரவதாரபுருடனைப் பெற்று வளர்க்ககூடிய நல்வாழ்வாக விருந்தது.

போதிசத்தரும் தாம் புகுந்தவுடன் தம அனனையின் ஐம்புலனகளைப்பற்றி ஆடசிசெய்து வந்தார். அவள் வாழ்வே நோயறற வாழ்வானது. தன் உடலில் போதிசததரின் உறுப்புக்களையும் அவற்றின் அழகையும கண்ணாரக்கண்டாள்.

மாயாதேவி தன் மகனை மற்றைப் பெண்கள்போல் பெற்றெடுத்தவளல்லள். இருந்தும் கிடந்தும் போதிசத்தரைப் பெற்றவளல்லள. நின்ற நிலையில் பெற்றாள். போதிசத்தரும் நிலத்தில் விழுந்தனரல்லர். தேவர் நால்வர் சூழ்ந்து நின்று அவரை நிலததில் வீழவிடாது ஏந்தி, "தமக்கு ஓரிய மகன் பிறந்துள்ளான், தேவி இன்புறுக" என்று வாழ்ததிக் கொண்டு அம்மையாரின் முன் விடுகின்றனர்.

போதிசத்தர்-பிறப்புடன் வரும் அழுக்குகளின்றி வந்தவராம். அவரும அவரனனையும் குளிக்கின்றதற்கு ஆகாயத்தினின்று ஒரு குளிர்ந்த அருவியும் ஒரு வெப்ப அருவியும் வந்தது.

தேவர் மேலாடை பிடிக்கப் போதிசத்தரும் உறுதியுடன் நிலத்தில் நின்று வடக்குமுகமாய் ஏழடி வைத்து நடந்து பினவருமாறு மொழிநதனர். "நானே உலகத்திற்குத் தலைவன். நானே உலகில் நற்குணன். நானே உலகிற்கு முதல்வன். இதுவே எனது இறுதிப்பிறப்பு. இதன் பின் எனக்கு வாழவு இனறு." மாயாதேவியும் போதிசத்தரைப் பெற்ற வயிற்றில் பிறரைக் கொளபபடாதென்று போலும், ஏழாம்நாள் உயிர் துறந்தாள்.

பின தம் அரண்மனையில் வளர்ந்து மிகுந்த செல்வத்துடன் வாழ்ந்தார். பருவமானவுடன் தம் குடிபபிறப்பிற்கேற்ற எசோதரை யென்னும் கன்னியை மணந்து இனிது குடும்பம் நடாத்தி இராகுலன் என்னும் மகனைப் பெற்றெடுத்தார்கள்.

உலகத்தின் உண்மையையறிந்து குடும்பவாழ்வினின்று நீங்கித் துறவியானர். உலகைப் பார்க்கவேண்டுமென்ற மாத்திரத்திலே, பூமியே அவர் நின்ற நிலையில் நிற்கச் சுற்றிக் காட்டிற்று. தலை முடியை இருவிரல் நீளம் விட்டுத் தன்வாளால வெட்டியெறிந்தார். காவியுடைதரித்தார்.

மெய்யறிவைப் புகுத்தித் திரிந்தார். கயையிலுள்ள அரசமரத்தின் கீழிருந்து வாலறிவு பெற்றார். தம் மாணுக்கர் பலர் சூழக் குசிநாரா என்னும் இடத்தில் உடலினின்று உயிர் நீத்து நிருவாண நிலைபடைந்தார். இப்போது யாம்காணும் திருவாய்மொழி அவரது மாணுக்கரால் உலகுக்கு ஈயப்பட்டது.

இனிப் புத்தசமயத்தைப் பற்றி நமக்குக் கிடைத்த சிறு வேளையில் முதன்மையானவற்றை அறிவோம். புத்தமதப் பெண்களும் ஆண்களும் சிறுவரும் சிறுமியரும் கூட்டம் கூட்டமாய் நின்று ஒரே ஒலியுடன் "புத்தம், தம்மம், சங்கம், சரணம், கச்சாமி" (Buddham, Dhammam, Sangham, Saranam, Gacchami) என்று யாவருக்கும் கேட்கக் கூடியதாய்ச் சொல்லுவதைப் பலரும் கேட்டிருக்கலாம்.

இவ்வொலி பல விடங்களிலும் கேட்கப்படுகின்றது. கோயில்களிலும், கூட்டங்களிலும் சைவ சமயிகள் தேவார பாராயணம் பண்ணுவது போல் புத்தசமயிகளும் இம்மந்திரத்தை முதல் மொழுவார்கள்.

இதன் பொருளை அறிந்தோர் மிகச் சிலர். இம்மந்திரத்தின பொருள் என்னவெனின, "புத்த பெருமானையும் தர்மத்தையும், சங்கத்தையும் சரணம் அடைகின்றேன்" என்பது.

புத்த பெருமானையும், தர்மத்தையும் சங்கத்தையும் திரியிரத்தினம் என்பர். இம்மூன்று இரத்தினங்களிலும் சரண் புகுதல் பாக்கியங்களுள் பெரும் பாக்கியமாம். சரணமடைதல் என்றால் தன் பார்வையை ஒரு நிரைப்படுததும் தொழில் என்பர். அபிதமம ஞானிகள், அறிவாற் பிறந்த வலிமையால் மனதின் அழுக்கை நீக்குதல் என்பர்.

திரியிரத்தினங்களில் முதன்மையானது புத்தர். அவர் யாவையுமறிந்தவர். அவரை ஞானமூர்த்தி எனறுமழைபபர். பிறவிக் கடலில் உழலும் மானுடரைப் பிழைப்பிக்கும் பொருட்டு மெய்ம்மை நான்கையும் உணாநது புகட்டிய பெருமான் அவரே. ஆகையால இப்பிறவித் துன்பத்தினினறு நீங்கும் பொருட்டுப் புத்தபெருமானிடததில் சரணமடைகின்றேன் என்பது முதற் பொருள்.

தருமம் என்பது இரண்டாவது இரத்தினம். இச்சொல்—தூக்கிக் காப்பது என்னும் பொருளபடும் இரு அடிகளிலிருந்து பிறந்தது. எனனததிலிருந்து தூககுவது என்று வினவெழும். "அபய" என்று சொல்லப்படும நான்கு துன்ப நிலைகளிலிருந்து தூக்கிக் காககப்படுவது எனபர். இத்தருமம் பல புத்தர் வழிவந்தது என்று அறிவுடையோர் சொல்வர். தூக்கிக் காததற்குத் திரிபிடகம் என்னும் திருவாய் மொழியும் ஏதுக்களில் ஒன்று. "தஸதம்ம" தருமம பத்து. அவை நிர்வாணம், துறவுவழி எட்டு, திரிபிடகம் என்பன. இவ்வித தருமத்தில் சரணடைகிறேன் என்பது இரண்டாம் பொருள்.

சங்கம் என்பது மூன்றும் இரத்தினம். அதன் கருத்து கூட்டம். குணம் கொள்கை, உரிமை முதலியன கூட்டப்பட்டதே சங்கமாம்.

உண்மையில் சங்கம் தனித்ததன்று. துறவிகள் பலர் கூடிய சிறப்பு வாய்ந்த கூட்டம். இச் சங்கததை ஆரிய சபையென்றும் அழைப்பது வழக்கம்.

துறவு நிலையில் பிறப்பறுத்த மேலான துறவிகளே இச் சங்கத்திலிருந்தனர். நாம் ஒவ்வொரு நாளும் காணும் புத்த குருமாரும் இச்சங்கத்தில் இடம் வகுக்க உரிமை உடையரோ என்னில், உரிமையுடையர் என்ன வேண்டும். அவர்களே திரிபிடகத்தை நன்குணர்ந்து பிறருக்குக் கற்பிக்க வல்லார். பிறவிப் பெருந்துயரை நீக்கும் சங்கத்தின் சரண் புகுகிறேன் என்பது மூன்றும் பொருள்.

ஆகவே இத் திரியிரத்தினங்கள் நிருவாண வழி ஏற்றுவிக்கும் நூலேணி என்பதை மறக்கப்படாது. நாமே நம் முயற்சியால் ஏறவேண்டும். நூலேணி எவ்விதத்திலும் அரியதாயினும் உய்க்காது.

இத் திரியிரத்தினங்களைச் சரணமடைதலைக் கெடுப்பது மூன்று.

முதலாவது "அஞ்ஞானம்" திரியிரத்தினங்களின் பொருளை அறியாதிருத்தல். அவ்வறிவின்மையால் உண்டாகும் மயக்கம், திரியிரத்தினங்களைப் பயன் செய்யாதிருத்தல், அவற்றை மதியாதிருத்தல் முதலியன இப்பாற்பட்டன.

இரண்டாவது "சமுசயம்." அதாவது திரியிரத்தினங்களின் பயனைப் பற்றி ஐயப்படுதல். துக்கம், துயர், நோய், இழவு முதலியன நேரிடுகின்றன. இவை கர்மத்தின் பயனென்றறியாது யாதோ தாம் அறியாச் சக்தியொன்று கோபம காரணமாய் இவற்றையெல்லாம் வருவித்துக் கொண்டிருக்கிறதென்றெண்ணிப் பலியிட்டும சாந்தி செய்தும் பூசை செய்தும் வருகின்றனர்.

மூன்றாவது "மித்யா ஞானம்." அதாவது திரிபுணர்ச்சி. திரியிரத்தினங்களின் உண்மையை உணராது பிழையாய் எண்ணியிருத்தல். புத்த பெருமான் ஒரு கடவுள் அல்லது கடவுளின் ஓரவதாரம். அவர் விட்டுச் சென்ற உறுப்புக்களும் கடவுட்டன்மையன. தருமமும் கடவுள். இத்தருமத்தைப் பிறமதங்களும் விளககுகின்றன. பிறமதங்களும இந்த அறிவை அளிக்கின்றன. ஆன்மா ஒன்றுண்டு. சங்கம் மனிதனதன்று. என வருவனவெல்லாம் திரிபுணர்ச்சியின் பாற்பட்டனவாம்.

இனித் திரியிரத்தினத்திற்குப் பயன்படுமாறு உய்ப்பன நான்கு. இந்நான்கு வழிச் சென்றால் புத்தசமயத்தின் உண்மையையறிந்து ஒருவன பிறவிப் பெருங்கடலை எளிதில் நீந்தலாம்.

முதலாவது, புத்தபெருமான் அவர் வழிவந்த தருமம், சங்கம்ஆகிய திரியிரத்தினத்தை வணக்கத்துடன் ஒப்புக் கொள்ளுதல. தண்டனைக்கு அஞ்சி வணங்குதலும், பணம் பணடம் வேண்டி வணங்குதலும், ஆசிரியனென்று மதித்து சங்கத்திலுள்ளவரை வணங்குதலும், திரியிரத்தினத்திற்குரிய வணக்கத்தின்பாற் படாவென்றறிக.

இரண்டாவது, மிகவும் தாழ்மையுடன் திரியிரத்தினத்திற்கு இறைஞ்சி நிற்றல்.

மூன்றாவது, திரியிரததினத்திற்குத் தன் சிவிய முழுதையும முயற்சி முழுதையும் அர்ப்பணம செயது நிற்றல்.

நாலாவது, சம்சார பந்தத்தினின்று பிழைப்பதற்குத திரியிரததினமே தனி ஏதுவென்றும் அதைவிடவேறு ஏது இல்லையென்றும் கைக்கொள்வது.

புத்த சமயத்தின்படி, எல்லாவற்றிலும் மேலான பலன நிருவாண முத்தியையடைவது. இதை ஆரிய பலன் என்றும் கூறுவர்.

அந் நிருவாணமாகிய பேரின்பத்தையடையும் வண்ணம் இம் மானுடப் பிறவியெடுத்த மக்கள யாவரும் யாம் இதுவரை கூறியவற்றில் சரணம் புகுந்து, அப் பலாபலன்களை நன்குணர்ந்து, மனம் வாக்குக் காயங்களால் தூய்மை செய்து ஒழுகுவார்களாக.

ஒழுக்கத்தி னெல்கா ருரவோ ரிழுக்கத்தி, னேதம் படுபாக் கறிந்து.

# என்காலம் - - - போய்விட்டது. (5)

(முருகரம்மான் எழுதுவது.)

## தேவ தாசிகள்

பேதைப்பருவம் தொடக்கம் தங்கள் ஆயுள் உள்ளவரையும் கன்னிகாவிரதம் பூண்டு கற்பொழுக்கங் கெடாமல் கன்னிகாமாடங்களில் வசித்து துவாடையுடுத்து உருத்திராக்கந் தரித்து சிவதொண்டு புரிந்து திருவிழாக்காலங்களில் கடவுள் முன்னர் ஆடியும் பாடியும் வருபவர்களையே பண்டைக்காலத்தில் தேவதாசியரெனவும் தேவகணிகையரெனவும் கூறி வந்தனர். இவர்கள் தாய் தந்தையர் பெற்றெடுத்த தலைப்பெண்களேயாவர். மேலும் இவர்களைச் சிவாலயங்களில் உருத்திரர்க்கு அர்ப்பணஞ் செய்யப்படுவதனுல் இவர்களுக்கு உருத்திர கணிகையரெனப்பெயரும் வழங்கிவந்தது.

## தற்காலத் தேவதாசிகள்

தற்காலத் தேவதாசிகளோ கண்டோர் மனதைக் கவருங் கட்டழகிகள்தான். அவர்கள் வசிக்கும் இல்லங்களோ காமுகர்களுக்கு அடைக்கலஸ்தானங்கள். அவர்கள் ஒரு கட்டுப்பாட்டிற்கும் அடங்காதவர்கள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு வேலிகளையும் தாண்டியவர்கள். அவர்கள் உண்மையாக ஆடுகிறவர்களல்லர். விளக்குவெளிச்சத்தில் தங்கள் மோகினி வேஷத்தாலும் வஞ்சகப் பார்வையினுலும் அங்கே பார்க்கவரும் வாலிபர்களை ஆட்டிவைப்பவர்கள். இவர்களுடைய ஆர்ப்பாட்டங்கள் இவ்வளவுடன் நிற்கின்றனவா? இல்லை. அதை நினைக்கும்பொழுதே மூளை குளம்புகிறது. மயிர் சிலிர்க்கிறது. எத்தனை களவு, கல்லெறி, கொலை, சூதாட்டம் இவர்களால் நடக்கிறது என்பதை நினைத்தால் குடல் நடுக்கமெடுக்கிறது

## தாசி லோலர்கள்

இந்த நோய்க் குளங்கள் தூர்ந்துபோகாமலிருக்க எத்தனை சண்டியர்கள்? சீ! இவர்கள் என்ன ஆண்பிள்ளைகளா? நான் சிறுவனுயிருந்தபோது யாழ்ப்பாணத்தில் தேவடியாட்களை வைத்துக்கொண்டிருந்தவர்கள் இரண்டுபேரா அல்லது மூன்றுபேரா தெரியாது. அவர்களும் ஊரடங்கிய பின்னர் இரண்டாம்பேருக்குந் தெரியாமல் முக்காடிட்டுக்கொண்டு போவார்கள். பின்பும் இருட்டிருக்கும்போதே வீட்டிற்கு வந்துவிடுவார்கள். அக்காலத்தில் தேவடியாளை வைத்துக்கொண்டிருக்கிறதென்றுல் பெரிய அவமானமென எண்ணப்படும். இக்காலத்தில் தேவடியாளை வைத்துக்கொள்வதுதான் கௌரவமென்று வெகு பெருமையோடு பகற்காலத்தில் தமது சிநேகிதருடன் மோட்டாரிரதத்தில் போய்வருகிறுர்கள். அக்காலத்தில் வைத்துக்கொள்வாரில்லாமல் தேவடியாட்கள் திண்டாடினுர்கள். இக்காலத்தில் வைத்துக்கொள்வதற்குத் தேவடியாட்கள் போதாமல் புருஷர்கள் திண்டாடுகிறுர்கள்.

## மானங்கேட்ட மாமா

பெண் தன்னுடைய மானத்தை விற்றுப் பிறரை ஏமாற்றிச் சம்பாதிக்கும் பொருளில் உண்டு உடுத்துக்கொண்டு ஆண்சளென்று வெளியில் வருவதைவிட ஒரு முழக் கயிற்றை நம்பித் தற்கொலைசெய்துவிடுவது மேலல்லவா? இந்த மானங்கெட்டவர்களுக்கு மாமாவென்று பெயராம். அவர்கள் உண்ணும் ஒவ்வொருபிடி உணவும் ஒவ்வொரு பெண்ணின் மானத்தை விற்றது என்பதை நினைத்தால் அவர்கள் உடலில் ஓடுவது இரத்தமா அல்லது வெறுஞ் சிதலா என்பது எமக்கு விளங்கவில்லை.

# கேண முல்லை அரசினர் முஸ்லீம் தமிழ்ப் பாடசாலை மாணவர் தேர்ச்சிச்சங்க வருடாந்த விழா

ஷெ சங்கம் 1935 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 26-ந் வ சனிக்கிழமை பிற்பகல் $1\frac{1}{2}$ மணியளவில் ஷெ கலாசாலை மண்டபத்தில் ஷெ பாடசாலைத் தலைமைஆசிரியரின் அவைத் தலைமையின் கீழ் ஆரம்பமாயது.

அத்தருணம் இப்பாடசாலை மாணவர்களின் ஏழு ஊர்களிலுமுள்ள பெற்றோர்கள் ஒருமித்து வந்து சபையைச் சிறப்பித்தமையும், சங்க இன்றியமையாமையும், பெற்றோர் ஒத்துழைப்பும் என்ற விடயங்களை ஒட்டிய சில அமுத வாக்கியங்கள் தலைமைப் பேருரையாக வழங்கப்பட்டன.

அதன் பின் காரியதரிசியும் தனுதிகாரியும் தத்தமது அறிக்கைகளை வெளியிட்டனர். அப்பால் 2ம் வகுப்பு மாணவிகள் மூவரால் வந்தனப்பாக்கள் பாடப்பெற்றன.

அதன் பின்னர் ஷெ மாணவ சங்கத்தாரால் வெளியிடப்படும "ஞானோதயம்" என்னும் நாமந் தாங்கிய பத்திரிகை பத்திராதிபராம் திருவாளர் செ. கந்தையா உபாத்தியாயர் வேண்டு கோட்படி உதவிப் பத்திராதிபரால் வாசிக்கப்பட்டது. அதற்கப்பால் சுகாதார விஷயங்களையடக்கிய வோர் சம்பாஷணை நடைபெற்றது.

பின்பு "மாணவசங்கப்பயன்" என்ற விடயம் J. S. C. வகுப்பு மாணவர் ஒருவரால் மிகவுஞ் சுவை பயப்பனவாய வழக்குகளடங்கிய கிராமக் கோட்டு நடிப்பு வெகு ஆடம்பரமாக நடிக்கப்பெற்றது.

பின் ஷெ பாடசாலை உதவி ஆசிரியர் திருவாளர் செ. கந்தையா என்பவரால் "பெற்றோர் கடன்" என்ற விடயம், சுத்தத்தின் இன்றியமையாமை, அஃதின்மையால் மாணவர் அடையும் நோயின் கஷ்டங்கள் அவற்றை நீக்குமாறு போதிய உணவின்மை, இவைக்காகப் பெற்றோர் செய்ய வேண்டியன என்பவற்றையொட்டி வெகு சாதுரியமாகப் பேசப்பட்டது.

அதன்பின் குயில் போலும் குதலை மொழியினையுடைய மாணவிகள் மூவரால் ஷெ மாணவசங்க வாழ்த்துப் பாக்கள் யாவருங் கேட்டு ஆனந்திக்குமாறு பாடப்பெற்றன. பின்பு மேற்படி கிராமத்திலுள்ள தொழிலாளர்களைப் போன்று நடிப்பதாய போலி நடிப்புக்கள் அவையார் அனைவரும் ஆனந்த பரவசராய் நகைமுகங் காட்டிக் குதூகலமடையுமாறு சிறந்தமுறையில் நடிக்கப்பெற்றன.

திருவாளர் மகமூது மத்திட்சம் அவர்கள் இதுவரை அடைந்த குறைவையும் அதை நீக்க பாடசாலைப் படிப்பைப் பிள்ளைகளிடையே வளர்க்க வேண்டுமென்பதையும் மேற்படி பாடசாலையின் தற்போதைய உன்னத நிலையையும் ஒட்டிப் பல தெளிந்த வாக்கியங்களைச் சுருக்கமாய்க் கூறினர்.

பின்னர் மேற்படி சங்கக் காரியதரிசியவர்கள் நன்றி கூற பிற்பகல் 4 மணியளவில் சங்கம் இனிதாக நிறைவேறியது.

—கடித

# கஞ்சா வேட்டை

## வைத்தியராக மாறிய மதுபரிசோதகர்

(நமது நிருபர்.)

யாழ்ப்பாணம் 5

கிளிநொச்சியில் விவசாயிகளான கல்ந்தர், அலியார் என்னும் இரு முஸ்லீம்கள் மட்டக்களப்பிலிருந்து பெருந்தொகையான கஞ்சா வரவழைத்துக் களவாக வியாபாரஞ் செய்கின்றனர் என்பதையறிந்த யாழ்ப்பாணம் மதுபரிபாலனப்பகுதியார் அவர்களைச் சிறையாக்கி அபராதம் விதிப்பித்தமைபற்றிய சம்பவம் இப்போது வெளியாயிருக்கிறது.

குறித்த இரு முஸ்லீம்களது சோர வியாபாரத்தைக் கேள்வியுற்ற மதுப்பரிசோதகர்கள் N. T. இராமநாதன், N. C. இராஜேந்திரம், தனபாலசிங்கம் என்பவர்கள் மூன்று காவலருடன் சென்ற 2-ந் திகதி கிளிநொச்சிக்குச் சென்று அங்கு இராமநாதன் என்பவர் ஓர் ஆயுர்வேத வைத்தியரைப்போல மாறுவேடமணிந்து தம்முடன் வந்தவர்களை கொஞ்சத் தூரத்திற்கப்பால் விடுத்து தனது வேலையாள் என ஓர் சேவகனையும் அழைத்துச்சென்றுர். அங்கே ஓர் தரகர்மூலமாக, ஷெ இரு முஸ்லீம்களையும தமக்கு இருத்தல் 25 ரூபா விகிதமாகக் கஞ்சா விற்பதற்கு இணங்கச்செய்து விட்டனர். அந்த முஸ்லீம்கள் ஆயுர்வேத வைத்தியராக நின்ற இராமநாதனிடத்திற்கு 1 ருத்தல் கொண்ட இரண்டு பொட்டணங்களைக் கொண்டுவந்தனர். அவர் உடனே அவர்களைச் சிறையாக்கி, பதிவிருந்த மற்றும் பரிசோதகர்களுக்கும் அறிவித்தார். பின் யாவரும் சிறையாக்கிய முஸ்லீம்களுடன் பரித்தித்துறைக்கு வந்து அங்கே வழக்குத் தொடர்ந்ததில், சென்ற 4-ந் திகதி விசாரணை செய்யப்பட்டு எதிரிகளுக்கு 100 ரூபாவும், 150 ரூபாவும் அபராதம்விதிக்கப்பட்டது.

# பலாலியில் தாலிக்கொடிக் களவு

யாழ்ப்பாணம் 5

சென்ற புதன்கிழமை மல்லாகம் பொலிஸ்கோட்டில் பலாலி வாசிகளான (1) அன்னம்மா (2) திரேசா (3) ஞானப்பு என்னும் மூவர்களுடைய நகைகளை (அன்னம்மாவுடைய சறடு, மற்றவர்களுடைய தாலிக்கொடி) அபகரித்ததுமன்றி அன்னம்மாவுக்கு அடித்ததாகவும் மேற்படியூர் (1) P. மிக்கேல் (2) P. மனுவேல் (3) P. குரிசமுத்து (4) M. தொம்மை 5) L. மைக்கேல் (6) G. ஆசீர்வாதம் (7) S. சவானி ஆகியவர்களுக்கு விரோதமாகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு சாம் சபாபதியும் திரு செல்வத்துரையும் வழக்காளிகள் சார்பாகவும், திரு T. C. இராசரெத்தினமும் திரு H. R. அரியகுட்டியும் எதிரிகள் சார்பாகவும் விவாதித்தனர்.

தொம்மை வில்விந்தம் என்பவள் கூறிய சாட்சியாவது:-

"நான் அன்னம்மாவின் சகோதரி வெற்றிலைபாக்கு விற்பவள். குறித்த தினத்தன்று 4-மணியளவில் வெற்றிலைவிற்றுமுடிந்தமையால்வீட்டுக்குச் சென்று வெற்றிலை எடுத்துக்கொண்டு தெருவுக்குத் திரும்பும்போது தொம்மை முதலியவர்களைச் சந்தித்தேன். அப்போது தொம்மையன் "நேற்று ஆட்சிஎடுக்க வந்தவர்களெங்கே" என்று என்னைக்கேட்க "நடந்து முடிந்த காரியத்தில் ஏன் பேசுகிறுய் சும்மா போ" என்றேன். தொமமையன் வந்து என்னை மயிரில்பிடித்து அடித்தான் நான் அன்னம்மாவின் வளவுக்குள் ஓடினேன். அவ்வளவுக்குள்தான் அடிபிடி நடந்தது. நான் அறிவுமயங்கிவிட்டேன் பின் நடந்த தொன்றும் எனக்குத் தெரியாது.

சாட்சி குறுக்கு விசாரணைசெய்யப்பட்டதின்மேல் நீதிபதி வழக்கைத் தவணையிட்டார். ந-கி.

# பண்ணாகம் தெற்கு மாணவர் தேர்ச்சிச்சங்க நான்காவது ஆண்டுத் தீபாவளிப் பண்டிகை

நிகழும் யுவ ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி (26–10–35) சனிக்கிழமை ஷெ பண்டிகை அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

அன்று அதிகாலையில் விசவத்தனை முருகப்பெருமானுக்கு அபிடேகமும் தீப ஆராதனையும் நடைபெற்றது. அத்தருணம் அனேக அன்பர்கள் குழுமியிருந்தார்கள்.

பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது.

ஷெ மண்டபத்தில் மூளாய் பண்டிதர் பொன்னம்பலபிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் 3 மணியளவில் கூட்டம் ஆரம்பமானது. தலைவர் தமது முன்னுரையில் தீபாவளியைப் பற்றிக் கூறினர். பின் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் ப. சோமசுந்தரம் அவர்களால் "பண்டைக்கால மக்களும் தற்கால நிலைமையும்" என்னும் பொருள்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்தப்பட்டது. பின்பு அங்கு வந்தோர்க்குச் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

பின்னர் சங்கத்தாதாவாகிய (Patron) வை. செல்வத்துரை சுதேச வைத்தியர் அவர்களால் "வள்ளி திருமணம்" என்ற விஷயம் கதாப்பிரசங்கஞ் செய்யப்பட்டது.

ஈற்றில் சங்கத்தாதா அவர்கள் அவைத்தலைவர்க்கும் சொற்பொழிவாளர்க்கும் அவையார்க்கும் நன்றிகூற மாலை 8 மணியளவில் கூட்டம் நிறைவெய்தியது.

குறிப்பு:—

ஷெ சங்க உறுப்பாளர் இடைத் தேர்தலில் இணைக்காரியதரிசியாக அ. க. கந்தசு[illegible] அவர்களும் உபபத்திராதிபராக வே. சரவணமுத்து அவர்களும் நிர்வாக சபை அங்கத்தவராக அ. ஆறுமுகம் அவர்களும் இ. ஆறுமுகம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

—கடித


திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)
அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000
ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.
வேண்டிய இடங்களில்
கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.
இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
வ.சோமசுந்தரம், காரியாதிகாரி
(30) 18-11-34—11-35

Registered as a Newspaper. 16 Pages

# "The EELAKESARI"

**THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON**

LARGEST CIRCULATION GUARANTEED    BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 10th November 1935, Sunday. { No. 18


## லங்கா பினுன்ஸ் கம்பெனி

The
**Lanka Finance Company**
Stanley Street, Grand Bazaar
**JAFFNA**

காரியாலயம் :
ஸ்ரான்லி ஸ்றீட், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

பின்வரும் வகுப்புச்சீட்டுகள் இப்போது அமைக்கப்படுகின்றன :

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | வகு. | ரூ. 1000/- | ரூ. 40/- | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | ,, | ,, 500/- | ,, 20/- | ,, | 25 | ,, |
| C | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 25 | ,, |
| D | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| E | ,, | ,, 75/- | ,, 3/- | ,, | 25 | ,, |
| F | ,, | ,, 100/- | ,, 10/- | ,, | 10 | ,, |
| FNC | ,, | ,, 250/- | ,, 10/- | ,, | 12½ | ,, |
| WC | ,, | ,, 250/- | ,, 5/- | ,, | 50 | கிழமைக்கு |
| WD | ,, | ,, 125/- | ,, 5/- | ,, | 25 | ,, |
| தினசரி E1&2 | ,, | 100/- | ,, 1/- | ,, | | |

கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதி
வேண்டிய விபரங்கள் அறிந்துகொள்ளலாம்.

மனேஜர், லங்கா பினுன்ஸ் கம்பெனி,
ஸ்ரான்லி ஸ்றீற், யாழ்ப்பாணம்.

(33) 22-9 35.

அகில இலங்கை
## ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி

THE LANKA BENEFIT CO.,
GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.
கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னுகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் வகு. | 1000/- ரூபா | 40/- ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் ,, | 500/- ,, | 20/- ,, | ,, | 25 | ,, |
| C | 14-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் ,, | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் ,, | 250/- ,, | 10/- ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் ,, | 250/- ,, | 5/- ,, | ,, | 50 | கிழமைக்கு |
| WD | 4 | 125/- ,, | 5/- ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் ,, | 100/- ,, | 1/- ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.
மனேஜர், அகில இலங்கை ஆதாய ஏலச்சீட்டுக் கம்பனி
வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனுல் பிரபுக்கள் மாத்திர மல்ல ஏழைகளும் இதனுல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினேம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதாஞசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவானி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.


இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினுங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினுல் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P.O. Batticaloa, Ceylon

25) 21-1-34.

## பவுண்மார்க் ஓடுகள்



இப்பொழுதும்
விசேடபாக மதிப்புப்பெறும்
பவுண்மார்க் ஓடுகள்
இவைகளே.

எப்பொழுதும் நன்கு
மதிப்புடன் அழகு மிளிரும்
உன்னத மாளிகைகளில்
வேயப்பெற்றவை.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பேலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்
### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை / பறங்கித்தெரு } சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

## இந்திய வங்கி லிமிற்றெட்
## THE INDIAN BANK Ltd.

[Incorperated in British India in 1907]

டை வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற ஜூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

(9) 2-6-35.


இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி" யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஞு நவம்பர் மீ 10-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.